www.padippakam.com

நவம்பர்
2001
ரூ. 5

# செம்மலர்



## ஆப்கன் மீது யுத்தம் அவசியம்தானா?

கேட்கிறார்கள் மக்கள்

படிப்பகம்

www.padippakam.com

# வேண்டும் உலக சமாதானம் !



படிப்பகம்

www.padippakam.com



# நோபல்: பாரபட்சம்?

இந்த ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசினைப் பெற்ற எழுத்தாளர் வி.எஸ்.நைபால்.

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் மேற்கிந்திய தீவுகளுக்கு புலம் பெயர்ந்து சென்று இந்திய குடும்பத்தின் வம்சாவளியில் வந்தவர் தான் நைபால்.

உ.பி. மாநில அந்தணக் குடும்பத்தில் பிறந்து அந்த மரபுகளில் வளர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக மேற்கத்திய கலாச்சாரப் பண்புகளை தனதாக்கி இந்திய வேரையும், மேற்கத்திய கிளைகளையும் கொண்ட கலப்புக் கலாச்சார பண்பாட்டுச் சூழலில் வந்தவர் அவர்.

அவருடைய படைப்புகளில் சுற்றுலா கட்டுரைகள் அல்லது கதையம்சம் கொண்ட சுற்றுலா பற்றியவை மிக அதிகமாக பாவிக்கப்பட்ட நூலாகும்.

"திருவாளர் பீஸ்வாலுக்கு ஒரு வீடு" என்ற நூலில் பீஸ்வால் என்ற புலம் பெயர்ந்த இந்தியன் தன்னுடைய வம்ச வித்தைத் தேடி ஓய்ந்து போவதை அவனின் துயரத்தையும், ஆத்ம வேதனையையும் அற்புதமாகச் சித்தரித்துள்ளதாக விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

நைபாலின் படைப்புகளையும், மற்றவர்களின் படைப்புகளையும் ஒப்பு நோக்கில் ஆராய்ந்தவர் டாக்டர் ஜே.சாமுவேல் கிருபாகர். விருதுநகர் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர் கிருபாகரிடம் கேட்டபோது நைபால் பற்றி பல அரிய தகவல்களைத் தெரிந்துகொள்ள முடிந்தது.

அந்தணர் வகுப்பில் பிறந்திருந்த மூதாதையர்களைக் கொண்டவர். அதன் காரணமாகவே இந்தியா மூட நம்பிக்கையும், மிகவும் பின்தங்கியதாகவும் இருக்கும் என்று நினைத்திருந்தவர். பலமுறை இந்தியாவிற்கு வந்து போன பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக தன் கருத்துக்களை மாற்றிக்கொண்டு வருகிறார் என்று இந்தியாவில் உள்ள திறனாய்வாளர் கள் கருதுகிறார்கள் என்று பேராசிரியர் கிருபாகர் கூறினார்.

பிராமண, வைதிக கருத்துக்களை



படிப்பகம்

www.padippakam.com

எதிர்க்கும் தி.க. தலைவர் கி.வீரமணி பற்றி நைபாலுக்கு மிகுந்த மரியாதை உண்டு என்றும், வீரமணியின் ஆங்கிலத்தின் மீது ஆர்வம் கொண்டவர் என்றும் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்தவர் என்றும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

புலம் பெயர்ந்த தன்னுடைய மூதாதையர்கள் பற்றி ஆராய இந்தியா வந்தார். உ.பி. மாநிலம் தான்பூர் வீகம் என்று தெரிந்து கொண்டார். ஆனால் முழுமையாக கண்டுபிடிக்க முடியவில்லை.

புலம் பெயர்ந்தவர்கள் தங்களின் பூர்வ அடையாளங்களை தேடி அலைகிறார்கள். கிடைக்காமலும் போகலாம். அடையாளம் என்ன அடையாளம். எல்லாரும் எங்கு வசித்தாலும் மனிதர்கள்தானே என்ற அனுபவத்தை சித்தரிக்கும் நூல்தான் திருவாளர் பீஸ்வாலுக்கு ஒரு வீடு என்ற அவருடைய படைப்பாகும்.

அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கருத்துக்களைச் சொல்லும் போது கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தும் நைபால் அதன் காரணமாகவே மிகப்பெரிய சர்ச்சைகளுக்கு அடிக்கடி ஆளாவார்.

இந்தியர்கள் மூடர்கள் என்று கூறுவதிலிருந்து பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயருக்கு ஒரு கூலிககாரனின் புத்திதான் உண்டு என்று அறிவித்தது வரை சர்ச்சைக்குள்ளானவர்.

இஸ்லாத்தை கடுமையாக எதிர்ப்பது மட்டுமல்லாமல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதை ஆதரித்தவரும் இவர்தான்.

இவருக்கு இந்த ஆண்டு நோபல் பரிசு கொடுத்ததின் காரணமாக நோபல் கமிட்டியின் பாரபட்சமான போக்கும் விமர்சிக்கப்பட்டுள்ளது என்பதற்கு "இந்து" பத்திரிகையின் தலையங்கமே சான்றாக உள்ளது.

– *காஸ்யபன்*

## இராஜபரிபாலனம்...?!



கட்டியங்காரனின்
ராஜாதிராஜா...
ராஜமார்த்தாண்ட அறிவிப்போடு...
விலகிய திரையின்
வெளிச்சக் கவலைகளில்
இணைத்து போடப்பட்ட
விசிப்பலகைகளின் மீது...
கம்பீர மிடுக்குடன்
இராஜபரிபாலனம் செய்த
அரசன் கிரீடம் அவிழ்த்து
ஜிகினா மினுமினுக்கும்
ராஜ உடைகளைந்து...
சொந்த உடுப்புக்கு மாறியபோது
அவனது –
கசங்கிய அரைக்கை மேல் சட்டையில்...
தெரிந்தன
ஏழெட்டு உருட்டுத் தையல்கள்..?!

– *மேத்தாவாணன்*
*நெய்வேலி நகரியம்*



படிப்பகம்

www.padippakam.com

# ஆப்கன் மீது யுத்தம் அவசியம்தானா?

'அமெரிக்காவின் நியூயார்க், வாஷிங்டன் நகரங்கள் மீது நடந்த விமானத் தாக்குதல்களை அடுத்து பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம்' என்று கூறி ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடர்ந்து குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தி வருகிறது. ஒரு ஒசாமாவைப் பிடிக்க ஓராயிரம் அப்பாவிகள் பலியானாலும் கவலைப்படாத இந்த யுத்த நடவடிக்கை தொடர்பான சந்தேகங்களை, மனதில் எழும் கேள்விகளை மதுரையில் நாம் சந்தித்த சிலர் இங்கே இளமதியின் பதிலுக்காக முன்வைக்கின்றனர்.

ஆர்.சோமசுந்தர பாரதி *(கோவில் நிர்வாகி)*

நியூயார்க் - வாஷிங்டன் நகரங்கள் மீது தாக்குதல் தொடுத்தவன் பின்லேடன்தான் என்பதற்கு ஆதாரம் என்ன? அமெரிக்காவில் உள்ள உள்நாட்டு எதிரி யாராவது செய்திருக்கலாமே?



கேட்கிறார்கள் மக்கள்; பதிலளிக்கிறார் 'இளமதி'



படிப்பகம்

www.padippakam.com

பின்லேடன் என்பதற்குத் தங்களிடம் ஆதாரம் இருப்பதாக அமெரிக்க ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள். அந்த ஆதாரத்தைத் தங்களது எடுபிடிகளான பிரிட்டிஷ் பிரதமர், பாகிஸ்தான் ராணுவ சர்வாதிகாரி போன்றோரிடம் மட்டும் காட்டியிருக்கிறார்கள். விந்தை என்னவென்றால் ஆதாரத்தை, ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்களிடம் காட்டவில்லை. பின்லேடன் இருக்கிற நாட்டுக்காரர்களிடமல்லவா முதலில் காட்ட வேண்டும். ஆதாரத்தைக் கொடுத்து ஆப்கானிய மக்களை பின்லேடனுக்கு எதிராகத் திரட்டியிருக்கலாம் அல்லவா? அதைச் செய்யாததால் சந்தேகம் நீடிக்கிறது. இந்த ஆதாரம் குறித்து பிரிட்டிஷ் பத்திரிகையாகிய கார்டியன் இவ்வாறு எழுதியிருக்கிறது - "சட்ட பூர்வ நோக்கிலிருந்து பார்த்தால் இது கிட்டத்தட்ட லாயக்கற்றது." லண்டனிலிருந்து வெளிவருகிற 'டைம்ஸ்' பத்திரிகையும் இவ்வாறே எழுதியுள்ளது. (''அவுட்லுக்'', 22.10.01)




## பின்லேடனை ஒழித்தால் பயங்கரவாதம் ஒழிந்துவிடுமா?

பயங்கரவாதத்தை ஒழிக்க ஒத்துழைப் போர் என்று ஐ.நா.சபை தீர்மானம் போட்டுள்ளது. ஆனால், எது "பயங்கரவாதம்" என்பதில் உறுப்பு நாடுகளுக்கிடையே ஒருமைப்பாடு இல்லை. பாலஸ்தீன மக்களின் நியாயமான போராட்டத்தை இஸ்ரேல் பயங்கரவாதம் என்கிறது. இதை வேறு பல நாடுகள் ஒப்புக்கொள்ளவில்லை. அதேபோன்று சிறு குழுக்கள் செய்வதுதான் பயங்கரவாதமா? ஓர் அரசாங்கமே அந்த மாதிரி நடந்து கொண்டால்...? உதாரணமாக, இராக் மீது அமெரிக்கா குண்டு மழை மொழிந்ததே, இராக் ஜனாதிபதி சதாம் உசேன் மாளிகை மீதே குண்டு போட்டதே, லிபியா அதிபர் கடாபியின் அரண்மனை மீது ராக்கெட் வீசியதே, அதெல்லாம் என்ன காந்தியவாதமா? இப்போது ஆப்கானிஸ்தானத்தின் அப்பாவி மக்கள் மீது தினசரி குண்டுகளும். ஏவுகணைகளும் வீசுகிறார்களே. இதைவிடக் கொடூரமான பயங்கரவாதம் ஏதுமுண்டா? நியூ



படிப்பகம்

www.padippakam.com




யார்க்கின் உலக வர்த்தக மையக் கட்டிடத்தில் வேலை பார்த்த அப்பாவி ஊழியர்களைக் கொன்றது பயங்கரவாதம் என்றால், அவர்களிலும் அப்பாவியான ஆப்கன் ஏழை மக்களைக் கொல்வது படுமோசமான பயங்கரவாதம். பின்லேடனைப் பிடிப்பதில் இப்படி அப்பாவி உயிர்கள் பலியாவது தவிர்க்க முடியாதது என்று வாதம் செய்தால், இதே வாதத்தையே பயங்கரவாதிகளும் முன்வைக்கிறார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அதனால்தான் கிஞ்சித்தும் இரக்கமின்றி ஆந்த்ராக்ஸ் போன்ற கிருமிகளைப் பரப்புகிறார்கள். அதை எப்படி ஏற்க முடியாதோ அப்படியே இதையும் ஏற்கமுடியாது. பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண் அதிருப்தியிலும் விரக்தியிலுமிருக்கிறது. வலுத்தவன் அடித்துக் கொண்டேயிருக்கும்போது எளியவன் போகிற போக்கில் ஒரு தட்டு தட்டிவிடுகிறான். இதனால் அவனுக்குமேலும் துன்பமே வருகிறது என்றாலும் ஆத்திரத்தை அடக்கமாட்டாமல் முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறான்.

இதை ஒழிக்கும் ஒரே வழி விரக்தியின் மூல ஊற்றை அடைப்பது. பாலஸ்தீனம் போன்ற நியாயமான தேசிய இனப் பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காண்பது. இஸ்ரேல்போன்ற பயங்கரவாத அரசுகளை அடக்கி வைப்பது. இதைச் செய்யாமல் ஒரு பின்லேடனைப் பிடிப்பதால் மட்டும் பயங்கரவாதத்தை ஒரு நாளும் ஒழித்துவிட முடியாது. லேடன் வியாதியல்ல. வியாதியின் ஒரு அறிகுறி. ஒரு புற்றுக்கட்டியை மட்டும் அறுத்தெறிந்தால் இன்னொரு நாளில் இன்னொரு இடத்தில் அது தோன்றி விடும். நோய் முதல் நாடும் வைத்தியம் வேண்டும். அதைச் செய்யும் யோக்கியதை அமெரிக்க ஆட்சியாளர்களுக்குக் கிடையாது. அவர்களது கரங்களி




படிப்பகம்

லும் பயங்கரவாதம் எனும் நோய்க் கிருமி ஒட்டியிருக்கிறது.

www.padippakam.com

## யாருடன் போர், எதிரி யார் என்றே தெரியவில்லையே! நிழலுடன் யுத்தமா?

அமெரிக்க அரசு தனது நிழலுடன் யுத்தம் செய்கிறது என்பது இரண்டு நோக்குகளில் மிகச்சரியான வருணனை. பின்லேடனை உருவாக்கி விட்டதே அமெரிக்க ஏகாதிபத்திய அரசுதான். ஆப்கானிஸ்தானிலிருந்த நஜிபுல்லா அரசை வீழ்த்துவதற்காக அது அன்றைய சோவியத் நாட்டுடன் நல்லுறவோடு இருக்கிறது என்கிற காரணத்தாலேயே அதை வீழ்த்துவதற்காக - தயாரித்து அனுப்பப்பட்ட போர்வழிதான் பின்லேடன். அப்போது அவனை ஹீரோவாகச் சித்தரித்தன அமெரிக்கப் பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும், அந்தக் காரியம் முடிந்ததும் வரம் கொடுத்தவர் தலையிலேயே அரக்கன் கை வைப்பது போல அமெரிக்காவிற்கு எதிராகத் திரும்பிவிட்டான் பின்லேடன். இப்போது அமெரிக்கத் தொலைத்தொடர்பு சாதனங்களுக்கு அவன் "சர்வதேச பயங்கரவாதி!" தனக்கு எதிரி என்றால் உலகத்திற்கே எதிரியாகச் சித்தரித்துக் காட்டுவது ஆதிகாலத்திலிருந்தே நடைபெற்று வரும் ஒரு யுத்த தந்திரம். ஆக, தான் பெற்றுப்போட்டதுடன் தானே மோத வேண்டிய அவல நிலை அமெரிக்காவிற்கு. மற்றொரு நோக்கில் பார்த்தாலும் இது நிழல் யுத்தமே. மூன்று பயணிகள் விமானங்களை அமெரிக்காவிலேயே கடத்தியிருக்கிறார்கள் பயங்கரவாதிகள். அதிலிருந்த எரிபொருள் மட்டும் அவ்வளவு பெரிய சேதத்தை தந்திருக்குமா? அல்லது கடத்தியவர்கள் மேலும் வெடிப்பொருட்களை அதில் ஏற்றியிருப்பார்களா? என்கிற சந்தேகமும் உள்ளது. உள்நாட்டில் தக்க உதவியின்றி இந்த வேலைகளை அந்தப் பயங்கரவாதிகளால் செய்திருக்க முடியுமா? விமானங்கள் எப்படிக் கடத்தப்பட்டன? அதற்கு உதவி செய்தவர்கள் யார்? என்பது பற்றி மட்டும் வாய்திறக்க மறுக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி புஷ். தனது நிழலைக் கண்டு தானே பயப்படுகிறாரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ரவி, *(காண்ட்ராக்டர்)*

## அமெரிக்காவில் பின்லேடன் சொத்துக்கள் முடக்கம் என்றால் ஏற்கெனவே அவனுக்கும் அமெரிக்காவிற்கும் தொடர்பு இருந்ததாகத்தானே அர்த்தம்?

சபாஷ்! சரியான கேள்வி. பணக்காரக் குடும்பத்தில் பிறந்த பின்லேடனை மேலும் பணக்காரனாக்கியது அமெரிக்காவின் உளவு ஸ்தாபனமாகிய சிஐஏ. "சுதந்திரம்" என்ற பெயரில் பிறநாடுகளில் பயங்கரவாத

**'கலை தனிமனிதரிடம் தான் இருக்கிறது என்றாலும் மனிதக் கூட்டு ஒன்றுதான் சிருஷ்டித்தன்மையின் ஆற்றலைப் பெற்றிருக்கிறது'**

*- மாக்சிம் கார்க்கி*





படிப்பகம்

www.padippakam.com

வேலையில் ஈடுபட்டோருக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் நாடுதான் அமெரிக்கா. தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பது போல தன் மீதே பாய்ந்தவுடன் "சுதந்திரம்" அவர்களுக்கு மறந்து போச்சு. வேடிக்கை என்னவென்றால் பின்லேடனின் பேட்டியை வெளியிடக்கூடாது என்று அமெரிக்காவின் அனைத்து தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் உத்தரவு போடப்பட்டுள்ளது. கத்தார் நாட்டு அதிபருக்கு அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் காலின் பவுல் போன் போட்டுச் சொன்னார். என்ன தெரியுமா? - "உங்கள் நாட்டு டி.வி. நிறுவனமாகிய அல்சிசீராவை அடக்கி வையுங்கள்." ஆப்கானிஸ்தான் மக்கள் மீது அமெரிக்கா நடத்துகிற அட்டூழியங்களை உலகிற்குப் படம் பிடித்துக் காட்டுகிற ஒரே டிவி நிறுவனமாக அதுவே உள்ளது. நம்மூர் டிவிகளில்கூட அதன் படக்காட்சிகளைக் காணலாம். இப்படி உலகம் முழுவதும் தெரிகிறதே என்று ஒடுக்கச் சொல்லுகிறார் அமெரிக்க அமைச்சர். அந்த நாட்டு ஜனாதிபதியோ மறுபுறம் "சுதந்திரத்தைக் காப்பாற்றவே ஆப்கன் மீது யுத்தம்" என்று ஜம்பமாகப் பேசிவருகிறார். இவர்களது சுதந்திரம் இதரர்களின் சுதந்திரத்தை எப்போதும் தாங்கிக்கொண்டதில்லை.

அகல்யாணி, *(மாணவி)*

**தீவிரவாதச் செயல்களிலேயே இதுதான் (நியூயார்க் – வாஷிங்டன் மீதான தாக்குதல்) பெரிய சம்பவமா? இல்லையெனில் இதற்கு இத்தனை பெரிய நடவடிக்கை ஏன்?**



சிறிது பெரிது என்பதெல்லாம் வலுத்தவன் இளைத்தவனைப் பொருத்த விஷயமாக இன்று ஆகிவிட்டது. பாலஸ்தீனியர்கள் மீது பல்லாண்டுகளாகவே தினசரி கொலைவெறித் தாக்குதல் நடத்தி வருகிறது இஸ்ரேல். மாண்டவர்கள் எண்ணிக்கை கணக்கற்றது. ஆனாலும் இஸ்ரேலுக்கும், அமெரிக்காவிற்கும் இது சின்னஞ்சிறு விஷயம். இராக் நாட்டை அங்குலம் அங்குலமாகத் துளைத்தாலும், பல்லாயிரம் பேர் அதில் மாண்டாலும் அதன் சுயாதீபத்திய உரிமையைப் பறிக்கும் வகையில் அங்கு நுழைந்து ஒவ்வொரு கட்டடமாய் அமெரிக்கா சோதனை செய்தாலும் அமெரிக்காவைப் பொறுத்தவரை அது கடுகுத்தண்டி விஷயம். இராக்கின் எண்ணெய்க் கிணறுகள் பல மாதங்கள் பற்றியெரிந்து பல கோடி டாலர் மதிப்புள்ள சொத்து அழிந்தாலும் அமெரிக்காவிற்கு அது இத்தூண்டு விஷயம். நியூயார்க்கில் இரண்டு கட்டடங்கள் தகர்க்கப்பட்டால் அமெரிக்காவிற்கு அது உலக அழிவின் அறிகுறி. "பயங்கரவாதத்திற்கு எதிரான உலக யுத்தம்" என்று அவர்களாகவே அறிவித்துக்கொண்டார்கள். "நீங்கள் எங்கள் பக்கம் இருக்க வேண்டும். இல்லையெனில்



படிப்பகம்



www.padippakam.com

பயங்கரவாதிகள் பக்கம் இருப்பதாகவே கருதப்படுவீர்" என்று ஒவ்வொரு நாட்டையும் பார்த்து எச்சரிக்கை செய்கிறார் புஷ். நாடுகளுக்கு மூன்றாம் மார்க்கமே இல்லையாம். அனைத்து நாடுகளின் தலைவிதியை இந்த ஒரு மனிதர் தீர்மானிக்கிறார். "நாங்கள் பயங்கரவாதிகள் பக்கமும் இல்லை, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பக்கமும் இல்லை, நியாயத்தின் பக்கம் இருக்கிறோம்" - என்று சொல்கிற உரிமை உலக நாடுகளுக்கு உண்டா இல்லையா என்று சந்தேகம் வருகிறது. கூட்டுச்சேரா இயக்கம் என்கிற அருமையான சர்வதேசக் கோட்பாட்டிற்கு இன்னும் வேலையிருக்கிறது. சோவியத் ஒன்றியத்தின் மறைவோடு அதுவும் மறைந்துவிடவில்லை. உண்மையில் அன்றைவிட இன்று அதற்கு அதிக வேலையிருக்கிறது. அந்தக் கோட்பாட்டை தோற்றுவித்த நாடுகளுள் ஒன்றாகிய இந்தியா அதைக் கைவிட்டு விட்டது. தான் பெற்ற பிள்ளையைத் தானே அனாதையாக்கிவிட்ட சோகமது.

தொல்காப்பியன்,
*(இரயில்வே பொறியாளர்)*

**அமெரிக்காவை விட்டால் வேறு யார்தான் பின்லேடனைத் தட்டிக்கேட்பது? இந்த முறையை விட்டால் வேறு எப்படித்தான் அதைச் செய்வது?**

ஐ.நா. சபை என்று ஒரு அமைப்பு இருக்கிறதே அது என்ன செய்கிறது? வேடிக்கை என்னவென்றால் அதற்கும் அதன் பொதுச் செயலாளருக்கும் இந்த ஆண்டுக்கான 'நோபல்' சமாதான பரிசை கொடுத்திருக்கிறார்கள். ஆனால்,



## ஆப்கன் அவலம்...

**உலகிலேயே பரம ஏழை நாடு ஆப்கானிஸ்தான் என்று ஐ.நா. வளர்ச்சித் திட்ட நிறுவனம் தெரிவிக்கிறது. ஆப்கனின் 70 சதவீதத்திற்கும் அதிகமானோர் மிகவும் ஏழ்மை நிலையிலிருப்பவர்கள். ஓரளவு அடிப்படை வசதிகளை அடைந்துள்ளவர் கள் வெறும் 13 சதம் பேர்தான். மூன்றில் இரண்டு பங்கினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். மிகவும் பரிதாபகரமான நாடுகளின் வரிசையில் ஆப்கனுக்கு அடுத்தபடியாக ஜாம்பியா, சியாரா லியோன் முதலான 7 நாடுகள் வருகின்றனவாம்.**

*– ராஜா*



படிப்பகம்

www.padippakam.com



பின்லேடனைப் பிடிக்கும் வேலையை அதனிடம் ஒப்படைக்கவில்லை! பரிசு வேண்டுமானாலும் கொடுப்பார்களே தவிர உலக விவகாரங்களைத் தீர்க்கிற வேலையை அந்த உலக அமைப்பிற்குத் தரமாட்டார்கள்! அதையெல்லாம் அமெரிக்கா பார்த்துக் கொள்ளும்! இதென்ன கூத்து? ஒரு நாட்டில் கொடூரம் செய்த பயங்கர வாதி இன்னொரு நாட்டில் இருக்கிறான் என்றால் அது இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சனை. அதை சம்பந்தப்பட்ட ஒரு நாடே தீர்மானிக்கக்கூடாது. தலிபான்கள் மதப் பழமைவாதிகளே. புத்தர் சிலையைத் தகர்த்த வெறியர்களே. (அப்போது அமெரிக்கா கவலையே படவில்லை என்பதை நினைவுபடுத்திக் கொள்க) அவர்களும்கூட இப்போது பின்லேடன் மீதான ஆதாரத்தைத் தங்களிடம் காட்டும்படியும், அது சரியானதாக இருந்தால் பின்லேடனை ஒரு மூன்றாம் நாட்டிடம் விசாரணைக்காக ஒப்படைக்கிறோம் என்கிறார்கள். இதையும் நிராகரிக்கிறார் புஷ். ஹெலிகாப்டரிலிருந்து தன் மனையாளோடும் இரண்டு நாய்க்குட்டிகளோடும் இறங்கி வந்து மிக்க ஆணவத்தோடு பேட்டி கொடுக்கிறார் - "பின்லேடன் குற்றவாளியா இல்லையா என்று விசாரணை நடத்த வேண்டியதேயில்லை. பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்று ஏற்கெனவே சொல்லியாயிற்று. எனவே, அவர்கள் கூறுவதை நிராகரிக்கிறேன்." இது என்ன நீதி? குற்றம் சாட்டுபவரே நீதிபதியாகித் தீர்ப்புத் தந்துவிட்டால் நீதி சுடுகாட்டுக்குப் போய்விடும். கொலைகாரனுக்கும் வக்கீல் வைத்து தருவதுதானே நாகரீக நீதி முறைமை. அமெரிக்க ஜனாதிபதியோ "பின்லேடனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிப்பேன்" என்று 'கௌபாய் சினிமா' பாணியில் தண்டனையும் அறிவித்துவிட்டார். இவ்வளவையும் வேடிக்கை பார்க்கும் நிலையில் ஐ.நா.சபை! நீதிபதியாயிருக்க வேண்டிய அமைப்பு பார்வையாளனாக ஆக்கப்பட்டுவிட்டது! அமெரிக்கப் பாணியில் ஒவ்வொரு நாடும் இனி நடந்து கொண்டால் உலகத்தில் அமைதியே இருக்காது. அதை நோக்கித்தான் உலகம் போகிறதோ என்றே கவலை பிறக்கிறது.

டிகுமாரன், *(நெசவாளர்)*

**பின்லேடனுக்காக ஆப்கனைத்**





படிப்பகம்

தாக்கலாம் என்றால் எல்டிடிஇ பிரபாகரனுக்காக (ராஜீவ் கொலை) இலங்கையை இந்தியா தாக்கலாமா? அமெ. உட்பட உலக நாடுகள் ஆதரிக்குமா?

நண்பர் தொல்காப்பியன் இந்தக் கேள்வியையும் சிந்தித்துப்பார்க்கட்டும்.

ஜே.பிரேம் ஆனந்த்

*(பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை)*

**ஏன் முஸ்லீம்களில் மட்டும் தீவிரவாதிகள் இருக்கிறார்கள்?**

ஆர்.எஸ்.எஸ். வெகுகாலமாய்ச் செய்துவரும் அவதூறு பிரச்சாரம் எவ்வளவு வலிமையானது என்பதையே இந்தக் கேள்வி உணர்த்துகிறது. கூடவே இப்போது அமெரிக்காவும் சேர்ந்து கொண்டது. ஆப்கன் மீதான தனது தாக்குதலை "சிலுவை யுத்தம்" என்றும், "முடிவற்ற நீதி" என்றும், "இந்த யுத்தத்தில் கடவுள் நடுநிலைமை வகிக்கமாட்டார்" என்றும் அதிபர் புஷ் பேசி வருவது இத்தகைய எண்ணத்தையே ஏற்படுத்துவதாக உள்ளது. ஒருபுறம் "இந்த யுத்தம் இஸ்லாமிற்கு எதிரானதல்ல" என்று கூறிக்கொண்டே மறுபுறம் அதே எண்ணத்தை ஊட்டும் வகையிலும் பேசுகிறார்கள். உண்மையில் ஒவ்வொரு மதத்திலும் தீவிரவாதிகள் உண்டு. மதமானது நிறுவனமயமான உடனேயே அதற்குள் தீவிரவாதம் தலைதூக்கி விடுகிறது. ஒன்றையொன்று வளர்க்கவும் செய்கிறது. யூதத் தீவிரவாதமானது மத்திய கிழக்கு நாடுகளில் முஸ்லிம் தீவிரவாதத்தை வளர்க்கிறது. இந்து தீவிரவாதமானது இந்தியாவில் அந்த வேலையைச் செய்கிறது. இந்தியாவில் பிராமணியம் செய்யும் வேலையையே ஐரோப்பாவில் ஜியோனிசம் எனப்பட்ட யூதவாதம் செய்கிறது. பிஜேபி ஆட்சியாளர்கள் இஸ்ரேல் ஆட்சியாளர்களுடன் கூடிக்குலாவுவதன் ரகசியமும் இதுதான். மதத் தீவிரவாதம் பயங்கரவாதத்திற்கு இட்டுச்செல்வதும் எந்த மதத்திலும் நடக்கக்கூடி



சீன அரசு 18,000 கோடி யுவான் (சீன நாணயம்) செலவு செய்து தலைநகர் பீஜிங்கை அதி நவீன நகரமாக்கப் போகிறது. இதில் பாதியளவு சுரங்கப் பாதைகள், சிறு இரயில்கள், விரைவுச் சாலைகள் மற்றும் விமான நிலையக் கட்டுமானங்களுக்குச் செலவிட இருக்கிறது. இவற்றால் அங்கு வசிக்கும் மக்களின் வாழ்நிலையில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படப் போகிறது. சுமார் 90 லட்சம் சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட ஆபத்தான பழங்குடியிருப்புக் கட்டிடங்களை இடித்துவிட்டுப் புதிய கட்டிடங்களைக் கட்டப் போகிறார்கள். அங்கு நடக்க இருக்கிற ஒலிம்பிக் பந்தயங்களை முன்னிட்டு அங்குள்ள மக்கள் பெறப் போகிற மேன்மையான வசதிகள் இவை.

*– வீலு*

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## இறந்தும் ஆயிரம் பொன்

தமிழ் நாடகத் தலைமையாசிரியர் எனப் போற்றப்படும் தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் 1885ல் தொடங்கி 1922ம் ஆண்டு தம் இறுதி மூச்சு வரைக்கும் நாடகக் கலை உலகின் ஒளிச்சுடராய்த் திகழ்ந்தார். சுவாமிகளின் 'பாய்ஸ் கம்பெனி' மூலம் வெளித்தெரிய வந்தவர்களே டி.கே.எஸ். சகோதரர்கள், கிட்டப்பா, விஸ்வநாததாஸ் போன்ற தமிழ் நாடக உலகின் மகா கலைஞர்கள். மதுரை திண்டுக்கல், புதுக்கோட்டை, சேலம், கோவை, கும்பகோணம் போன்ற நகரங்களில் இன்றும் நூற்றுக்கணக்கான நடிகர் நடிகையர் சுவாமிகளின் கோவலன், அல்லி அர்ஜுனா, பவளக்கொடி, வள்ளி திருமணம் போன்ற நாடகங்களை நடிப்பதன் மூலமே வாழ்ந்து வருகிறார்கள்.

**நவம்பர் 13 சங்கரதாஸ் சுவாமிகள் நினைவுநாள்**

யதே. பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கிறோம் என்கிறார் அத்வானி. இவர்தான் 450 ஆண்டுகாலமாயிருந்த பாபர் மசூதியை வெறிக்கூட்டத்தைக் கூட்டிச் சென்று தகர்த்து தரைமட்டமாக்கியவர். அதைத்தொடர்ந்து பல்லாயிரம் பேர் மாண்டு போனதற்கும் காரணமானவர். அவர்தான் இந்தியாவிற்கு உள்துறை அமைச்சர்! மசூதி இடிப்பு பயங்கரவாதம் இல்லையா?



### இந்தியப் பொருளாதாரம் பாதிக்கப்படுமா? எந்தளவுக்கு?

ஓரளவுக்கு ஏற்கெனவே பாதிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா புலம்பியிருக்கிறார். விமானத்தில் பயணம் செய்ய பலரும் அஞ்சுவதால் ஏர் இந்தியா நிறுவனம் வெளிநாடுகளில் உள்ள தனது அலுவலகங்கள் சிலவற்றை மூடி அலுவலர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளது. சுற்றுலாத்துறை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. யுத்த மேகங்களின் ஊடே பயணித்து சுற்றுலா வருபவர் யார்? கச்சா எண்ணெய் விலை என்னாகப்போகிறதோ தெரியவில்லை. வெளி நாடுகளில் போய் வேலை பார்க்கும் ஆசை குறையலாம். இதனால் உள்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். ஏற்கெனவே ரூபாய் மதிப்பு நொண்டியடித்துக் கொண்டிருக்கிறது. அது சரிந்துவிழலாம். பங்குச்சந்தை சறுக்கிக் கொண்டே போகிறது. மொத்தத்தில் இந்தியப் பொருளாதாரத்தின் பல கூறுகள் படுமோசமாகச் சிதிலமாகலாம். பணக்காரர்கள் சமாளித்துக் கொள்வார்கள். டிவியில் குண்டுகள் தீப்



படிப்பகம்



பந்தங்களாய் ஒளிவிட்டு விழுவதை வேடிக்கை பார்க்கும் ஏழை, எளியவர்களின் பாடுதான் படுதிண்டாட்டமாக இருக்கப் போகிறது.

மனோன்மணி பார்த்திபன்

*(மதுரை பாண்டியன் ஜே.சி.மகளிர் அணி முன்னாள் தலைவர்)*

**புயலுக்குப் பின் அமைதி, யுத்தத்திற்குப் பின்...?**

சுடுகாடு! அதைத் தடுக்க உலக சமாதான சக்திகள் ஒன்றுபட வேண்டும். இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் நடைபெறும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நம்பிக்கை தீபம் முற்றிலுமாய் அணையவில்லை என் பாதைக் காட்டுகின்றன. அமெரிக்காவின் ஆதிக்க் வெறி தொடர்ந்தால் ஏழை நாடுகளின் மக்கள் இன்னும் கோபாவேசமாய் கொந்தளித்து எழுவார்கள் என்பது நிச்சயம். "மேற்குலகமும் கிழக்குலகமும் மீண்டும் மோதும்" என்கிறார்கள். "இரண்டு கலாச்சாரங்களுக்கு இடையிலான மோதல் தவிர்க்க முடியாது எழும்" என்கின்றனர். அறிவுலகத்தவர் விதவிதமாய்ப் பெயர் சூட்டலாம். ஒன்று நிச்சயம். உலகம் ஒருமுகப்பட்டு இல்லை. ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் இருக்கும்வரை இதர நாடுகள் போராடும். ஒடுக்குமுறையை எதிர்த்த வரலாறே உலக வரலாறு. இதில் 'இந்தியா ஒடுக்கப்பட்டவர்களின் பக்கமே' என்று உறுதியாகச் சொல்லிட வேண்டும். அவ்வாறே செயல்படவும் வேண்டும். நடக்குமா?

*(31.10.2001)*

*சந்திப்பு : சோழ .நாகராஜன்*






www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com


# மதுரை மாநகரில் மிகச் சிறந்த ஆடியோ கேசட் நிறுவனம்

- பல்வேறு சுவைகளில்...
- பல மொழிகளில்...
- பல ஆயிரம் கேசட் வகைகள்...

100% கியாரண்டி

ஒரிஜினல் கம்பெனி கேசட்டுகள்

ஒரே இடத்தில் வாங்க ...

# ஷீஷ்கு கானம்

60, டவுன்ஹால் ரோடு, மதுரை -1

போன் : 740005

E-29, 30, ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்,
பெரியார் பேருந்து நிலையம், மதுரை - 1.

போன் : 738866

இது ஒரு இசைக் கடல்!




படிப்பகம்

www.padippakam.com

# தடம்

உஷாதீபன்



"இங்க பார்... செலவு வேறே... விரயம் வேறே... என்னால செலவுதான் செய்ய முடியும்... விரயம் பண்ண முடியாது..."

[illegible] விடுமோ என்பதாக எண்ணிப் பரபரப்பு மேலிட்டது. மணி ஒன்பது. கிளம்பினால் சரியாக இருக்கும். மெதுவாக நடந்தால் பத்து நிமிடத்திற்குள் ஸ்டாப்பினை அடைந்துவிடலாம். நடையில் ஒரு அழுத்தமும், வேகமும் தானே புகுந்துகொள்ளும். ஸ்டாப்பினை நெருங்கும்போது கண்ணுக்கெதிரே ஒரு பஸ் வரும். ஓடிப்போய் ஏறவேண்டியிருக்கும். போகட்டும் என்று விட்டால், அடுத்ததைப் பிடித்து ஆபீஸ் போய்ச் சேரத் தாமதமாகி விடும்.

அப்படித் தாமதமாய்ப் போவது இவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் நிறையப் பேர் அதைத்தான் செய்துகொண்டிருந்தார்கள். அப்படி வருவதே பெருமைபோல் கருதினார்கள். "பத்து நிமிடம் க்ரேஸ் டைம் இருக்கே?" என்றார்கள். "என்றைக்கோ ஒரு நாளுக்கு, தவிர்க்க முடியாமல் தாமதம். ஆனால் க்ரேஸ் டைம் பயன்படுத்தலாம். வழக்கமாக அல்ல...!"

என்றான் இவன்.

"ஒன்பதே காலுக்குக் கிளம்பினால் போதாதா? ஒன்பதரைக்கு 48 B வருமே. அதில் போகலாமே? பழைய சாதம் சாப்டிட்டு இப்படி ஓடணும்னு என்ன தலைவிதி? அப்படிக் காசை மிச்சம் பண்ணி என்ன வாரிக் கட்டப் போறோம்? எப்பவும்போல நீங்க வண்டியிலயே



படிப்பகம்

www.padippakam.com

போங்க... சூடா வடிச்ச சாதம் சாப்பிட்டிட்டுப் போங்க..." – விமலா புலம்பினாள்.

இவன் கேட்பதாயில்லை. ஒரு மாதம் முன்பு வரை மொபெட்டில் தான் ஆபீஸ் போய்க் கொண்டிருந்தான். சுமாரான தூரத்திலிருந்தது ஆபீஸ். இப்பொழுது கட்டிடம் மாற்றியாயிற்று. தூரம் அதிகம். போய் இறங்க நேரடியாய் பஸ் வசதி உள்ளது. பின் எதற்காக வண்டியில் போவது?

"நம்மள மாதிரி ரெண்டு பேர் சம்பாதிக்கிற வீடுகள்லகூட அடிசனலா ஏதாச்சும் ஒரு பிஸ்னஸோ, வருமானமோ இருந்தாத்தான் டூவீலர் வச்சிக்க லாயக்கப்படும். ஒருத்தருக்கு ஆறாயிரம், ஏழாயிரமாச்சும் மாதத்துக்கு கைல வரணும். வெறும் கவர்ன்மெண்ட் சர்வன்டா இருந்திட்டு டூவீலரில் இஷ்டத்துக்கு ஷண்டிங் அடிச்சா தாங்காது".

அதற்குமேல் அவனிடம் பேச முடியாது. பேசினால் ஒரே வார்த்தையில் சொல்லி விடுவான்.

"இங்க பார்... செலவு வேறே... விரயம் வேறே... என்னால செலவுதான் செய்ய முடியும்... விரயம் பண்ண முடியாது... எங்க அம்மா, அப்பா என்னை அப்படித்தான் வளர்த்திருக்காங்க... புரியுதா...?" என்பான். அதற்கு மேல் ஒரு வார்த்தை பேச முடியாது.

"வரேன் விமலா... கதவைப் பூட்டிக்கோ..." – சொல்லிவிட்டு இறங்கி நடக்க ஆரம்பித்தான். பையில் மூக்குக் கண்ணாடி இருக்கிறதா? என்று பார்த்துக் கொண்டான். சரியாக நாற்பது வயசுக்கு விழுந்த வெள்ளெழுத்து. கூடவே அந்தப் புத்தகமும்





படிப்பகம்

www.padippakam.com

இருக்கிறதா என்று பார்த்தான். எதுவுமே படிக்க முடிவதில்லை என்று வருந்திக் கொண்டிருந்தவனுக்கு, சமீப நாட்களில் ஒரு அரைமணி நேரம் வாய்க்கிறது. பஸ்ஸில் போகும் நேரம் அது. பெரும்பாலும் சிட்டிங் கிடைத்து விடும். சமயங்களில் நிற்க வேண்டி வந்துவிடும். படிக்க முடியாது. எப்பொழுது உட்காருவது என்பதிலேயே கவனம் இருக்கும்.

## நான் தயார்

குளித்துக் குடிக்க
நான் தயார்...
கூழுமில்லை, கஞ்சியுமில்லை

ஊர் இரண்டுபட்டது
திருவிழா நின்றது
கூத்தாடிக்குத் திண்டாட்டம்

ஆலயம் தொழுதும்
வேலை இல்லை
சாலவும் வீண்



– பெரணமல்லூர் சேகரன்

கையில் தூக்குச் சட்டி சகிதம், காவிக்கறை ஏறிய வேட்டி சட்டையோடு நாலைந்து பேர் இருப்பர். கூலி வேலைக்குச் செல்லும் கொத்தனார்கள். அருகில் போய் நின்று கொள்வான். மிஞ்சிப் போனால் தேவர் சிலை தாண்டாது. இறங்கி விடுவார்கள். இடம் பிடித்து விடுவான். அது பொன்னான பொழுது. புத்தகம் கைக்கு வரும். இவனது இலக்கிய ஆர்வத்துக்கு ஒத்தடம் கொடுக்கும் நேரம் அது.

தாமரை மலர்த்தெரு முக்குத் திரும்பி மல்லிகை மலருக்குள் நுழைந்தான். "கிருஷ்ணா நீ பேகனே..." பாடல் காற்றில் மிதந்து வந்தது. அந்த வீட்டிற்கே "தியாகப் பிரம்மம் குடில்" என்று பெயர் வைத்திருந்தார்கள். தினசரி அவ்விடத்தைக் கடக்கையில் இவனையறியாமல் கால்கள் தயங்கும். பிறகு ஆபீஸ் நினைவு உந்தித்தள்ள பஸ் போய் விடுமே என்று பரபரப்பாக மீளும்.

"தினம் நின்னு கேட்கிறீங்களே? கர்னாடிக் ரசனையுண்டோ?" – அன்றொரு நாள் கேட்டார் அந்தப் பெரியவர்.

"ம்" என்றான் இவன்.

"இது என்ன ராகம் சொல்லுங்கோ பார்ப்போம்..."

"இவரென்ன நம்மைச் சோதிக்கிறாரா? என்று இருந்தது இவனுக்கு. பாடலை ஆழ்ந்து கேட்டான். 'சங்கித ஞானமு..' மகாராஜபுரம் சந்தானம்" குரலைச் சட்டென்று உணர்ந்து கொண்டான். பாடலை முனகினான். மனதுக்குள் ஸ்வரம் இழுத்துக் கொண்டே "தன்யாசி.." என்றான். "சபாஷ்.." அழுத்தமாகப் பாராட்டு விழுந்தது.

அன்றுதான் இவன் பஸ்ஸைக் கோட்டை விட்டான். இரண்டு பஸ் பிடித்து – இடிபிடியாய் ஏறி – ஓய்ந்து



படிப்பகம்

www.padippakam.com

போய் ஆபீஸ் போய்ச் சேர்ந்தான்.

காற்றில் மிதந்து வந்த பாடலை மனதில் முனகிக் கொண்டே நகர்ந்த போது - அந்த ஒற்றைப் பனைமரக் கோயில் கண்ணில்பட்டது. சினிமாவில் கூட பனைமரத்தைக் காண்பிக்கக்கூடாது என்பதாக ஒரு சென்டிமென்ட் விஷயம் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறான். அதிலும் ஒற்றைப் பனைமரம் கண்ணில் படவேக்கூடாது என்பதாக. இங்கே அதுவே ஒரு கோயிலாகவும், அதற்கு ஆதாரமாகவும் இருப்பது கண்டு ஆச்சர்யமாயிருந்தது. மனிதர்களின் நம்பிக்கைகளுக்கு எல்லையே இல்லையோ என்று தோன்றியது.

இவன் அப்பகுதியில் வீடு கட்டுகையில் அந்த ஒற்றைப் பனைமரக் கோயில்தான் அடையாளம். கலங்கரை விளக்கம்போல. அதைக் குறி வைத்துத்தான் தன் ப்ளாட்டை அடைவான் இவன். அந்தப் பனைமரமும், அதன் கீழுள்ள மேடையும் அதில் பதிக்கப்பட்டிருக்கும் அரிவாளும், சூலமும் ஒரு விதமான கலக்கத்தை ஏற்படுத்தும். அந்தப் பகுதிக்கு அது தான் காவல் தெய்வம் என்றார்கள்.

இப்பொழுது வீடுகள் வரிசையாக வந்துவிட்டன. அசுர வளர்ச்சி. வாழ்க்கையின் லட்சியமே வீடு கட்டுவது தான் என்பது போல் எல்லோரும் செயல்பட்டார்கள். அவர்களை இவன் ஒன்றுசேர்த்தான். குடியிருப்போர் நலச் சங்கம் ஏற்படுத்தினான். பஸ் வசதி, சாலை வசதி, சாக்கடை, தெருவிளக்கு என்று ஒவ்வொன்றாய் ஏற்பாடு செய்திட அது பெரிதும் உதவியது.

பஸ் ஸ்டாப்பை அடைவதற்கும் 22B வருவதற்கும் சரியாக இருந்தது. ஓடிப் போய் ஏறிக் கொண்டான். பரபரப்பாய் ஏறியதில் வியர்த்துக் கொட்டியது. சட்டைக் காலரைத் தூக்கிவிட்டான். சில்லரைகள் எம்பிச் சிதறின. "இப்படி உட்காருங்க..." ஒரு இளைஞன் எழுந்து இடம் கொடுத்தான். ஒரிருவர் சிதறிய சில்லரையைப் பொறுக்கிக் கொடுத்தனர். இந்த உலகமும், மனிதர்களும் இனிமையாகத் தோன்றியது இவனுக்கு.

பஸ் போய்க் கொண்டிருக்கும் போதே அன்றைய முக்கியப் பணிகள் பற்றிய சிந்தனை வர ஆழ்ந்து போனான் அதில். வழக்கமாய் பஸ் ஸ்டாப்பில் சந்திக்கும். நண்பர்களை அன்று தவறவிட்டது மனதுக்கு வெறுமையாய்த் தோன்றியது. அவரவரின் பிரச்சனைகள் பல்வேறுபட்ட தளங்களில் வெளிப்படும் நேரம் அது. ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வாய்ப்புக்கள் அமையும் இதமான பொழுதுகள் அவை.



"இன்கம்டாக்ஸ் ஸ்டேட்மென்ட் இன்னைக்கு எப்படியும் முடிச்சாகணும்..." பஸ்ஸை விட்டு இறங்கும்போது - இவனாகவே சொல்லிக் கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com

அலுவலகத்திற்குள் நுழைகையில் மணி பத்தாகிப் பத்து நிமிடங்கள் முடிந்திருந்தது. "சே! லேட்டாயிடுச்சே!" – வாய் தானாகவே முனகியது. ஒவ்வொரு ஸ்டாப்பிலும் ஆட்கள் இறங்கி, ஏறுதலில் ரொம்பத் தாமதம் அன்று என்று தோன்றியது. சீட்டில் போய் பையை வைத்து விட்டு ஒரு மடக்குத் தண்ணீரும் குடித்து விட்டு கையெழுத்திட வந்தான்.

"பொறுங்க... பொறுங்க..." என்றார் கண்காணிப்பாளர். அப்பொழுது தான் எல்லோரும் இவனையே பார்ப்பதை அறிந்தான்.

"க்ரேஸ் டயத்துக்குள்ளே வந்துட்டேனே சார்..." என்றான் குற்றவுணர்வு மேலிட.

"அட, அதுக்கில்லீங்க... உங்க ஒய்ப் போன் பண்ணினாங்க... மெட்ராஸ் லேர்ந்து தந்தி வந்திருக்காம்... உங்க ஃபாதருக்கு சீரியஸாம்.. உடனே புறப்பட்டு வரச் சொன்னாங்க..."

நெஞ்சுக்குழிக்குள் ஏதோ அடைப்பதுபோல் இருந்தது இவனுக்கு. உடம்பு பூராவும் உஷ்ணம் பரவியது. ஹோட்டலில் வேலை பார்த்து எல்லோரையும் கஷ்டப்பட்டுப் படிக்க வைத்து ஆளாக்கிய அப்பாவின் உழைப்பு ஒரு வினாடி நினைவில் வட்டமிட்டது.

லீவு எழுதிக் கொடுத்துவிட்டு மீண்டும் பஸ் ஸ்டாப்புக்கு வந்தபோது – இவனையறியாமல் – அடக்க முடியாமல் – அழுகை முட்டிக் கொண்டு வர – கர்சீப்பை எடுத்து வாயைப் பொத்திக்கொண்டு – உடல் நடுங்கக் காத்திருக்க ஆரம்பித்தான்.

பாரினில் சிறந்தது

POPULAR APPALAMS DEPOT
பாப்புலர் அப்பளம் டிப்போ

பாப்புலர் அப்பளம்

எல்லோருக்கும் Favourite

தயாரிப்பாளர்

T.A.V. Products (P) Ltd

617/2B T.H. Road, Tondiarpet, Chennai - 81.
Ph : 5954351 Tel : 041-7058-VASU IN Fax : 915952987

www.padippakam.com




# "12B"

சக்தி என்ற சக்திவேல் நிர்வாகத் துறையில் பட்ட மேற்படிப்பு பெற்றவன்.

நேர்முகத் தேர்வுக்காகப் போகும் அவன் கோவிலில் ஜோ என்ற பெண்ணைப் பார்க்கிறான்.

"12B" பஸ்ஸை பிடிக்கச் சென்றவன் ஆட்டோ ரிக்ஷா குறுக்கே வர பஸ்ஸை மிஸ் பண்ணுகிறான். மனம் நொந்து நண்பனின் ஒர்க்ஷாப்பில் மெக்கானிக்காகச் சேருகிறான்.

ஒர்க்ஷாப் நண்பர்கள் மூலம் ஜோவைத் தேடி... காதலித்து...

...ஜோவின் தாய்மாமன் வந்து... இறுதியில் அவளையே கைப்பிடிக்கிறான் சக்தி.

மிகச் சாதாரணமான கதைதான்.

ஆனால் இயக்குனர் ஜீவா இதனை சொல்லும் பாணியில் "12B" படத்தின் மூலம் தமிழ்த்திரைப்படத் துறையை புதிய தளத்திற்கு எடுத்துச் செல்கிறார்.

சக்தி பஸ்ஸை 'மிஸ்' பண்ணாமலிருந்தால் என்னவாகியிருக்கும்? இந்தக் கேள்வியை எழுப்பி விடையையும் தருகிறார்.

சக்தி நேர்முகத் தேர்வில் வெற்றி பெற்று வங்கியில் வேலைக்கு அமர்ந்து – நல்ல சம்பளம், கார், பங்களா என்று கொழிக்கிறான். அதே அலுவலகத்தில் பணியாற்றும் சிம்ரன் – ஏற்கெனவே வேதனையில் இருப்பவர் – சக்தியின் வருகையால் வேதனையை மறக்க – சிநேகம் பிறக்க –

சக்தி இதனை அறியாமல் ஜோவைத் தேடுகிறான். ஜோ வேறொருவனை காதலிப்பதை அறிந்து – சிம்ரனை தான் நேசிப்பதையும் – சிம்ரன் தன்னை நேசிப்பதையும் உணர்ந்து – பரவசத்தில் அவளை நோக்கி ஓடிவரும்போது – சாலை விபத்தில் இறக்கிறான்...

இரண்டு கதைகள் – ஒரே பாத்திர


படிப்பகம்

மான சக்தி – ஒரே நடிகர் – பின்னல் போன்ற சிக்கலான திரைக்கதை கட்டுமானம் – (COMPLICATED STRUCTURE) – தமிழ்ப்பட ரசிகர்கள் மீது ஜீவா கொண்டுள்ள நம்பிக்கையின் கம்பீரம் – "12B".

அடிக்கடி இரண்டு சக்திகளும் சட்டைகளை மாற்றி அணிகிறார்கள். இதனை கூர்ந்து கவனிக்கும் பார்வையாளனால் மட்டுமே கதையின் ஓட்டத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

இந்தப்படத்தை பார்த்துவிட்டு அரங்கை விட்டு வெளியே வருபவர்கள் தொலைக்காட்சிப் பேட்டியில் – புரியவில்லை – ஒன்றுமே புரியவில்லை – "போர்" என்று அங்கலாய்த்தது பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரபல திரைப்பட விமர்சகரும் கட்டுரையாளருமான பேராசிரியர் ஜே.வசந்தன் அவர்களிடம் கேட்டோம்.

50ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில், சிவாஜி வந்த புதிதில் **அந்த நாள்** என்ற படம் வந்தது. அதில் நடக்கும் ஒரு கொலை பற்றி ஒவ்வொருவரும் தாங்கள் அறிந்ததைச் சொல்வார்கள். இதனைக் காட்சி ரூபமாக சித்தரிக்கும் போது – சுட்டுக் கொல்லப்பட்ட சிவாஜி – அடுத்த காட்சிகளில் – உயிரோடு வருவார்.

"செத்தவன் எவன் – உயிரோடு இருப்பவன் எவன்னே தெரியாம படம் எடுத்திருக்காண்டா" என்று பார்வையாளர்கள் திரையரங்கிலேயே கூச்சலிட்டனர்....

பின்னர் 'அந்தநாள்' ஒரு அற்புதமான படம் என்று அங்கீகரித்தனர் என்று பேராசிரியர் கூறினார்.

இதுபோன்ற கதை அமைப்புகளை – கட்டுமானத்தைக் கொண்ட படங்களாக, அகிரோ குரசோவா வின் **ரோஷ்மான் கேட், போன்–கால்–பிரம் எ ஸ்டிரேஞ்சர்** ஆகிய படங்களையும் குறிப்பிட்டார்.

ஜீவாவும், லெனின் – வி.டி. விஜயன் குழுவினரும் தமிழ்த்திரைப் படத்துறையின் முகத்திற்கு புதிய பொலிவை கொடுத்துள்ளார்கள்.

புதிய முகம் ஷாம் நேர்த்தியாகச் செய்துள்ளார்.

ஜோ விசில் மூலம் பாடும் ட்யூன், மெக்கானிக் சக்தியை – பாங்க் கிளார்க் சக்தியை சிம்ரனை பாதித்ததாகக் காட்டுவது – இரண்டு கதைக்கும் இடையே உள்ள நூலிழையை – தொடர்பினை, வெளிப்படுத்துகிறது.

ஹரீஸ் ஜெயராஜுக்கு பாராட்டுக்கள்.

தோட்டாதரணி படத்தின் தரத்தை உயர்த்தியுள்ளார். அனுசரணையான காமெடி விவேக்கினுடையது.

இந்தி திரைப்படத்துறையை கலக்கும் சுனில் ஷெட்டி. அவர் வரும் பிரேம்களில் ஜொலிக்கிறார்.

ஜோதிகா, சிம்ரன் என்று இருந்தாலும் படம் முழுக்க தோன்றாமலேயே தென்படுகிறார் ஜீவா.

கதை மாந்தர்கள் அழும்போது அழுவதும், சிரிக்கும்போது சிரிப்பதுமாக இல்லாமல், பார்வையாளன் அந்நியப்பட்டு, உணர்வுபூர்வமாக இல்லாமல், அறிவுபூர்வமாக ஒரு படைப்பை அணுக ஜீவா அளித்த சந்தர்ப்பம் தான் "12B".

***– திலீபன்***



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# அந்த நாள் ஞாபகம்...

இந்நாளில் மீண்டும் ஒரு முறை நினைத்துப் பார்க்கிறோம் – உலகின் அந்த ஆறிலொரு பகுதி தேசத்தை – ஐரோப்பிய கண்டத்தின் ஒரு பகுதியும் ஆசிய கண்டத்தின் ஒருபகுதியும் ஒரே தேசமாக ஐக்கியமாகி வாழ்வாங்கு வாழ்ந்த – "புதிய ருஷியா" என மகாகவி பாரதி போற்றிய – அந்த சோவியத் நாடு எனும் திருநாட்டை – ஆம்! மீண்டும் ஒருமுறை நம் மனத்தில் வைத்து நினைத்துப்பார்க்கிறோம்.



தாகூர்

உலகில் மனிதகுல வரலாற்றில் முதல் துவக்கமாக உழைப்பவர் அரசு அமைந்து 70 ஆண்டுகளுக்கு மேலாய் ஆளுகை புரிந்த ஒரு மகத்தான நிகழ்வை மறக்க முடியுமா? பிரிட்டிஷ் தேர்தலில் இரண்டாம் முறையாகத் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்ததை 'ஆஹா! ஓஹோ!' வெனப் பெருமை பீற்றிக்கொண்ட நம் நாட்டு ஊடகங்களின் சூழலில் ஒரு தேசத்தில் ஒரே கட்சி (கம்யூனிஸ்ட் கட்சி) தொடர்ந்து 70 ஆண்டுகளுக்கு மேலாக அதிகார பீடத்தில் வீற்றிருந்து பரிபாலனம் நடத்தியதை மறக்க இயலுமா? எதிர்வரும் ஒரு காலத்தில் உலகமே சோசலிச பூமியாக மலர்ந்திட காலம் நடத்திப் பார்த்த அந்த எழுபது ஆண்டுக்கால ஒத்திகையை மறக்கத்தான் முடியுமா?



டால்ஸ்டாய்

போரற்ற – அணு ஆயுதங்களின் அச்சுறுத்தலற்ற உலக சமாதானத்தின் தூதுவனாகவும் இந்தியா உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளின் உற்ற நண்பனாகவும் விளங்கியது அந்த சோவியத் நாடு. பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்

தி.வரதராசன்



படிப்பகம்

www.padippakam.com



பாரதியார்



பிரேம்சந்த்



அலி சர்தார் ஜாப்ரி



சஜ்ஜத் ஜாகிர்

பம், கல்வி, கலாச்சாரம் மற்றும் தேசப் பாதுகாப்பு எனப் பன்முக ஒத்துழைப்பு இந்திய – சோவியத் நாடுகளுக்கிடையே ஆத்மார்த்தமாகவும் ஆழ்மாக வும் அமைந்து திகழ்ந்த அந்த இனிய நாட்கள்....

புஷ்கின், லியோடால்ஸ்டாய், மாக்சிம் கார்க்கி, ஷோலகோவ், ஆன்டன் செகாவ், மாயகோவ்ஸ்கி முதலான இலக்கிய மேதைகளைப் பெற்ற ரஷ்ய பெருந் தேசம் நம்மோடு கொண்டிருந்த கல்வி – கலாச்சார ஒத்துழைப்பின் காரணமாக நமது பழங்காலத்தமிழ் இலக்கியங்கள் முதற்கொண்டு தற்காலத் தமிழ் இலக்கியங்கள் வரை அந் நாட்டில் பிரபலப்படுத் தப்பட்டன. கம்பனைப்போல், வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல் உலகில் யாங்கணும் கண்டதில்லை என பாரதி சொன்ன அந்தப் பெரும்புலவர்களின் படைப்புகள் சோவியத் மக் களுக்கு ரஷ்ய மொழியாக்கம் செய்து வழங்கப்பட்டன.

குறள்வெண்பாவில் அமைந்த திருக்குறள் ரஷ்ய மொழியில் வசன நடையில் வெளியிடப்பட்டது. அதற்குப்பிறகு செய்யுள் நடையிலேயே மொழியாக்கம் செய்து. திருக்குறள் வெளியிடப்பட்டது. இப்ராகிமோவ் எனும் சோவியத் அறிஞர் திருக்குறளை செய்யுள் நடையில் மொழி பெயர்த்தார்.

சோவியத் மக்களை திருக்குறள் மிகவும் கவர்ந்தது. திருக்குறள் நூலை ஒரு டாக்சி ஓட்டுநர் ஆர்வத்துடன் படித்துத் தம்முடன் பேசியதை தமிழறிஞர் தொ.பொ.மீனாட்சி சுந்தரனார் தனது சோவியத் பயணக் கட்டுரையில் குறிப்பிட்டார்.

குற்றம் புரிந்த மன்னனை எதிர்த்து நேருக்குநேர் நின்று நீதியுரைத்த ஒரு பெண்ணின் காவியமாக இளங்கோவடிகள் படைத்த நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமும், சோவியத் நாட்டில் ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டது. கிளாஷோவ் என்பவர் இக்காப்பியத்தை உரைநடையில் எழுதி வெளியிட்டார்.

"ஆஹாவென்று எழுந்ததுபார் யுகப்புரட்சி" – என்று 1917ல் எழுந்த ரஷ்யப் புரட்சியை வாழ்த்திப் பாடிய உலகின் முதல் கவிஞன் என்ற முறையில் பாரதிக்கு சோவியத் மக்களிடம் தனி மரியாதை



படிப்பகம்

www.padippakam.com



தகழி



கல்கி

உண்டு. சிமிர் நோவா என்பவர் பாரதியின் தேசியப்பாடல்கள், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, சக்திப்பாடல்கள் முதலானவற்றை ரஷ்யனில் மொழியாக்கம் செய்துவெளியிட்டார். பாரதி பாடல்களின் தொகுப்பு வெளிவந்த சில நாட்களிலேயே அத்தனை பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன. ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்ட இந்தியாவின் முதல் கவிதை நூல் பாரதியின் கவிதை நூலே.

பியாதிகோர்ஸ்கி என்ற சோவியத் அறிஞர் 'தமிழ் நாட்டுப் பழங்கதைகள்' என்ற பெயரில் தொகுப்பு ஒன்று வெளியிட்டார். இதில் திருவிளையாடல் புராணம், சுந்தரர், மாணிக்க வாசகர், மணிமேகலை, கோவலன் – கண்ணகி, காரைக்கால் அம்மையார் ஆகியோரைப் பற்றி எழுதியிருந்தார்.

"இந்தியத் தத்துவ வரலாற்று மூலங்கள்" என்ற ஆய்வு நூலில் நாலடியார், மணிமேகலை, குண்டலகேசி, நாயன்மார், ஆழ்வார்களின் பாடல்கள் சேர்க்கப்பட்டன. "தமிழ் இலக்கிய வரலாறு" எனும் நூலும் ரஷ்யமொழியில் வந்தது. லெனின் கிராடு, மாஸ்கோ பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்கும் மாணவர்கள் பத்துப்பாட்டு, பெரியாழ்வார், மாணிக்க வாசகர், மு.வரதராசனார், கல்கி, அகிலன் ஆகியோ

## கல்வியால் பெண்கள்...

1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பெண்களின் படிப்பறிவு 22 சதவீதமாக இருந்தது. இது தற்போது 75 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மகாராஷ்டிரா பொருளாதார வளர்ச்சிக் கவுன்சில் நடத்திய ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. இந்த வளர்ச்சியால் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 156 ஆக அப்போது இருந்தது. இன்று 110 ஆகக் குறைந்துள்ளதாம். பெண் கல்வி அதிகரிப்பால் கருத்தடை முறைகள் பரவி குழந்தை பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாம். பெண்கள் தங்களின் நிலைமையை மேம்படுத்திக் கொள்வதன் மூலம் வேலை வாய்ப்பு, சுய வேலைவாய்ப்பு போன்றவற்றை அடைய வழி பிறக்கின்றது. ஆண் மேலாதிக்கத்திலிருந்து தங்களைக் கல்வி மட்டுமே விடுவிக்க வழிவகுக்கும் என பெண்கள் விழிப்புணர்வு பெற்று வருவதாகவும் அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

– சூர்யா



படிப்பகம்

www.padippakam.com

ரது படைப்புகளைத் தங்கள் ஆய்வுக்கென எடுத்துக்கொண்டனர்.

மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியையும், தமிழ் இலக்கியங்களையும் போதித்தவர் அலெக்சாந்தர் துபியான்ஸ்கி. இவர் "ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட கவிதைகள்" என்ற தொகுப்பு ஒன்றினை எழுதிவெளியிட்டார். இதில் மதுரைக் காஞ்சி, திருமுருகாற்றுப்படை, புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணைப் பாடல்கள் இடம் பெற்றன.

பழங்கால, இடைக்காலத் தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்ல, அண்மைக்காலத் தமிழ் இலக்கியப் படைப்புகளும் சோவியத் மக்களிடம் புகழ்பெற்று விளங்கின. புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, கி.வா.ஜகந்நாதன், ஜெயகாந்தன், தெ.மு.சி.ரகுநாதன், பி.எஸ்.ராமையா, கல்கி, அகிலன், லட்சுமி ஆகியோரது படைப்புகள் சோவியத் நாட்டில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன.

புதுமைப்பித்தனின் 22 சிறுகதைகள் கொண்ட தொகுப்பு ஒன்று ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டது.

சோவியத் நாட்டில் வெளியிடப்பட்ட "நண்பர்களின் குரல்கள்" என்றொரு கவிதைத் தொகுதியில் பாரதியார், ச.து.சு.யோகியார், ப.ஜீவானந்தம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் ஆகியோரது கவிதைகள் இடம்பெற்றிருந்தன.

ரூதின் என்ற சோவியத் அறிஞர் தம் பெயரை 'செம்பியன்' என்று தமிழில் வைத்துக்கொண்டு ஆற்றிய தமிழ்ப்பணி - தமிழ்த்தொண்டு தமிழக கல்வியாளர்களாலும் இலக்கியவாதிகளாலும் மறக்க இயலாதது.

## "இந்தியாவின் டால்ஸ்டாய்"



நமது வங்க மகாகவி ரவீந்திரநாத் தாகூர் மீது சோவியத் நாட்டு மக்களுக்கு அன்பும், மரியாதையும் அதிகம் உண்டு. அவர்கள் ரஷ்ய இலக்கிய மேதை டால்ஸ்டாயுடன் தாகூரை ஒப்புமைப்படுத்தி "இந்தியாவின் டால்ஸ்டாய்" எனப் புகழ்ந்தனர். 1919ம் ஆண்டு 'வெஸ்ட்னிக் ஜிழ்னி' என்ற பத்திரிகையில் ட்ரோயனோவ்ஸ்கி "இந்தியாவின் டால்ஸ்டாய்" என்ற தலைப்பில் தாகூரின் மனிதநேயம் குறித்துக் கட்டுரையொன்று எழுதியிருந்தார். (இந்த இரு வெண்தாடி இலக்கிய வேந்தர்களின் முகத்தோற்றங்களைப் பார்த்தால்கூட அப்படித்தான் வர்ணிக்கத் தோன்றும்.)

தாகூரின் நோபல் பரிசு பெற்ற "கீதாஞ்சலி" எனும் நூல் ரஷ்ய மொழியில் வெளி வந்தவுடன் அவரது புகழ் அந்நாட்டில் பரவ ஆரம்பித்தது.

ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்றதன் அண்மை ஆண்டுகளிலேயே தாகூரின் படைப்புகள் ஆங்கில மூலத்திலிருந்து மட்டுமல்ல; வங்க மூலத்திலிருந்தும் நேரடியாக ரஷ்யனில் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டன. கிட்டத்தட்ட சோவியத் நாட்டின் அனைத்து மாநில மொழிகளிலும் தாகூரின் படைப்புகள் வெளியிட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன. 1955-57ம் ஆண்டுகளில் தாகூரின் 8 வால்யூம்கள் வெளிவந்தன. அதற்குப் பிறகு 12 வால்யூம்கள் வெளிவந்தன. சோவியத் நாட்டில் தாகூரின் நூல்கள் மட்டும் பல லட்சக்கணக்கான பிரதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

[illegible] லெனின் கிராடு பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இவரது கூட்டு உழைப்பில் உருவான 38 ஆயிரம் சொற்கள் கொண்ட தமிழ் - ரஷ்ய அகராதி, ரஷ்ய மொழி தெரிந்த தமிழ் கற்கும் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்பட்டது.

லெனின் கிராடு நகரில் "மஞ்சள் வாழை" என்ற தலைப்பில் மலையாளச் சிறுகதைத் தொகுப்பு ஒன்று ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டது. வைக்கம் முகம்மது பஷீர், பி.கேசவதேவ், பொன்குன்னம் வர்க்கி, எஸ்.கே.பொற்றேகாட், தகழி சிவசங்கரன் பிள்ளை போன்ற பிரபல மலையாள எழுத்தாளர்களின் கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றன. 60 ஆயிரம் பிரதிகள் வெளியிடப்பட்டது.

இந்தியாவிடம் ஆழ்ந்த நட்புறவு கொண்டிருந்த சோவியத்நாடு தமிழ் இலக்கியப் படைப்பாளர்களோடு இதர இந்தியப் படைப்பாளிகள் பலரின் படைப்புகளையும் வெளியிட்டு இந்திய இலக்கிய உலகுக்குப் பெருமை சேர்த்தது.

அன்று மாஸ்கோவிலிருந்து வெளியிடப்பட்ட "சோவியத் - இந்திய நட்புறவு" எனும் நூல் இந்த இரு தேசங்களின் பன்முக ஒத்துழைப்பை பல்வேறு தளங்களில் காணமுடிகிற மிகச்சிறப்பானதொரு தொகுப்பு நூலாகும்.

லெனினது உரைகளுடனும் காந்திஜி எழுதிய கட்டுரையுடனும் இந்த நட்புறவு நூல் துவங்குகிறது. காலத்தால் உறுதி செய்யப்பட்ட இவ்விரு நாடுகளின் உறவுகள் இவற்றின் நலன்களுக்கு உகந்த வலிமையான நட்புறவாகவும், பன்முக ஒத்துழைப்பாகவும் பரிணமித்ததை இவ்விரு நாடுகளின் இலக்கியப் படைப்புகள் பிரதிபலிப்பதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. இந்தியாவில் சோவியத் நாட்டைப் பற்றியும், சோவியத் நாட்டில் இந்தியாவைப் பற்றியும் எடுத்துரைப்பதில் இந்த இரு நாடுகளின் எழுத்தாளர்களும் அறிஞர்களும் பொதுவாழ்வில் ஈடுபட்ட தலைவர்களும் ஆற்றிய அரும்பணிகள் குறித்தும் இந்நூல் விரிவாக எடுத்துக்காட்டுகிறது.

காந்திஜிக்கும் லியோடால்ஸ்டாய்க்குமிடையே நடைபெற்ற கடிதப்போக்குவரத்தும், லெனின் பற்றி


புதுமைப்பித்தன்


அகிலன்


கண்ணதாசன்


ஜெயகாந்தன்



படிப்பகம்

www.padippakam.com



ஜீவா



ருதின் செம்பியன்



யோகியார்



தொ.மு.சி.ரகுநாதன்

நேருஜி எழுதிய கட்டுரையும் அந்த நட்புறவு நூலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

இந்தியாவின் பல்வேறு மொழிகளில் லெனின் குறித்து வெளிவந்துள்ள கவிதைகளும் இந்நூலில் உள்ளன.

ரஷ்யப் புரட்சியை வாழ்த்திப் பாடிய பாரதி, லெனின் பற்றி ஏராளமாய்க் கவிதைகள் தீட்டிய அம்ரிதா ப்ரீதம், சுமித்ரானந்தன், பந்த், திங்கர், அலி சர்தார் ஜாப்ரி, பிரேம்சந்த், முல்க்ராஜ் ஆனந்த், சரோஜினி நாயுடு, கிஷன் சந்தர், சஜ்ஜத் ஜாகீர் ஆகிய புகழ்வாய்ந்த இந்தியக் கவிஞர்களின், எழுத்தாளர்களின் படைப்புகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ரஷ்யப் புரட்சி நிகழ்ந்த ஆறு மாதங்களுக்குள் அப்போதுதாம் எழுதிக் கொண்டிருந்த ஒரு நாவலில் அந்தப் புரட்சியை வரவேற்கும் முறையில் குறிப்பிட்டவர் பிரேம்சந்த்.

இந்தியாவில் முதலாவது தொழில்முறை நாடக மன்றத்தை கல்கத்தாவில் நிறுவிய பிரபல சோவியத் நடிகரும் அறிஞருமான கெராசிம் லெதேவின் படைப்புகளும் இந்திய – சோவியத் நட்புறவு நூலில் உள்ளது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களிடமிருந்து இந்தியா விடுதலை பெற்றபிறகு இந்திய – சோவியத் தேசங்களின் உறவுகளில் ஒரு புதிய சகாப்தம் உதயமானது. அந்தக் காலகட்டத்தின் படைப்புகளாக பீஷ்ம சஹானி, அம்ரிதா ப்ரீதம், ஷியாம் பெனகல், கே.எம்.அப்பாஸ், மிருணாள் சென் முதலானவர்களின் படைப்புகளைக் குறிப் பிடலாம்.

பாசிச அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவ்தற்காக எண்ணற்ற துன்ப துயரங்களை அனுபவித்து அளப்பரும் தியாகங்கள் புரிந்த சோவியத் நாட்டு மக்கள் போரை விஷமென வெறுத்தார்கள், எதிர்த்தார்கள். உலக சமாதானத்திற்காகவும், உலகின் எல்லா நாட்டு மக்களோடும் ஒத்துழைப்பிற்காகவும் சோர்வின்றி அயராது பாடுபட்டார்கள்.

இந்த நட்புறவுத் தொகுப்பு நூலில் இடம்


படிப்பகம்


www.padippakam.com

பெற்றுள்ள இந்திய எழுத்தாளர் களின் படைப்புகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இவற்றையெல்லாம் இன்று நினைத்துப் பார்த்தாலும் எவ்வளவு பெருமையாக உள்ளது.

அன்றைய நமது இந்திய இலக்கிய கர்த்தாக்கள் அழிவை உண்டு பண்ணும் யுத்தத்தை எதிர்ப்பவர்களாகவும், உலக சமாதானத்தை நேசிப்பவர்களாகவும் விளங்கினர். உலகின் மீது யுத்தக் கருமேகங்கள் கவிழ்கிற இன்றைய சூழலில் அவர்களை நெஞ்சம் பூரித்த பெருமிதத்தோடு நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்திய அரசு மீண்டும் ஒரு யுத்த அரக்கனைக் களம் இறக்கிவிட்டு உலகில் ஓர் அச்ச அதிர்வை உருவாக்கிவிட்டுள்ளது. இன்றின் இத்தகு சூழலில் அன்றின் நமது இலக்கியகர்த்தாக்களது யுத்த எதிர்ப்பு - உலக சமாதானம் எனும் பாரம்பரியத்தை இன்றைய நமது இலக்கிய கர்த்தாக்கள் தொடர்வார்களா?

முன்னைப் பாரம்பரியத்தின் மேன்மையை எண்ணிப்பார்க்கையில் இந்த வினா எழுகிறது. ●



## அழகிய பிரம்மாண்டம்...

மதுரையின் சிறப்புகளுள் பிரதானமான திருமலை நாயக்கர் மகாலை நேரில் பார்க்காதவர்கள் கூட பல சினிமாக்களில் (குறிப்பாக பம்பாய்) பார்த்திருக்கலாம். அரசின் தொல்பொருள் இலாகாவின் மெத்தனமான ஆமை வேகப் பராமரிப்பு நடவடிக்கைகளால் ஆயுளை இழந்து வரும் இந்த அழகிய பிரம்மாண்டம் இந்திய, இத்தாலிய, முகமதிய கட்டிடக் கலைகளின் சங்கமமாகும். கி.பி. 1636ல் கட்டப்பட்ட இந்த அரண்மனையின் பெரும்பகுதி கால வெள்ளத்தில் மறைந்து விட்ட போதிலும் எஞ்சிய பகுதி நமக்கு வியப்பையும், இன்பத்தையும் ஊட்டுவதாக இருக்கிறது. இதனை அரசு எந்த வகையிலாவது பாதுகாத்தே ஆக வேண்டுமல்லவா?



படிப்பகம்

www.padippakam.com



## கவிஞர் அஜந்தா

தமிழில் : எஸ்.ஏ.பி.

சுற்றிலும் யாருமே இல்லை
பள்ளிச் சிறுவன் தனது புத்தகத்தை மூடிவிட்டான்,
தெருப்பாடகன் தனது பாட்டை நிறுத்திவிட்டான்,
அனைவரும் அவரவர் வீடுகளுக்குள்.

மரண வியாபாரிகள் தங்கள் ஆயுதங்களை
ஓரம் சாத்தி வைத்திருக்கிறார்கள்,
மர்ம உலகின் வாசலில் பிசாசுகள் நுழைகின்றன,
ஆட்சியாளர்கள் ரத்தம் தோய்ந்த தங்கள்
கைகளைக் கழுவிச் சுத்தம் செய்தனர்
அனைத்தும் அமைதியாயிருக்கிறது.

அவர்கள் கண்ணாடி வழியே பார்க்கிறார்கள்,
மக்களிடையே உள்ள முரண்பாடுகளை
உன்னிப்பாய்க் கவனித்து கலகத்தை உருவாக்குகிறார்கள்;
மரண ஓலம் கேட்குமுன்பே அவர்கள்
தங்கள் கதவுகளை மூடிக் கொள்கிறார்கள்.

நிலவொளியில் தங்கள் குடிசை முன்பு அமர்ந்து
தொழிலாளர்கள் தங்கள் கண்ணீரை உலர்த்துகிறார்கள்,
கைதிகள் சிறைக் கம்பிகளுக்கிடையே நெளிகிறார்கள்,
தெருவோரங்களில் பிச்சைக்காரர்கள்
வால் போஸ்டர்களுக்குள் தூங்குகிறார்கள்
சுற்றிலும் ஒருவருமில்லை.


படிப்பகம்

www.padippakam.com



பிளாட்பாரவாசிகள் போஸ்டர் விஷ ஆடைகளைத்
தூக்கி எறிந்துவிட்டு, கண்ணீரில் நனைந்த
மார்புகளைச் சுவர்களில் தொங்கவிடுகிறார்கள்.
நிலவறைக்குள் சோகங்களை மறைத்துவிட்டு
அனைவரும் நித்திரையில் வீழ்ந்துள்ளனர்.

எதையும் செய்யும் துணிச்சல் கொண்டோர்,
அரசியல் மோசடிக்காரர்கள், ஆட்சியாளர்கள்,
பொதுவானவர்கள், பலவீனப் பிறவிகள் -
அனைவருமே தூக்கத்தில்
ஒவ்வொருவரும் இரவின் அகதிகளாய்.

இப்போது கொடிகள் ஏதும் பறக்கவில்லை
கடிகாரம் எதுவும் ஒலிக்கவில்லை



படிப்பகம்

www.padippakam.com

சட்டங்கள் ஏதும் செயல்படவில்லை
எல்லோரும் இரவின் மடியில், துயிலில்.
வேறுபாடுகள் அனைத்தும் அகன்றது.
கொலையாளிக்கும் பலியானவனுக்கும்
அழகுக்கும் அசிங்க மிருகத்திற்கும்
மனிதர்க்கிடையே முள் வேலியில்லை.

வஞ்சகப் பாம்புகள் தங்களின்
சட்டைகளை உரிக்கும் நேரம் இதுதான்
காலவரம்புகளைக் கடந்த மர்ம ஆசாமிகள்
அவதாரமெடுக்கும் நேரமிது.
இரை தேடும் நரிகள் யாரையோ விரட்டி
பின் தொடர்ந்து செல்கின்றன.
வாழ்க்கை புலிப்பாய்ச்சலாய் இல்லை,
அனைவரும் ஆழ்ந்த நித்திரையில்.

பீரங்கிகளின் முழக்கம் நாளை கேட்கும்
போரின் பேரிரைச்சல் இப்போது கேட்காது
மனிதனை இரவு சவப்பெட்டியில் மூடாது.

பயமெல்லாம் காலையில்தான்
தபால்காரர் வரும்போது
கொலைகாரர்கள் எழுதிய கடிதம்
காலையில்தான் வந்து சேரும்.
தாயைச் சிதைத்த மகன்களுக்காக
அவளது மனம் கலங்குவதில்லை.
ஒரு நண்பனின் துரோகம்கூட
நமக்கு இரவில் புரியவே புரியாது.

நம்பிக்கைகள், ஏமாற்றங்கள், ஏக்கப்
பெருமூச்சு, ரத்தக்கறைகள், பொறாமை,
ஆத்திரம், எதுவுமே துன்புறுத்துவதில்லை.
எங்கும் அமைதி தவழுகிறது; ஆனால்
துடிதுடிக்கிறது ஒரு இதயம் மட்டும்.



*– நன்றி : இந்தியன் லிட்டரேச்சர்*



படிப்பகம்

www.padippakam.com

செம்மலர்
நவம்பர்
2001
சரம் : 32
மலர் : 7

# வென்றவர் கடமை

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிவுகளும் வந்துவிட்டன. வாக்காளர்கள் தங்கள் விருப்பங்களை வாக்குச்சீட்டின் மூலம் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களின் சிந்தையில் இருப்பதெல்லாம் தங்களின் வாழ்க்கைக்கு ஆதாரமான தேவைகளெல்லாம் நிறைவேறிட வேண்டும் எனும் எளிய ஆசைகள்தாம்.

சாலை, குடிநீர், மின்விளக்கு, தொகுப்பு வீடுகள், சுகாதாரம் முதலானவை தங்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும் என்பதே சாதாரண மக்களின் சாதாரண ஆசையாக இருக்கிறது. இதனை வெற்றி பெற்றவர்கள் உணர்ந்து செயல்படுவது முதற்பெரும் கடமையாகும்.

அரசியல் காழ்ப்புகளுக்கு அப்பால் உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்களையும் நிதியையும் மத்திய, மாநில அரசுகள் வழங்கிட முன்வர வேண்டும்.

ஊழலற்ற, திறமையான நிர்வாகம் என்பது மக்களின் நீண்ட காலக் கனவாகவே நீடிக்கிறது. இது மாறி வருங்காலத்தில் தங்களின் வரிப் பணமானது முறையாக நலத் திட்டங்களுக்கே செல்கின்றன எனும் நம்பிக்கைநிஜத்தை வாக்காளர்கள் மனங்களில் விதைக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளில் தலித் மக்களும் பெண்களும் பெருவாரியாகப் பங்கேற்கும் வகையில் சாதீய ஒடுக்குமுறைக் கண்ணோட்டங்கள் ஒழிக்கப்பட்டு எல்லோருக்குமான புதிய ஜனநாயகச் சூழல் மலர்ந்து, மக்களாட்சி உறுதிப் படுத்தப்பட வேண்டும்.



படிப்பகம்

 www.padippakam.com – வி.சகாயராஜா

# குழந்தை

ஒவ்வொரு முறையும் இந்த ஆயுதம் என் மீது வீசப்படும்போது, அன்று இரவு சங்கர் நெஞ்சில் முகம் புதைந்து அழுவேன். கண்ணீர் பெருக்கெடுத்து அவரது மார்பு முடிகளை நனைக்கும். வலது கையால் தலையின் பின்பக்கத்தை இலேசாக அழுத்தியபடி,

"அழாதே சுசி...." என்பார்.

ஒரு பெண், குழந்தை பெற்றுக் கொள்ள முடியாதது அப்படி என்ன கிரிமினல் குற்றமா? இந்தியக் குற்றவியல் சட்டப் புத்தகங்களில் அப்படி ஏதும் குறிப்பிடப்படவில்லையே! பின்னர் ஏன் இந்தச் சமுதாயம் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் என்னை மலடி என்று தீயால் சுட்டுப் பொசுக்குகிறது?

படுக்கையில் எனது விசும்பல் ஓயும் வரை விழித்திருந்து தலையை வருடிக்கொண்டே இருப்பார். அப்படியே மெல்ல அயர்ந்து உறங்கிவிடுவேன்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர், எனக்கும் பொறியாளரான சங்கருக்கும் திருமணம் நடந்தது. எனது இல்லறப் பயணம் இனிதாகவே தொடங்கியது. சங்கர் ஒரு ஜென்டில்மேன். முன்கோபக்காரியான எனக்கு ஒரு அமைதியான, பக்குவமான கணவன் வாய்த்தது அதிர்ஷ்டமே.

அவரை நானும், என்னை அவரும் நன்றாகவே புரிந்து கொண்டோம். குழந்தை பிறப்பதை ஒராண்டுக்கு தள்ளிப்போடுவது என இருவரும் சேர்ந்தே முடிவு செய்தோம். எங்களின் முடிவை எவரிடமும் சொல்லவில்லை.

ஆனால் இரண்டாவது மாதமே நச்சரிப்புகள் ஆரம்பமாயின. ஊரிலிருந்து அம்மா வந்தாள். சமையலறையில் வேலையில் இருந்த என்னிடம் மெதுவாக,

"என்னம்மா சுசிலா... ஏதும் உண்டா?" என்றாள்.

எனக்கு விஷயம் புரிபடவில்லை.

"என்னம்மா... என் வீட்டுக்கு வந்துட்டு ஏதும் உண்டான்னு




படிப்பகம்

www.padippakam.com

கேட்கிறாயே. உன்னைச் சும்மா அனுப்பிடுவேனா? மதியம் வடை, பாயாசத்தோடு விருந்து கொடுத்துத் தான் அனுப்புவேன்" என்றேன்.

"அடி மடக்கழுதை... புதுசா கல்யாணம் ஆன பெண்ணை ஏதும் உண்டான்னு கேட்டால் மாசமா இருக்கியான்னு அர்த்தம்" – அம்மா பொய்க் கோபத்தோடு தலையில் கொட்டினாள். நான் புரிந்து கொண்டு விழுந்து விழுந்து சிரித்தேன்.

"இல்லம்மா... அதுக்குள்ள என்ன இப்ப. ரெண்டு மாசம் தான ஆகுது. நீ வேற..." அதற்கு மேல் வெட்கம் தடை சொல்ல அங்கிருந்து நழுவினேன்.

நச்சரிப்புகள் அம்மாவோடு நிற்கவில்லை.

"மருமகளே! சீக்கிரம் எனக்கு ஒரு பேரனைப் பெத்துக் கொடு" – மாமனார்.

"அண்ணி, மருமகன் எப்போ?" – நாத்தனார்.

"தங்கச்சி... எனக்கு மருமகள்தான் வேணும்" – அண்ணன்.

அட என்ன இது பெரிய ரோதனை. எனக்கும், எனது கணவருக்கும் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு கிடையாதா? கணவனுக்கும், மனைவிக்குமிடையே உள்ள தனிப்பட்ட விஷயங்களில் இவர்கள் ஏன் நிர்ப்பந்தம் செலுத்துகிறார்கள்? எனக்கு கோபம் வந்தது.

எங்கு சென்றாலும் "விசேஷம்" உண்டா? என்ற விசாரிப்புகள் எங்களுடைய ஓராண்டு தள்ளிவைப்பு தீர்மானத்திற்கு முடிவு கட்டின. குழந்தை பெற்றுக் கொள்வதென முடிவு செய்தோம்.

நாட்கள்தான் நகர்ந்தனவே தவிர, நான் 'உண்டான' பாடில்லை. அதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. குழந்தை பெற்றுக் கொள்வதை மறுதலித்தது எங்களுடைய உரிமை எனில், எங்களுக்குப் பிறப்பதை மறுதலிக்கும் உரிமையை குழந்தை எடுத்துக் கொண்டதோ?!



எங்களுக்கு மனதில் அச்சம் ஏற்பட்டது. மாதங்களும், ஆண்டுகளும் நகர்ந்தன.

அலோபதி, ஹோமியோபதி, சித்தா என்று எல்லா மருத்துவமும் பார்த்தாயிற்று. ஒவ்வொரு டாக்டரும் ஒவ்வொரு விளக்கம் சொன்னார்கள். எல்லா தெய்வங்களிடமும் வேண்டுதல்கள் வைத்தாயிற்று. கருதான் உண்டாகவில்லை. ஆனால், குழந்தைக்கு பதிலாக மலடி என்ற ஆயுதம் பிறந்தது.



படிப்பகம்

www.padippakam.com

எனது வீட்டிற்கு ஓடி வரும் பக்கத்து வீட்டுக் குழந்தை பிரபாவை ஆசையோடு தூக்கிக் கொஞ்சினால், உடனே அந்த வீட்டினுள் இருந்து "பிரபா இங்க வாம்மா.. சாப்பிடுற நேரமில்லையா?" என்று சத்தம் கேட்கும்.

வீட்டில் மாமியாரிடம் ஏதாவது சிறு சண்டை வந்தால் போதும், "எல்லாம் நாலு குழந்தை பெத்து, நல்லது கெட்டது பாத்தாத் தெரியும், முடியாதவளுக்கு வாயைப் பார்" - என்று சாடுவாள்.

சங்கருக்கும் என்னைப் போன்றே சித்ரவதை சாடல்கள். ஆனால் அவர் துயரத்தை வெளிக்காட்டிக் கொள்வதில்லை.

குழந்தை இல்லையே என்ற ஏக்கத்தில் துயருற்றிருந்த எனக்கு, சங்கருக்கு அடுத்தபடியாக ஒரு சுமைதாங்கி இருந்தது. அந்த சுமைதாங்கியின் பெயர் சூசைப்பாட்டி. எனக்கு மிகப்பெரிய ஆறுதல் சூசைப்பாட்டி. எழுபது வயதிலும் கூட உழைத்துச் சாப்பிடும் ஒரு ஏழைக் கிழவி. எனது புலம்பல்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டு எனக்கு ஒரு வடிகாலாக இருப்பாள்.

"கவலைப்படாதே சுசீலாம்மா... உனக்கு நிச்சயம் குழந்தை பிறக்கும். மாதாவிடம் உனக்காக வேண்டியிருக்கேன்" என்று அவ்வப்போது ஆறுதல் சொல்லித் தேற்றுவாள்.

எனது வீட்டின் எதிரே அவளுடைய சிறிய பெட்டிக்கடை இருந்தது. அருகில் அவளுக்கு ஒரு சிறிய குடிசை வீடு. இரவு நேரங்களில் பெட்டிக்கடை முன்பாகவே ஒரு கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கொள்வாள்.

எனக்கும் சூசைப்பாட்டிக்குமிடையே நெருக்கமான நட்பு வளர்ந்தது. அவளுடைய துயரங்களையும் என்னிடம் பகிர்ந்து கொள்வாள். அவளது கணவர் பல வருடங்களுக்கு முன்னரே இறந்து போய்விட்டார். அவளுக்கு ஜார்ஜ் என்ற ஒரே மகன் இருந்தான். மில் ஒன்றில் வேலை பார்த்துவந்த அவன் ஒரு பகல் குடிகாரன். திருமணம் செய்து வைத்தால் திருந்திவிடுவான் எனப் பலரும் சொல்லியதைக் கேட்டு, திருமணம் செய்து வைத்தாள். அவனிடம் அடி,

**கமிஷனர்: கள்ளச்சாராயம் குடிச்சு அம்பதுபேர் செத்தது தொடர்பா அந்த இன்ஸ்பெக்டரை ஏன் சஸ்பெண்ட் செய்யலே?**

**டி.எஸ்.பி: "செத்துப்போன ஐம்பது பேரில் அவரும் ஒருத்தர் ஸார்..."**



**- உ.ராஜாஜி**



படிப்பகம்

www.padippakam.com

உதை தாங்காமல் அவனுடைய மனைவியும் பெற்றோரிடம் ஓடிப் போய்விட்டாள். அவனும் அவளைத் தேடவில்லை. விட்டுவிட்டான். ஒரு நாள் இரவு மிதமிஞ்சிக் குடித்துவிட்டு லாரியில் அடிபட்டுச் செத்துப் போய் விட்டான்.

சூசைப்பாட்டிக்கு என்று உறவுகள் வேறு யாருமில்லை. பெட்டிக் கடையில் கிடைக்கும் வருமானம்தான்.

சங்கர் வேலைக்குப் போன பின்னர் சூசைப்பாட்டி என்னிடம் வந்து பேசிக் கொண்டிருப்பாள். கைவைத்தியமாக சில ஆலோசனைகள் சொல்வாள். அன்பான வார்த்தைகளால் தேற்றுவாள்.

ஒருநாள் அதிகாலையில் காலிங் பெல் அடித்தது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த நான் எழுந்து சன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தேன். சூசைப்பாட்டி குளித்து முடித்து, வெள்ளைப் பஞ்சுமுடிகள் முக்காட்டையும் மீறிப் பறக்க நின்று கொண்டிருந்தாள். மாதா கோவிலுக்குப் போய் வந்திருப்பாள் போல.

"என்ன பாட்டி, வாங்க" வெளியே வந்து மெயின் கேட் கதவைத் திறந்தேன்.

"என்னம்மா சுசீ... இன்னைக்கு என்ன நாள்? சீக்கிரம் எழ வேண்டாமா?" - செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"ஆமா. இன்னைக்கு என்ன நாள்? - எனக்குள் யோசித்தேன். அட, இன்று எங்களுடைய திருமண நாள். எப்படி மறந்து போனேன்? சங்கருக்கும் நினைவில்லாமல் போய்விட்டதே. வருடம் முழுமையும் குழந்தை ஏக்கத்திலேயே கழிந்து இருவருக்கும் திருமண நாள் கூட மறந்துபோய் விட்டது.

சுசீலாம்மா, போன வருஷம் உன்னோட திருமண நாளுக்கு எனக்கு ஒரு சேலை வாங்கிக் கொடுத்த. என் மகன்கூட எனக்கு வாங்கிக் கொடுத்ததில்ல. என்னோட மகள் நீ சேலை வாங்கிக் கொடுத்த நாளை மறப்பேனா? உனக்காக இன்று மாதாவிடம் போய் வேண்டிக்கிட்டு வந்தேன்".

உள்ளங்கையில் மடித்து வைத்திருந்த சில ரோஜா இதழ்களை என்னிடம் கொடுத்தாள். முழந்தாளிட்டு சூசைப்பாட்டியின் ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டேன். வற்றாத அருவியாக சுயநலமின்றி என் மீது அன்பு செலுத்தும் அவளுக்கு நான் என்ன கைமாறு செய்யமுடியும்?

அன்று இரவு சங்கரின் வலது தோளில் வழக்கம் போலப் படுத்திருந்தேன். வழக்கம்போல நான் காயப்பட்டிருப்பதாக நினைத்து தலையை வருடினார்.

"என்னங்க..."

"என்ன சுசீ?"

"எனக்கு ஒரு குழந்தை வேணுங்க"

"என்னம்மா சிறுபிள்ளை மாதிரி பேசுற. அதுதான் முடிந்துபோன விஷயமே"

"இல்லைங்க. இப்ப நீங்க முடிவு செஞ்சா எனக்கு ஒரு குழந்தை கிடைக்கும்"

சங்கர் எழுந்து உட்கார்ந்தார்.

"என்ன சொல்ற சுசீ...?"

"ஆமாங்க. எனக்குக் குழந்தை வேணும். அதோட பெயர் சூசைப் பாட்டி".



படிப்பகம்

சங்கரின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"ஆமாங்க, வயசானவங்களும் குழந்தைகள் மாதிரிதான். சூசைப் பாட்டிக்கு யார் இருக்கா? திடீரென்று அவளுக்கு முடியாமல் போய்விட்டால் யார் பராமரிப்பார்கள்? ஆதரவில்லாத சூசைப்பாட்டியை என்னோட குழந்தை மாதிரி பாத்துக்க விரும்பறேங்க. அந்த முதிய குழந்தையை நாம தத்து எடுக்கணுங்க. அவளோட கடைசி மூச்சு என்னோட மடியிலதாங்க பிரியணும். சுயநலமில்லாமல் அன்பு செலுத்தும் சூசைப்பாட்டிக்கு ஒருசில ஆண்டுகளாவது தாயாக இருக்கும் பாக்கியம் எனக்கு வேணுங்க. நமக்கு எப்போது வேண்டுமானாலும் குழந்தை பிறக்கட்டும். அதுவரை சூசைப்பாட்டிதான் இனி நம்மோட குழந்தை".

சங்கர் மகிழ்ச்சியோடு என்னை இறுக அணைத்து, எனது முடிவை ஆமோதித்தார்.

■

# தாய்



அம்மா...
அடுப்படியும் கரும்புகையும்
உன் சுவாசம்
சாணிப் பாலிலும் சாம்பலிலும்
உன் வாசம்!
காரம் தூக்கல்
அப்பாவின் சுவை
காரம் கூடினால்
தாத்தாவிற்குக் குறை
கிச்சடியில் மயங்கும்
அண்ணான்
ஜீராவில் உருகும்
தம்பி!
இன்னும்
உறவுச்சுவை நட்புச்சுவை
உனக்கெது சுவை?
கூட்டிப்பெருக்கி
விளக்கிக் கழுவி
வெம்பி வெதும்பி
தலையில் நரை தோன்றியும்
மூன்றாம் தலைமுறை
பீத்துணி கசக்கி
இயங்கிக் கொண்டே
இருப்பவளே...
எப்போது
இயக்கப் போகிறாய்?

—ஜி.கே.ராஜா,
ஆலங்குடி



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# ஈ.வே.ரா. வாழ்ந்த நாட்டில் இன்றும்...

நெருங்கிவந்து நன்மைகள் செய்ய வேண்டியது அரசின் கடமைகள். கல்வி தரவேண்டும். கலாச்சார விழிப்புணர்ச்சி தர வேண்டும். மருத்துவம் தரவேண்டும். தொகுப்புவீடுகள் தரவேண்டும். மின்சாரம் தரவேண்டும். உலகப்பிணைப்பு இருக்கும் நிஜம் சொல்லவேண்டும்.

இதெல்லாம் செய்யாத அரசு, தனித்தொகுதி என்று புதுவிதியை திணிக்கமட்டும் வந்தால், மக்கள் எதிர்க்கத்தானே செய்வார்கள்?

'ஒரு தலித்தே ஊராட்சித்தலைவராக வேண்டும்' என்ற தனித்தொகுதிக்கு வரலாற்று ரீதியான நியாயம் இருப்பதையெல்லாம் உணர்த்தத் தவறிய அரசு விதியை மட்டும் திணிக்கிறபோது, எதிர்ப்பவர்களின் சீற்றத்தில் ஒரு நியாயம் இருப்பது போலத் தெரிகிறது.

"எங்களுக்கு எதுவும் செய்யுறதுக்கு எட்டிப்பார்க்காத கவர்மெண்டு, இம்புட்டு காலமா எங்க போச்சு? இப்பவந்து இது ரிசர்வ் தொகுதின்னா.... நாங்கள் எப்புடி ஒத்துக்கிடுவோம்?"

சாலையேயில்லை. அத்திப்பூ மாதிரி டவுன்பஸ். கிணறு இருந்தால் பச்சை. இல்லாத நிலம் பொட்டல். வானம் பார்த்த பிழைப்பாக நிலமும் மக்களும். உருப்படியான கல்விச்சாலைகள் கிடையாது. ஒரு தொழிற்சாலைகூட கிடையாது. மம்பட்டியை நம்பித்தான் வயிற்றுப்பாடு.

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு (M.B.C) இலவசத் தொகுப்பு வீடுகள் உண்டு என்கிற செய்திகூட அந்த மக்களை எட்டவில்லை என்பது அரசின் கல் மனதுக்கும், பாராமுகத்துக்கும் ஒரு சான்று.

உசிலம்பட்டி வட்டத்துக்குட்பட்ட கிராமங்கள் இப்படித்தான்

மேலாண்மை பொன்னுச்சாமி



படிப்பகம்

www.padippakam.com



இருக்கின்றன. எந்த அரசியல் கட்சிகளின் கொடிகளும் தென்படவில்லை. நாட்டாமங்கலம், கீரிப்பட்டி, பாப்பாபட்டி ஆகிய மூன்று ஊராட்சிகளிலும் ஊராட்சித்தேர்தலே இல்லை. வேட்புமனுவே வரவில்லை. 'தலித்துகள் மட்டுமே வேட்பாளராகவும் இருக்கமுடியும். தலித்தே தலைவராக வர முடியும்' என்று ரிசர்வ் செய்யப்பட்ட ஊராட்சிகள். யாரும் வேட்பு மனு செய்யவில்லை என்று வந்த பத்திரிகைச் செய்திகள்.

பி.யூ.சி.எல்.லின் ரவிக்குமார் தலைமையில் ஓர் உண்மையறியும் குழு சென்றது. உசிலம்பட்டி வட்டத்திலுள்ள இந்த மூன்று ஊராட்சிகளுக்கும்.

அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டிருக்கிற மிகவும் பிற்பட்ட மக்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்கிவைத்திருப்பதைக் கண்டுணர முடிந்தது.

'தாயாய் பிள்ளைகளாய் வாழ்கிறோம். இந்த ஒற்றுமையை தேர்தல் பாழாக்கிவிடுமே என்று அவர்களாகவே வேட்புமனு தாக்கல் செய்யாமல் மௌனமாக ஒதுங்கிக்கொண்டார்கள்' என்று ஊர்மக்கள் முழுமையும் ஒரு குரலில் கூறினாலும். தலித் பகுதியில் விசாரிக்கிறபோது. உண்மை வேறாக இருக்கிறது.

அச்சுறுத்தப்பட்டுத்தான் வேட்புமனு தாக்கல் செய்யபபடாமலிருக்கிறது என்ற உண்மைகள் மெல்லமெல்லக் கசிந்தது.

பயந்துபயந்து பேசுகிற தலித்துகள் மிகவும் தயங்கித் தயங்கித்தான் மனம் திறக்கின்றனர்.

காய்ந்த பூமியில் மனித உரிமைகளும். ஜனநாயக உணர்வும் கருகிக்கிடக்கின்றன. அரசின் வஞ்சகத்தனமான மோசடிகளாலும், பாராமுகக் குரூரத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கிற கிராம மக்கள், தலித்துகளை 'ஒடுக்கி' வைப்பதை 'இயல்பான உரிமையாகக்'கருதுவது ஆச்சரியமான அதிர்வாக இருந்தது.

> பிள்ளைக்கு "அம்பேத்கார்" என ஆசை ஆசையாக பெயரிட்டுவிட்டு.... பள்ளியில் சேர்க்க வேறு ஒரு பெயர் தேடுகிற அச்சத்தை என்னவென்பது?

நில உடைமைகொண்ட சிறு. மத்தியதர விவசாயிகளின் நிலங்களை நம்பி மட்டுமே தலித்துகள் உயிர்வாழமுடியும் என்ற நிஜ நிலவரப்பயங்கரமே அவர்களை ஊமை மக்களாக



படிப்பகம்

ஒடுக்கிவைத்திருக்கிறது. பறிபோகிற ஜனநாயக உரிமையின் ரணத்தை உணர்ந்து துடித்தாலும், "ஐயோ, வலிக்குதே" என்று கத்தவும்கூட அஞ்சுகிறார்கள்.

அவர்கள் உள்ளுக்குள் வலியால் மௌனமாகத் துடிக்கிறார்கள் என்பதை உலகுக்குச் சொல்லவே இன்று ஜனநாயக உணர்வு படைத்த சிந்தனையாளர்குழு ஒன்று தேவைப்படுவது, இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய சோகம்.

பார்த்துணர்ந்த அனுபவங்கள் பலப்பல. எதைச்சொல்ல? எப்படிச்சொல்ல?

பிள்ளைக்கு "அம்பேத்கார்" என ஆசை ஆசையாக பெயரிட்டுவிட்டு.... பள்ளியில் சேர்க்க வேறு ஒரு பெயர் தேடுகிற அச்சத்தைச் சொல்லவா?

பாப்பாப்பட்டியில் வேட்புமனு தாக்கல் செய்ய முயன்று இயலாமல் போன நரசிங்கம் என்ற அதிமுககாரர் கட்சி உதவியும் கிட்டாமல் அச்சத்தில் உறைந்திருக்கிற பயத்தைச் சொல்லவா?

நாட்டாமங்கலத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய முயன்று முயன்று மிரட்டப்பட்ட துரத்தப்பட்ட கதைகள் ஒன்றா, இரண்டா? எதைச் சொல்ல? எதைவிட?

இங்கெல்லாம் தலித்துகள் அச்சுறுத்தப்படுகிறார்கள் என்றால், மேலவளவில் வேறு ஒரு விஷயம்.

**உண்மை அறியும் குழுவில் இடம் பெற்றோர்:**

ரவிக்குமார், பொன்னீலன், மேலாண்மை பொன்னுச்சாமி, இராசேந்திர சோழன், பா.கல்யாணி, ஆ.சிவசுப்பிரமணியன், காலச்சுவடு கண்ணன், ஜவஹர், சுரேஷ், ஆசைத்தம்பி, அய்யனார்.

தலித் வேட்பாளர்கள் ஐவர். அதில் ஒரு பெண். காங்கிரஸ் இயக்கத்தில் சமுதாய நடவடிக்கையில் இயங்கிய அனுபவமுள்ள ஒரு பெண்.

அவர் தேர்தலில் நிற்பதை தலித்துகளே எதிர்க்கிறார்கள். பெண்ணுரிமை பறிக்கப்படுகிற கொடுமையையும் காணமுடிகிறது

பாப்பாப்பட்டியில் பிற்பட்ட சமூகத்தில் ஒருபகுதியினர் தலித்துகளுக்கு ஆதரவாக நிற்பது ஆறுதலாக இருந்தது.

சாதியத்திற்கெதிரான மிகப்பெரிய பண்பாட்டு இயக்கம் தேவைப்படுவதை உணரமுடிகிறது. தலித்துகளுக்கு நிலம் தேவை என்பது வயிற்றோடும் வாழ்வோடும், வாழ்வுரிமையோடும் இணைந்த விஷயம் என்று உணரமுடிகிறது.

பெண்ணுரிமைக்கான போர் தேவைப்படுவதை உணர முடிகிறது.

இத்தனை போர்களுக்கும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் ஒரு பகுதியினர் ஜனநாயக உணர்வுடன் கை தருவார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. ■



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# நாற்றங்கால் நாற்றங்கால் நாற்றங்கால்...

இராமேஸ்வர ரயிலில்
கட்டையடித்துக்
கத்திப்பாடிய
முடவனுக்குப் போட
மறுதலித்த கைகள்
கடலில் வீசின
நேர்த்திக்கடன்!

—பட்டுக்கோட்டை ராஜா

மீண்டும் என்று கிடைக்குமோ
பத்திரமாய்ப் பாதுகாக்க
வேண்டும்
நீ தந்த முத்தம்.

—குவளை. பி.வீரமணி

உதிர்ந்தாலென்ன இலைகள்
மறுபடியும் துளிர்க்கும்
வேர்களில் இருக்கிறது நம்பிக்கை.

—முகவை முனீஸ்,
இராமேஸ்வரம்

தட்டாமல் திரும்பினேன்
கதவில் தொங்கிய
கனத்த பூட்டு.

—வீ.விஷ்ணுகும
கிருஷ்ண



படிப்பகம்

www.padippakam.com

கம்பியில்லாத ஜன்னல்தான்
அனுமதி கேட்கிறதே தென்றல்
இடைமறிக்கும் சிகரெட் புகை.

—இளஞ்சேரல்,
கோவை.



ஈக்கள் மொய்த்தும்
ஆரோக்கியம் கெடவில்லை
தேன்.

—சி.விநாயகமூர்த்தி,
பழனி

பூ எங்கு பூத்தாலும்
பூ தானே?
இதயத்தில் பூக்கும்போது
மட்டும் ஏன்
பெயர் மாறி விடுகிறது -
காதலென்று?

—மைதிலி,
மதுரை.



ஆளான தங்கைக்கு
தென்னங்கீற்றில்
ஓலை முடிந்து
'மறசல்' கட்ட ஆசைதான்.
அனுமதிப்பார்களா
சாலையோரக்
காவலர்கள்?

—இளையமுருகன்,
பரமக்குடி

படிப்பகம்

## தமிழன்பனின்

# அமெரிக்கா என்று அமெரிக்கா

தமிழன்பன். திரு தமிழண்ணலுடன் 51 நாட்கள் அமெரிக்காவில் இருந்திருக்கிறார். 56 கட்டுரைகள் என்று சொல்லுமளவுக்கு வரிசையாக அதை நூலாக எழுதியுள்ளார்.

கவிதைப் புத்தகம் படிப்பது போல ஒரு அனுபவம். கட்டுரை நூல் படித்தது போலத் தோன்றாது. கவியரங்கம் போல ஒரு இனிமை, புரிய வைக்கும் அழுத்தம், சலிப்பில்லாத சிந்தனையைக் கிளை கிளையாகப் பிரியச் செய்யும் சொல்லாட்சி.

விமானத்தில் பறக்கும்போதும், டாலர் நாட்டின் வளங்களைப் பார்க்கும் போதும், ஈரோடு தமிழன்பனுக்கு நம் நாட்டு மக்களின் ஏழ்மையும், வறுமையும் சிந்தனைக்கு வருவதை எழுதிச் செல்கிறார்.

அமெரிக்காவுக்குச் செல்கிற பயணிகள் 2 பெட்டிகள் 2 தோள் பைகள் கொண்டு செல்ல



லாம் என்று கூறும் இடத்தில் 'கட்டு' ஒன்று கொண்டு சொல்வதாகச் சொல்கிறார். உடனே, கட்டு, இக்கட்டு, இக் கட்டு என்று பிரித்தும் சேர்த்தும் பொருள் வேறுபடக் கையாளுகிறார். இது அவருடைய நடை உத்தியின் சிறப்பு.

அமெரிக்காவில் ஏக்கர் கணக்கில் நிலம் வாங்கி வீடுகள் கட்டியுள்ளதைச் சொல்லி நகர் இல்லங்கள் (MOBILE HOUSE) இருப்பதையும் சொல்கிறார்.

அமெரிக்காவின் குறியீடாக உள்ள விடுதலைச் சிலையைப் பார்க்கிறார்கள். அதைப் பார்த்ததாக மட்டும் அவர் சொல்லவில்லை. அது பாரிசில் உருவாகிய வரலாறு, அதை வடித்த பிரெடெரிக் அகஸ்டி பார்தோடி எனப் பல செய்திகளைச் சொல்கிறார். உடன் அமெரிக்கப் பெண்கள் அச்சிலையைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை என்ற ஒரு சோகத்தையும் சொல்கிறார்.

குற்றங்கள் நிறைந்த ஊர் என்று நியூயார்க்கைப்பற்றிச் சொல்லிவிட்டு, அதற்கு ஆதாரமாக அங்கேயே சொல்லப்படும் கதையைச் சொல்கிறார். இப்படிப் பல ஊர்களில் வழங்கும் அவ்வவ்வூருக்குப் பொருத்தமான கதைகளைச் சொல்கிறார்.

ஐ.நா. சபையின் குறிப்பேட்டில் ஒரு வாய்ப்புக் கிடைத்ததும் 'தமிழ்' என்று பதியவைத்து விட்டு வந்துள்ளார். அதை உயிர்ப்போடு சொல்லியிருக்கும் தமிழன்பனுடைய மனம் நம் பாராட்டுதலுக்குரியது.

'காபி குடித்தேன்' என்பதைக் 'காலை இளங்கதிர் காபி கோப்பையையும் என்னையும் அடுத்தடுத்துத் தொட்டது' என்று சொல்வது வாசிப்பு சுகம் தருகிறது.

ஆங்கிலச் சொற்களை ஆங்காங்கு தூய்மையான எளிமையான தமிழ்ச் சொற்களால் எழுதிக்கட்டுரையை



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

நகர்த்துகிறார். எரிநெய் நிலையங்கள், நெடுஞ் சாலை உணவு விடுதி கள், ஏமக்குறை போன்ற தமிழ்ச் சொற்கள் நம் மனதுக்குப் பனிக் குளிர்ச்சி அமெரிக்காவில் ஆங் காங்கு எழுதிய கவிதை களில் சில அழுத்தமான வரிகளைச் சூழலுக் கேற்ப வழங்குகிறார்.

அமெரிக்காவில் தமிழ்க் குழந்தைகள் தமிழ் தெரி யாமல் இருப்பதை எண்ணி வேதனைப்படுகிறார்.

வண்டி ஓடுவதை 'வெண்ணெய் நதியில் விரல்கள் நகர்வது போல்' என்று வர்ணிப் பது போலப் பல உவ மைகள்.

தலைவர்கள், தொழிற் சாலைகள், பிரபல மானவர்கள் தோன்றிய இடங்களையெல்லாம் பார்ப்பதைவிட வால்ட் விட்மன், பெஞ்சமின் பிராங்லின் ஆகிய படைப் பாளிகளின் பிறப்பிடம் வாழ்ந்த இடம், மறைந்த இடங்களைப் பார்ப்பதி லேயே தமிழன்பனுக்கு ஈடுபாடு அதிகம் இருப் பதை உணர முடிகிறது.

அமெரிக்காவின் குற் றங்குறைகளை, மற்ற நாடுகளை எப்படித் தனக்குக் கீழ் வைத் துக்கொள்ள விரும்பு கிறது என்பதையெல் லாம் ஆங்காங்கு குறிப் பிட்டுப் பதிவு செய்கி றார். உதாரணமாக, 'ஹ்யூஸ்டன்' மாநகரம் எண்ணெய் வளம் நிறைந் தது. ஆனாலும் அமெ ரிக்கா அதைப் பயன் படுத்தாமல் அரபு நாடு களில் எண்ணெய் வாங் குகிறது. அரபு நாடு களில் எண்ணெயின் கடைசிச் சொட்டும் தீர்ந்தபிறகு, தனது கடையைத் திறக்கலாம். திறந்தால் டாலரைக் குவித்துவிடலாம் என்ற அமெரிக்காவின் பேராசை தான் அதற்குக் கார ணம் என்ற ஒரு செய் தியைச் சொல்கிறார்.

அமெரிக்காவின் அறிவியல், கலையியல், சமுதாய இயல், வரலாற்று இயல், உளவியல் ஆகிய அனைத்தும் ஒரு தெளிந்த கண்ணோட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு நூல் என இந்த 'அணைக் கவா என்ற அமெரிக்கா' நூலைச் சொல்லலாம்.

டாக்டர் ***மா.நடராசன்***

வெளியீடு: பூம்புகார் பதிப்பகம், 63, பிரகாசம் சாலை (பிராட்வே), சென்னை – 600108. விலை ரூ.100.

ஹைக்கூக்கள்



திருடர்கள் ஒளிய சந்துகள் உண்டு
எங்கள் தெருவிலும்
இந்தியச் சட்டங்களிலும்

நிறைகுடம் என்றாலும்
தள்ளாடும்
முதுமை.

வீடு பூட்டியிருக்க
எப்படி தப்பிச் சென்றது?
விளக்கேற்றியதும் இருள்

குடியிருக்கும் மரங்களை
பறவைகளே நடுகின்றன
தின்ற பழங்களின் விதை தூவி. .

கோட்டான் குரல்
தேனாய் இனிக்கிறது
அதன் ஜோடிக்கு

அம்மி பறந்தோடிவிட்டது
ஆடிக்காற்றில் அல்ல
மிக்ஸி வந்ததால்

சி.விநாயகமூர்த்தி



படிப்பகம்

www.padippakam.com

# ஆனந்தாஸ்ரமம்

12

மாதாஜியைப் பார்க்க வருகிறேன் என்று அவரிடம் சொல்லுமாறு கருணானந்தாவிடம் கூறியபோது அவர் அலட்சிய பாவத்தோடு பதில் சொன்னார்.

"மாதாஜி ஆசிரமத்தில் இல்லை".

அதிகார தோரணையிலேயே கேட்டேன்.

"எங்கே போயிருக்கிறார்?"

என்னை நன்றாக ஏறிட்டு பார்த்தவரின் விழிகளில் மமதையின் சாயலைக் கண் டேன். தான் எனும் அகம் ஜெயித்து விட்ட தாக நினைப்பவரின் கண்களில் மட்டும் இருக்கக்கூடிய மமதை. சப்தத்தின் தொனியிலும் அது இருந்தது.


"திரிசூல திட்சைக்குப் போயிருக்கிறார்"

எனக்கு ஒன்றும் புரிபடவில்லை. இது என்ன புது விவகாரம்? அதிகார தோரணை மறைந்து ஆவலாதி பிறந்தது. அதை முகத்தில் வாசித்து

அர்ஜுனன்


படிப்பகம்

www.padippakam.com



விட்ட கருணானந்தாவிற்குள்ளும் அனுதாபம் பிறந்திருக்க வேண்டும். தவணை தவணையாகச் சொல்லி வந்தார் முழுவதுமாகச் சொன்னார்.

"குருஜி நான் எதிர்பார்த்ததுதான் நடந்திருக்கிறது. பரமானந்தாவைத் தன் பக்கம் இழுப்பதற்காக மாதாஜி திரிசூல இயக்கத்தை ஆதரிக்கக் கிளம்பி விட்டார். அது வீரத்துறவி ஸ்ரீனிவாசவரதனின் இயக்கம். அதில் சேருவோருக்கு தோள்பட்டையில் திரிசூல முத்திரை பதிப்பார்கள். இன்று



படிப்பகம்

அந்த விழா நடக்கிறது. அதற்கு ஆசி வழங்கப் போயிருக்கிறார்".

அந்தக் காலத்தில் வைணவர்கள் சங்கு சக்கரத்தை சூடு வைத்துக் கொள்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தக் காலத்தில்கூட ஒரு அரசியல் தலைவர் தனது கட்சிச் சின்னத்தை கையில் பச்சைகுத்திக் கொள்ளச் சொன்னதையும் அறிவேன்.

விசுவாசம் எனப்பட்டது மனத்தளவில் என்பதைத் தாண்டி இப்படி உடலளவில் காட்சிப் பொருளாக்குவதன் அவசியம் எதிலிருந்து வருகிறது? மனசைவிட மனிதத் தோல் அழிக்க முடியாததா? இல்லை. இதற்கு வேறொரு நோக்கம் இருக்க வேண்டும். வெளிப்படையான அடையாளம் பரஸ்பர அறிமுகத்திற்கும் செயல் ஒற்றுமைக்கும் வழிவகுக்கக்கூடும். இருக்கட்டுமே. நோக்கம் நல்லதாக இருந்தால் சூட்டால் வரும் தழும்புகூட நியாயமானதே. ஆனால் நோக்கம்...?

எனக்கு உள்ளூர மசமசவென்று கிளம்பியது கரும்புகையாகி மூச்சுத் திணறலெடுத்தது. எதற்கு திரிசூலம்? கிறிஸ்தவ தேவாலயத்திற்குச் சொந்தமான இடத்தைக் கைப்பற்றி சிவபெருமானுக்கு கோவில் கட்டவா? கைலாச நாதனுக்கு இப்படியொரு கஷ்டமா? படபடவென்று கேட்டேன்.

"இதனால் திட்சையென்று படைபலம் சேர்ப்பது சர்ச் இடத்தைக் கைப்பற்றத்தானா?"

இந்த வெகுளியைப் பார்த்து அவர் வெகுளியாய்ச் சிரித்தார்.

"வேறு எதற்காம்"?

எனது கண்களில் ஜனித்த ரௌத்ரம் கருணாளந்தாவையும் சுட்டிருக்க வேண்டும். உண்மையில் சேதன, அசேதனப் பொருட்கள் சகலத்தையும் சுட்டிருக்க வேண்டும். குடிலின் வாசலிலிருந்த செடிகளின் முகங்களும் கருகின. எனது உதடுகளிலிருந்து புறப்பட்ட சூடான சப்தம் காற்று மண்டலத்தை ஆவியாக்கியது. நியாயமான ஆவேசமே உண்மையான ஒளிவட்டம் என்றால் அது என் சிரசுக்குப் பின்னால் அமைந்தது.

"இதென்ன அநியாயம்? மதக் கலவரங்களுக்கு மாதாஜி துணை போவதா? ஆனந்தாஸ்ரமம் ஆனந்தத்தை அள்ளி வழங்கத்தான் இருக்கிறதேயொழிய துன்பத்தை அல்ல, சோகத்தை அல்ல. லோகத்தில் எங்கும் அழுகுரல் கேட்கக்கூடாது. அப்படி எங்காவது எழுந்தால் அதைத் தணிக்க ஓடுபவனே உண்மையான சந்நியாசி. இவனே மனித வாதைக்கு தூபமிடுகிறான் என்றால் இவன் சன்னியாசியே இல்லை. ஏன், மனிதனே இல்லை... மிருகம்... மிருகம்".

எனது கைவிரல்கள் நடுங்குவதை என்னால் தெளிவாக உணர முடிந்தது. குரலிலும் நடுக்கம் இருந்திருக்க வேண்டும். பயத்தால் வரும் நடுக்கம் அசிங்கமானது என்றால் ஆவேசத்தால் வரும் நடுக்கம்

போரில் கிடைக்கும்
வெற்றிக்குக் குறையாத வெற்றி
சமாதானத்திலும் கிடைக்கும்.

– ஜான் மில்டன்





www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

கம்பீரமானது. கருணானந்தா நன்றாகப் பார்த்துக் கொள்ளட்டும்.

பார்த்ததன் அடையாளமாய் அவர் கண்களில் தெரிந்த மிரட்சியைப் பார்த்தேன். மெல்லப் பின் வாங்கியவராய் எனது அறையை விட்டு அகன்றுவிட்டார். அதுவும் நல்லதுதான் என்று மலையேறிய சாமியாடியாய் அப்படியே ஆசனத்தில் சரிந்துவிட்டேன்.

"உலகின் நல்லவை அனைத்தையும் குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் தருவோம்"

*– லெனின்*



உடம்பு சரிந்தாலும் மனசு சரியவில்லை. அது இன்னும் வேகமாக ஓடியது. தொய்ந்து தளர்ந்த உடம்புக்குள் மனசானது மிகவும் வீரியமாக எழுந்தது. இது அதிசயம்தான். சடப்பொருளிலிருந்து இந்த மனசு வேறுபட்டதுதான். அது தன்னைத் தானே குறுக்கு விசாரணை செய்தது.

நேசம்பற்றி அவ்வளவு பேசினோமே. அவ்வளவு சிந்தித்தோமே இன்று காலிப் பானையானதே. மாதாஜியை நேசிக்க வேண்டுமென்று முடிவெடுத்தது என்ன. இப்போது அவர் மீதும், அவர் சேரும் இடம் மீதும் கடுங்கோபம் வருவதென்ன!

அந்தக் கதை நினைவுக்கு வந்தது. கொட்ட கொட்ட மீண்டும் மீண்டும் குளத்திலிருந்து தேளை எடுத்துவிட்ட துறவியின் கதை. கொட்டும் தேளிடமும் நேசம் காட்ட வேண்டுமா? எத்தனை முறை எடுத்துவிட முடியும்? ஒருமுறை செத்துப்போவேனே.

தர்மவான்களை நேசிக்கலாம். அப்பாவிகளிடம் அன்பு பாராட்டலாம். அதர்மவான்களை எப்படி நேசிக்க முடியும்? அவர்களை எதிர்த்துப் போராடவல்லவா வேண்டும். சக மனிதர்களை நேசிப்பதன் அர்த்தம் அதிலும் உண்டே! போராடுவதா? சந்நியாசி போராடுவதா? போராடுகிறவன் சந்நியாசி ஆவானா? உண்மையான சந்நியாசத்திற்காகப் போராட வேண்டாமா? அப்படியெனில் போலி சந்நியாசம் இருக்கிறதா? எதிலுமே நிஜமும் போலியும் இருக்கத்தான் செய்யும். இரண்டுக்கும் இடையிலான போராட்டமே மனித குல வரலாறோ? அன்று மாலைவரை எனது அறையைவிட்டு வெளியே வரவில்லை. வெளியே வந்தபோது உள்ளே போன மனிதன் அல்ல. வெளியே வந்திருப்பது என்பது எனக்கு மட்டும் தெரிந்திருந்தது.

கருணானந்தா மாலைப் பத்திரிகைகளோடு வந்தார். முதல் பக்கத்தில் அந்தச் செய்தி. "திரிசூல இயக்கத்தவருக்கு ஆனந்தாஸ்ரம மாதாஜி பூரண ஆசி!"

என்ன செய்ய வேண்டுமென்று பளிச்சென்று தோன்றியது. அந்த தேவாலயத்திற்குப் பொறுப்பான பேராயரைச் சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு கருணானந்தாவிற்கு கட்டளையிட்டேன். இதை அவர் கொஞ்சமும்



படிப்பகம்

www.padippakam.com

எதிர்பார்க்கவில்லை என்பது அவரின் புருவங்களின் நெரிசல் உணர்த்தியது. ஆனால் நிறைவேற்றாமலும் இல்லை.

ஆசிரமத்திற்கு பேராயர் வந்திருக்கிறார் எனத் தெரிந்ததும் வாசலுக்குச் சென்று வரவேற்றேன். கூப்பிய கரங்களுடன் இருவரும் நெருங்கினோம். சரிதான். இரண்டு தமிழர்களின் சந்திப்பு.

"வரணும், வரணும். நான் வந்து தங்களைப் பார்ப்பதாகத்தான் சொல்லியிருந்தேன். அதற்குள் தாங்களே..."

மழுமழுவென்று சிரைத்து, பளபளவென்றிருந்த தாடை முழுக்க மரியாதையான சிரிப்பு படர்ந்தது.

"யார் வந்தாலென்ன. சந்திப்புத்தான் முக்கியம்".

இவரும் சந்நியாசிதான் என்கிற நினைப்பு வந்ததும் அவரது வெள்ளை அங்கியை ஒரு கணம் நோட்டம் விட்டேன். எனது காவி அங்கியின் தனித்த பயன்பாட்டை நானறிவேன். இவரும் அறிவாரா? நிறத்தில் மட்டுமே வேறுபாடா?

"சுவாமி, நம்ம ஊரில் என்ன நடக்கிறது? சர்ச் காம்பவுண்டுக்குள் சிவலிங்கம் பூத்திருக்கிறதாமே?"

எனது பேச்சின் தொனி கொடுத்த தைரியமோ என்னமோ மனிதர் அழாத குறையாய்க் கொட்டித் தீர்த்து விட்டார்.



"சுவாமிஜி, நீங்கள்தான் அருள் பாலிக்க வேண்டும். ஒருநாள் அதிகாலை வீரத்துறவி ஸ்ரீனிவாச வரதன் தனது ஆட்களுடன் சர்ச்சுக்கு வந்து இங்கே சுயம்புவாய் சிவலிங்கம் தோன்றியிருக்க வேண்டும், தனது கனவில் கடவுள் வந்து சொன்னதாகக் கூறினார். அவரது பிடிவாதம் கண்டு சர்ச்சின் பொறுப்பாளர்கள் சுற்றிக் காண்பித்திருக்கிறார்கள். உள்ளே காம்பவுண்டு சுவரையொட்டி லிங்கம் போன்ற ஒரு கல் இருந்திருக்கிறது. அதைக் கண்டதும் இதோ இருக்கிறார் எம்பெருமான் என்று சொல்லி, கையோடு கொண்டு வந்திருந்த மாலையைப் போட்டு பூஜை செய்ய ஆரம்பித்துவிட்டார். எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. சிவலிங்கத்தை எடுத்துப் போய் வேறு எங்காவது வைத்து பூஜை செய்து கொள்ளுங்கள் என்றாலும் ஒப்புக்கொள்ளவில்லை. தோன்றிய இடத்தில்தான் சிவனிருப்பார். அங்குதான் அவரை வந்து சேவிப்போம். அங்குதான் அவருக்கு கோவில்



படிப்பகம்

www.padippakam.com

எழுப்புவோம். யாரும் அதை அகற்றி விடக் கூடாது என்று மிரட்டிவிட்டுப் போயிருக்கிறார். சுவாமிஜி, இதென்ன நியாயம்? எங்களுக்குச் சொந்தமான இடத்திற்குள் அவர்கள் கோவில் கட்டுகிறோம் என்றால் இது தர்மமா?"

நடந்ததைப் பேராயர் சொன்னார். அதற்கு முன்பு என்ன நடந்திருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. கனவை நனவாக மயங்குவது காதல் என்றால், நனவைக் கனவாகச் சித்த ரிப்பது தாழ்ந்த ராஜ தந்திரம்.

மரியாதை நிமித்தமாக அவர் மாதாஜி பற்றி ஏதும் சொல்லாவிட் டாலும் அவரது நெஞ்சம் அதில் ச்ல்ல டைக் கண்ணாய் அரித்துப்போயிருக் கும் என்பதை உணர்ந்தேன். நானும் மாதாஜி பற்றி வெளிப்படையாகக் கூறவில்லை. ஆனால், ஆனந்தாஸ் ரமம் தர்மத்தின் பக்கமே என்பதைச் சாற்றத் தயங்கவில்லை.

"சுவாமி, தாங்கள் கலங்காதீர்கள். ஆதி அந்தமில்லாத ஈஸ்வரனுக்கு இது தான் பிறப்பிடம் எனச் சொல்வதைப் போல அவனை அவமானப்படுத்தும் செயல் ஏதுமில்லை. லிங்கமூர்த்தியை அங்கிருந்து எடுத்து வேறொரு இடத் தில் பிரதிஷ்டை செய்து வணங்குவ தில் எந்தத்தவறுமில்லை. எல்லா லிங்க மூர்த்திகளின் பிறப்பிடமும் சிற்பிகளின் கொட்டகையே. அங்கி ருந்தே கோவில்களில் பிரதிஷ்டை செய்கிறோம். அவ்வாறே இந்த மூர்த்தி யையும் வணங்கவேண்டுமென்பதே எமது நிலை. ஆனந்தாஸ்ரமத்தின் நிலை. இதையே ஒரு அறிக்கையாகவும் கொடுக்கவிருக்கிறோம்".

பேராயரின் முகத்தில் தெரிந்த நிம்மதி பசும்பாலில் ஆடைபோல தனித்துப் படர்ந்திருந்தது. யாராவது அதை சுண்டுவிரலில் எடுத்துப் போட்டுவிடக்கூடாது என்று பட்டது. தனது இடுப்புப் பட்டையைச் சரி செய்துகொண்டு எழுந்தவர் கைக ளைக் கூப்பிக்கொண்டு தளதளத்த குரலில் சொன்னார்.

"சுவாமிஜி தங்களைப் போன்ற பெரியவர்கள் இருக்குமட்டும் இந்த பூமி பிழைத்துப்போகும். ஏன், பூமிகூட பூகம்பத்தால் பிளவுபடலாம், மனிதர் கள் நம்மை எவராலும் பிரிக்க முடி யாது. இயேசுவே! நீ பிறருக்காக சிலுவை சுமந்தாய், உனக்காக சிலுவை சுமக்க இங்கொருவர் இருக் கிறார்".

மீண்டும் வாசல்வரை சென்று வழியனுப்பி வைத்தேன். அவர் சொன்ன வார்த்தைகள் உள்ளேயே தங்கிவிட்டன. நான் சிலுவை சுமப்ப வனா? தோள்பட்டையில் வலியெடுத் தது.

**ப**த்திரிகைகளில் எனது அறிக்கை வந்த அதே நாளில் பிரார்த்தனை மண்டபத்திற்குள் காலார நடந்து வந்தேன். புற விசையிலான அற்புதங் கள் தேவையில்லை. அக விசையி லான அற்புதம் நிகழ்ந்திருந்தது. பிற ருக்காகத் தன்னைக்கொடுத்துவிடுவ தால் உள்ளுக்குள் ஏற்படும் அற்புத மது. உயர்ந்த நிலையை நான் எட்டி விட்டேன். பரிநிர்வாண நிலையைக் கண்டுவிட்டேன். ஆசிரமவாசிகளை என்னோடு அழைத்துச் செல்லமுடி யுமா என்கிற சந்தேகம் வந்தது. அழைக்காமலேயே வரமாட்டார்கள் என்கிற முடிவுக்கு ஏன் வரவேண் டும்? அவர்களது கரங்களை மெது வாகப் பற்றினேன்.



படிப்பகம்

"சீதையை மணக்க ஸ்ரீராமன் மிதிலைக்கு வருகிறான். அவனது அழகை அள்ளிஅள்ளிப்பருக அந்நகர மாதர்கள் துடிக்கின்றனர். ஆனாலும், முழுமையாக அவர்களால் தரிசிக்க முடியவில்லை. தோள் கண்டவர்களின் கண்கள் அங்கேயே நிலை குத்திவிடுகின்றன. அடுத்த அவயங்களைக் காண முடியவில்லை. பாதங்களைப் பார்த்தவர்கள் நிலையும் இதுவே. தடக்கை கண்டார் கதியும் இதுவே. கம்பன் பாடுகிறான். 'தோள் கண்டார் தோளே கண்டார், தொடு கழல் கமலம் அன்ன தாள் கண்டார் தாளே கண்டார், தடக்கை கண்டாரும் அஃதே'. இது எப்படி இருந்தது தெரியுமா? கடவுளை அடைவதற்கான பல வழிகள் இருந்தும் ஒன்றை மட்டும் மேற்கொண்ட சமயவாதிகளின் நிலை போல் இருந்ததாம். 'வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்? ஊழ் கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்.' பரமனை அடைய ஒற்றை மார்க்கம் உதவாது என்று அந்தக் காலத்திலேயே கம்பன் கருதியிருக்கிறான். சோகம் என்னவென்றால் இப்படி ஊனமான ஒரு சமயத்தைக் கொண்டிருப்பவர்கள் அடுத்த சமயங்களைக் குறை கூறுகிறார்கள். இந்த மதமாச்சரியங்கள் என்னைப் புண்படுத்துகின்றன. உண்மையான சந்நியாசி ஒவ்வொருவரையும் புண்படுத்துமென்று நினைக்கிறேன்".

என் குரல் என்னை அறியாமலேயே துடிதுடித்தது. கம்மிய குரலில்


# ஹோமியோபதி மருத்துவம்

ஆண்மைக் குறைவு, தும்மல், சிறுநீரகக்கல், கால் ஆணி, அல்சர், மூலம், பவுத்திரம், தோல்வியாதிகள், பாலியல் நோய்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட நோய்கள், ஞாபகமறதி, தீராத தலைவலி மற்றும் அனைத்து நோய்களுக்கும் **பக்கவிளைவின்றி** சிகிச்சையளிக்கப்படும்.

Dr.D. செங்குட்டுவன், B.Sc., D.H.M.S., Dr. ப்ரீதா செங்குட்டுவன், D.H.M.S.,

## கென்ட் ஹோமியோ கிளினிக் ☎ 746040

4-G.K.S. பில்டிங் முதல் தளம்,
55-மேலப் பெருமாள் மேஸ்திரி வீதி,
(காலேஜ் ஹவுஸ் அருகில்) மதுரை - 1.



காலை 11.30-2.00 மாலை 4 -6
சனி, ஞாயிறு காலை 11.30-1.00

## ப்ரீதா ஹோமியோ கிளினிக் ☎ 521354

(Computerised Clinic)
எஸ்.7. கிங்ஸ் கோர்ட்,
அன்னபூர்ணா ஹோட்டல் அருகில்,
அண்ணா நிலையம், மதுரை - 625 020



காலை 9.30 - 11 மாலை 7 - 9
சனி, ஞாயிறு காலை 9.30-11

## நவீன் ஹோமியோ கிளினிக்

61, V.M.R. பட்டி (A.M.C. ரோடு)
அருணா மெடிக்கல்ஸ் சந்து, **திண்டுக்கல்.**

சனி மாலை 4.30 - 8.30 மணி வரை மட்டும்

www.padippakam.com

பேசவிரும்பாமலே நிறுத்தினேன். அது தந்த மவுனம் பேச்சைவிட கனமாக இருந்தது. இரண்டு பேச்சுக் களுக்கிடையிலான இடைவெளியும் ஒரு பேச்சே. யாரோ அதைக் கலைத் தார்கள்.

"குருஜி எல்லா மதங்களும் ஊன மானவையென்றால் ஏன் மதமாற்றத் தில் இறங்குகிறார்கள்? அதைத் தடுக்க வேண்டாமா?"

கேட்டவரைப் பலரும் திரும்பிப் பார்த்தார்கள். தங்களின் குரலைத் தாங்களே கேட்ட திருப்தி அவர்களது முகங்களில் தெரிந்தது. உள்ளத்தில் எழுந்த உஷ்ணம் குரலின் அடைப்பை நீக்கியது.

"மதமாற்றம் தேவையில்லைதான். ஒரு ஓட்டைப்படகை விட்டு இன் னொரு ஓட்டைப் படகிற்குத் தாவு வதால் ஒரு பயனும் இருக்கப் போவ தில்லை. ஆனால், தாவுகிற உரிமை வேண்டும். அது அவரின் சுதந்திரம். அதைத் தடுக்க நாம் யார்?"

"அதற்கும் சுதந்திரம் வேண் டுமா?"

"வேண்டும். ஒரு மனைவியை விவாகரத்து செய்துவிட்டு இன் னொரு மனைவியை விவாகம் செய்து கொள்கிற சம்சாரியைக் கண்டு நாம் உள்ளூர சிரிக்கலாம். ஆனால், அதைத் தடுக்கிற வேலையில் சந்நி யாசிகள் இறங்குவதில்லையே!"

"மனைவி மாற்றமும் மதமாற் றமும் ஒன்றா குருஜி?"

"ஒன்றுதான். அவரவர் விரும்பு வதைத் தழுவ அவரவருக்கு உரிமை உண்டு. இதை நம்மால் தடுக்க முடி யாது".

என்னுடைய உதாரணம் சற்று விகல்பமாக இருந்தாலும் எளிமை யானது. அவர்களுக்குள் சட்டென்று வேலை செய்யக் கூடியது என்றே நம்பினேன். அப்படியும் ஒருவர் எதிர்க் கேள்வி போட்டார்.

"தேவையற்ற விவாகரத்தும்கூட தடுக்கப்பட வேண்டியதுதானே?"

பலமான எதிரியைக் கண்டதும் தன்னை இன்னும் தயாரித்துக் கொள்கிற பயில்வானாய் சற்று கண்களை மூடிக் கொண்டேன். அந்த நேரத்தில் கேட்டவரும் இன்னும் சிலரும் மகிழ்ந்திருப்பார்கள் என்பது






படிப்பகம்

நிச்சயம். அனுபவித்துப் போகட்டு மென்று விட்டுக்கொடுத்து தாமதப் படுத்தியே விழிகளையும், உதடுக ளையும் திறந்தேன்.

"தேவையானது, தேவையற்றது என்பதை யார் முடிவு செய்வது? அவருக்காக நீங்கள் முடிவு செய்ய லாமா? உண்மையில் உங்களுடைய வேலை அவர் ஏன் அப்படி விவா கரத்து செய்ய முனைகிறார் என்பதை ஆராய்வதல்லவா! அப்படி ஆராய்ந்து அதற்குப் பரிகாரம் சொன்னால் அவரே அதைக் கைவிட்டு விடுவார். அதற்கு நீங்கள் தயாரா?"



கூட்டத்தில் கச முசாவென்று சத்தம் எழுந்தது. தங்கள் ஒவ் வொருவரது நெஞ்சை நோக்கியும் கூர் அம்பு பாய்ந்துவிட்டது போலவும், அதைப் பிடுங்கி எறிவது போலவும் அவர்க ளுக்குப் பட்டிருக்க வேண்டும். இன்னொரு வர் கேட்டார்.

"குருஜி, எங்களுக்கு கருணை புரிய வேண்டும். வேறொரு மதத்திற்கு ஓடு வதற்கு அப்படி என்னதான் கார ணம்? நமது இந்து மதத்தில் இல்லாத எது பிற மதங்களில் இருக்கிறது?"

தாடியை நீவிவிட்ட இடது கை இன்னொரு கையின் அங்கி முனை யையும் லேசாகச் சுருட்டியது. அதைச் சொல்வதா வேண்டாமா என்று யோசித்தேன். சொல்லாவிட்டால் இவர்களை என் பக்கம் வைத்திருக்க முடியாது என்பது சர்வநிச்சயம்.

பரமானந்தா ஒரு ஓரமாக உட் கார்ந்து அவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்தார். முகத்தில் சவக் களை பார்வையில் மட்டும் தீப்பொறி. சவத்திற்குள் கோபம் பிறக்குமா? எனது நெஞ்சுக் கூட்டிற்குள் இது வரையில் லாத பயம் பிறந்தது. சட்டென்று அதன் மீது எதையோ தூக்கிப்போட்டு மறைத்துவிட்டு சொல்லியே விட்டேன்.

"இந்து மதத்தில் இல்லாத எதுவும் பிற மதங்களில் இல்லைதான். ஆனால், பிற மதங்களில் இல்லாத ஒன்று இந்து மதத்தில் உள்ளது. அதுதான் பிரச் சனைக்கு மூலகாரணம்".

அவரவர் முகத்தில் ஆவல் கொடி கட்டிப் பறந்தது. உச்சிக் காற்றில் படபடவென்று அடித்துக் கொண்டு சொல்லு சொல்லு என்று கூவியது.

"அதுதான் வர்ணாஸ்ரமம்... சாதி... சாதி"

பூரண நிசப்தமே அந்த மண்டபத் தில் பிரார்த்தனையானது. ஆயிரம்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

தத்துவ விசாரணைகளைவிட ஒரு பருண்மையான உண்மை அவர்களது நெஞ்சங்களை இளக்கியது. நடந்த பழைய விஷயமொன்றைக் கூடுதல் ஆதாரமாய் ஞாபகப்படுத்தினேன்.

"சம்சார பந்தத்தில்தான் சாதியக் கொடுமை நிலவுகிறது என்று நினைக்காதிர்கள். அது சர்வவியா பகியாயுள்ளது. சந்நியாசத்திலுமிருக் கிறது. தத்துவாச்சாரியார் நமது குருஜியை எவ்வளவு இளக்காரமாக பாவித்தார் என்பது மறந்து போனதா? அவதார புருஷராக நமது குருஜியை அவர்கள் ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல கர்ப்பக்கிரகத் திற்குள் நுழைந்து மூல விக்ரகத்தை தொட்டு பூஜை செய்யக்கூட அனு மதித்திருக்க மாட்டார்கள். எனக்கும் அதே கதிதான், உங்களுக்கும் அதே கதிதான்."

அவர்களது முகங்களில் தெரிந்த பிரகாசமானது பரமானந்தாவின் முகத்தில் அப்பிய இருளில் இன்னும் பிரகாசமாக இருந்தது. எதற்காக இவ்வளவும் பேசுகிறேன் என்பது எல்லோருக்கும் தெரியும். மாதாஜி போகும் மார்க்கம் சரியில்லை என்பதை அவரது பெயரை உச்சரிக் காமலேயே சொல்லி வருகிறேன் என்பதை அவர்கள் நிச்சயம் உணர்ந் திருப்பார்கள். கடைசி அஸ்திரமாய் இதையும் சொல்லி பிரார்த்தனையை முடித்து வைத்தேன்.

"அமைதியும் சாந்தமும் சம்சார வாழ்வுக்கே அவசியம் என்று நினைத்து விடாதிர்கள். அதையும் விட சந்நியாசத்திற்கே அது அடிப் ப்டை ஆதாரம். கலவரங்களும், மாச்ச ரியங்களும் மலிந்த பூமியில் சந்நியாச வாழ்வை நடத்த முடியாது. அடுக்கு மாடிக் கட்டிடங்களைவிட இந்த ஆசிரமக் குடில்கள் எளிதில் பஸ்ப மாகி விடும்".

அமங்கலமான சொற்களோடு பிரார்த்தனையை இதுவரை முடித்த தில்லை. நிரந்தரமான மங்கலத்திற்கு இட்டுச் செல்லுமேயானால் இது அமங் கலமாகாது.

வந்தது போலவே நடந்தே சென் றேன். கூட்டம் இரு பிளவாய்ப் பிளந்து வழிவிட்டது. வழிவிட்ட சமுத்திரத் திற்குள் அடி மணல் காலில் பட நடை போடும் சுகம். அந்த மயக்கத்தில் மீண்டும் பரமானந்தாவின் பார்வை பட்டும் பயம் வரவில்லை. சமுத்திரத் தின் ஆழம் கண்டவனுக்கு அது எம் மாத்திரம்?

சிவராத்திரிக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. சர்ச்சுக்குள் முளைத்த சிவலிங்கத்தை அன்று அங்கிருந்து எடுத்து வந்து ஆனந்தாஸ் ரமத்தின் ஒரு பகுதியில் பிரதிஷ்டை செய்து சிறிய கோவில் ஒன்றைக் கட்டி விடுவதென்று முடிவு செய்தேன். கருணானந்தா மூலம் விஷயத்தைப் பேராயருக்கும் சொல்லிவிட்டேன். அவருக்கும் சம்மதமே.

ஆஸ்ரமத்தின் நடு நாயகமான பகுதியில் பிரதிஷ்டை செய்வதற் கான ஏற்பாடுகள் நடந்தன. கொத்த னாரை விட்டு பீடம் தயாரிக்கப்பட் டது. யாக மேடையும் அமைக்கப்பட் டது. பூஜைக்கான அனைத்து சாமக் கிரியைகளும் புரோகிதர்களின் சொல்படி சேகரிக்கப்பட்டன. ஆசிரம வாசிகளிடமும் உற்சாகம். புதிய மருமகனை வரவேற்பதற்காக சம் சாரி வீட்டில் என்ன பரபரப்பு



படிப்பகம்

www.padippakam.com

இருக்குமோ அப்படியொரு சூழல். குழந்தைகள் போல அங்குமிங்குமாய் சந்நியாசிகளும் சந்நியாசினிகளும் நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களது உற்சாகம் எனக்கும்கூட தொற்றிக்கொண்டது. பவுர்ணமி நிலவை எதிர்பார்க்கும் சமுத்திரம் போல சிவராத்திரியை எதிர்பார்த்தேன்.

அந்த நாளும் வந்தது. நல்ல நேரம் பார்த்து சர்ச்சுக்கு புறப்படத் தயாரானோம். சுயம்புவாய்ப் பூத்த லிங்கத்தைத் தோண்டியெடுத்து என் கையாலேயே அதற்கெனத் தயாரிக்கப்பட்டிருந்த சிவிகையில் தூக்கி வைக்க வேண்டுமென்றும், கருணானந்தாவும் இதர சந்நியாசிகளும் அதைத் தங்கள் தோளிலே சுமந்து வருவதென்பதும் ஏற்பாடு.

சிறிது எப்போதுமே அழகு என்பதற்கேற்ப அந்தச் சின்னச் சிவிகை எடுப்பாகவே இருந்தது. சிவலிங்கனார் ஆரோகணித்து வர அழகான பட்டுத் திண்டு ஒன்றுமிருந்தது. மல்லிகைச் சரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்ததில் பூப்பல்லாக்காகவே காட்சி தந்தது. சிவனுக்குப் பிடித்தமான கொன்றை மலர்களையும், வில்வ இலைகளையும் உள்ளே பரப்பச் சொல்லியிருந்தேன். அவருக்குப் பிடித்தமான இடம் இந்தச் சிவிகையைப் போல பிரபஞ்சத்தில் வேறு எதுவும் இருக்க முடியாது. இதைக் கண்டதும் தாயைக் கண்ட குழந்தையாய்த் தாவி வந்துவிடுவார்.

சுவாமி ஊர்வலத்திற்காக இரட்டை நாயன கோஷ்டியும் பிடிக்கப்பட்டது. மூவர் தேவாரத்தை இசை மழையாய்ப் பொழிந்து சிவனாரின் செவிகளையும் சித்தத்தையும் ஒருங்கே குளிர்விக்க முடிவு. திருவாசகத்திலிருந்தும் பாட்டுப் பிறக்கும். இத்தனை நாளாய் தேவாலயத்தின் காண்டா மணி ஓசை கேட்டு கேட்டுக் காது புளித்திருக்கும். இங்கு பிரதிஷ்டையானதும் நாளும் தேவாரம் பாட ஓதுவார் ஒருவரையும் நியமித்திருந்தேன். அதைக் கேட்ட எம்பெருமானுக்கு சர்ச் காம்பவுண்டுக்கு திரும்பும் எண்ணமே வராது.

நாதஸ்வரக் கலை

அடுத்த ஒலிம்பிக் போட்டிகள் சீனாவில் நடக்க இருக்கின்றன. அதற்கு சீனா இப்போதே உற்சாகத்து டன் தயாராகி வருகிறது. முன்பு (1983) அமெரிக்காவில் நடந்த ஒலிம்பிக்கின்போது அமெரிக்க போலீஸ் வெளிநாட்டினருக்கு இட்ட கட்டளைகள் என்ன தெரியுமா? உங்கள் வசம் அதிகமான பணத்தை வைத் துக் கொள்ளாதீர்கள். தங்கியிருக்கும் அறைக்கதவை நன்கு பூட்டிக் கொள்ளவும், பகலானாலும் தனியாக வெளியே செல்லாதீர்கள்! அட, இதுதான் அமெரிக்கா என்கிறீர்களா?



படிப்பகம்

www.padippakam.com

ஞர்கள் முன்னே வாசித்துக்கொண்டே செல்ல, அதை ரசித்துக் கொண்டே நான் நடந்தேன். எந்தத் துறவியாலும் இசையின்பத்தை துறக்க முடியாது என்று பட்டது. தலைதானே ஆடுகிறதே!

எனக்குப் பின்னால் சிவிகை வர, அதற்கும் பின்னால் சந்நியாசிகளும், சந்நியாசினிகளும் வந்தார்கள். தோண்டியெடுக்கும் போது பூஜை செய்ய வேண்டுமென்று புரோகிதர்கள் சொன்னதால் அதற்கான சாமக் கிரியைகளைத் தட்டுகளிலே ஏந்தி வந்தார்கள். எங்களது காவியுடைதான் பொருந்தாமலிருந்தது. இல்லையெனில் மாப்பிள்ளை அழைப்புதான்.

அந்த சர்ச் அப்படியொன்றும் வெகுதூரத்தில் இல்லை. அல்லது தூரம் தெரியவில்லை என்றும் கூறலாம். இடம், காலம் என்பதெல்லாம் மனதின் உற்சாகத்தைப் பொறுத்தும் அமைகிறது என்பது நிஜமே.

சர்ச் காம்பவுண்ட்டை நெருங்குவதற்கு முன்பே மைக்செட் சத்தம் வந்தது. ஏதோ பாட்டுச் சத்தம். நெருங்க நெருங்க திரிசூலம் போடப்பட்ட காவிக் கொடிகளும் தோரணங்களாய் தொங்கிக் கொண்டிருந்தன. எனக்கு திக்கென்றது. வீரத்துறவியின் கோஷ்டி இருக்கிறது.

முன்வைத்த காலைப் பின்வைக்க மனமில்லை. கூட்டம் தன்னை கவனிக்கிறது என்றதும் வருகிற பிடிவாதமும் தைரியமும் வந்தது. நடப்பது நடக்கட்டுமென்று உறுதியாகக் காலெடுத்து நடந்தேன். பின்னால் வந்தவர்களையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு முன்னேறினேன்.

சர்ச் காம்பவுண்டுக்கு எதிராகப் பெரிய பந்தல் போட்டு மேடை அமைத்திருந்தார்கள். "சிவராத்திரியை முன்னிட்டு அகண்ட ஆராதனை" என்று போர்டு மாட்டியிருந்தார்கள். மேடையில் பாட்டு கோஷ்டியினர் இருந்து கொண்டு தெலுங்கு கீர்த்தனைகள் பாடிக் கொண்டிருந்தார்கள். கேட்பதற்கு அதிகக் கூட்டம் இல்லையென்றாலும் கழுத்தில் திரிசூலம் பிரிண்ட் செய்யப்பட்ட பெரிய கர்ச்சிப் கட்டிய தொண்டர்கள் நிறைய இருந்தார்கள். ஒவ்வொருவர் கையிலும் கம்பு இருந்தது.


செம்மலர் சந்தா விபரம்

ஆண்டுக்கு ரூ. 55

6 மாதத்திற்கு ரூ. 30


இன்று முழுக்க சர்ச் எதிரே கூட்டத்தைக் கூட்டி வைக்க இப்படியொரு தந்திரம் என்று புரிந்து கொண்டேன். அகண்ட ஆராதனை என்றால் நாள் முழுக்க இடைவெளி விடாமல் யாராவது பாடிக் கொண்டேயிருப்பார்கள். இவர்கள் பாடிக் கொண்டேயிருக்கட்டும். நாம் நமது காரியத்தை கவனிப்போமென்று சர்ச்சை நோக்கி நடந்தேன்.

மைக் சத்தமும் நாதஸ்வர சத்தமும் சேர்ந்து கர்ண கடூரமானது. இரண்டு மெல்லிசைகள் மோதினால் கூட அங்கே இன்னொரு மெல்லிசை பிறக்காமல் அபஸ்வரமே மிஞ்சுவதைக் கவனித்தேன். சர்ச் காம்பவுண்டு வாசலை நெருங்கியதும் எங்கிருந்தோ வீரத்துறவி ஸ்ரீனிவாசவரதன் வந்து சேர்ந்தார். உள்ளே என்னை நுழையவிடாமல் மறிப்பது போல் நின்றார்.

(தொடரும்)




படிப்பகம்

www.padippakam.com

# பூவின்பாடல்

கலீல் ஜிப்ரான்



நான்-
இயற்கையின் குரல்
திரும்பத் திரும்ப மொழியும்
இனிய சொல்
நீலக்கூரையிலிருந்து
பச்சைக் கம்பளத்தில் விழுந்த
விண்மீன்
பனிக்காலத்தில் கருவாகி
கார்காலத்தில் பிறந்து
கோடையின் மடியில் வளர்ந்து
இலையுதிர்காலப் படுக்கையில்
தூங்கும்
பருவங்களின் மகள்.
வைகறையில்
வெளிச்சத்தின் வருகையை
தென்றலோடு இணைந்து
தெரிவிக்கிறேன்
அந்தியில்
வெளிச்சத்தின் பிரிவை
பறவையோடு இணைந்து
பகர்கிறேன்.
எனது
அழகிய நிறத்தால்
மண்வெளிகள்
அலங்கரிக்கப்படுகின்றன.
நறுமணத்தால்
காற்று
சுகந்தமடைகிறது



நான் -
மதுவிற்காக
பனியைக் குடிக்கிறேன்
பறவைகளின் குரலை
உற்றுக் கேட்கிறேன்
புற்கள் அசையும்
ஓசைக்கேற்ப
நாட்டியமாடுகிறேன்
ஆனால்
ஒளியைக்காண மட்டுமே
உயரே பார்க்கிறேன்.
எனது
நிழலைக்கூட
குனிந்து பார்ப்பதில்லை
இது
மனிதன் கற்க வேண்டிய
மாபெரிய ஞானம்.

தமிழில் : யரளவழல



படிப்பகம்

www.padippakam.com

# நவம்பர் புரட்சியும் ருஷ்ய இலக்கியமும்

**ந**வம்பர் புரட்சி ஒரு புது உலகத்தையே படைத்தது. புதிய கனவுகளைப் படைத்தது ஒரு புதுப்பாதையே காட்டியது.

உலக மக்களுக்கு சமாதானம்... உழவர்களுக்கே நிலம். உழைப்பாளிகளுக்கே தொழில்... மக்களுக்கே உலகம் என்ற புதிய கோஷங்களைத் தந்தது. கோஷங்களை வாழ்வின் நிஜங்களாக்கியது.

'போரினால் உலகையே ஆக்கிரமிப்பேன்' என்று இன்றைய ஜார்ஜ் புஷ் போல அன்றைய ஹிட்லர் கிளம்பினான். அவனது வெற்றிகளில் உலகம் மருண்டது. நவம்பர் புரட்சி படைத்த சோவியத் யூனியன்தான் செம்படையின் மூலம் ராட்சஸ ஹிட்லரிடமிருந்து உலகையும் சமாதானத்தையும் ரட்சித்தது.

இத்தனையையும் இதற்கும் மேலான உன்னதங்களையும் படைத்த நவம்பர் புரட்சியை படைப்பதில் ருஷ்ய இலக்கியமும் முக்கிய பங்கு வகித்தது.

புரட்சியை இலக்கியம் படைக்குமா?

படைக்காது. ஆனால், புரட்சிக் குரிய சமூகச் சூழலைச் சொல்லும் இலக்கியம். புரட்சிக்குரிய மனநிலையை கனிய வைக்கும். புரட்சி நெருப்பில் புகுந்து வெளிப்படுகிற துணிவைக் கொடுக்கும்.

இலக்கியம், மனிதர்களிடம் மனிதப் பண்பை மலரவைக்கும். மானுட சமத்துவம் படைக்கிற புரட்சியை நடத்தும் மனவலிமை மனிதருக்கு வழங்கும்.

ருஷ்ய இலக்கியம் வழங்கியது.

புஷ்கினில் துவங்கி, ஆண்டன் செகாவ், துர்கனேவ், லியோ டால்ஸ்டாய், அலெக்ஸி டால்ஸ்டாய், மைக்கேல் ஷோலக்கோவ், மாக்ஸிம் கார்க்கி, சிங் கிஸ்ஐத் மாத்தவ் வரை பலப்பல



அருஞ்சுனை



படிப்பகம்

இலக்கிய மேதைகள் ருஷ்ய மனித உள்ளங்களை உழுது புரட்டினார்கள். உள் மன ஈரத்திலிருந்து புரட்சி நெருப்பை பெருக்கினார்கள்.



இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியச் சூழலையும், பாதையையும் தீர்மானிப் பதில் ருஷ்ய இலக்கியம் மிக முக்கிய பங்கு வகித்தது.

ருஷ்ய இலக்கியத்துக்கு ஆதர்ஷமாக இருந்தது பிரெஞ் சுப் புரட்சியைப் படைத்த பிரெஞ்சு இலக்கியம்.

பிரெஞ்சுப் புரட்சி இலக்கி யத்தின் வித்திலிருந்து எழு ந்த ருஷ்ய இலக்கியம் எனும் விருட்சம், உலக இலக்கிய வாதிகள் பலருக்கான விதை களைத் தந்தது.

குறிப்பாக 1990க்குப் பிந் தைய காலத்தில், சோவியத் யூனியன் பின்னடைவு நிகழத் துவங்கிய சமயத்தில்... உலக முற்போக்காளர்களின் ஆணிவேர் ஆட்டம் கண்டது. தத்துவச் சலனம் நிகழ்ந்தது. எதிர் வர்க்க இலக் கியத் தத்துவம் எதிர்க்க நாதியற்ற சண்டியராக அடாவடியாக ஆடியது.

அப்போது—

ருஷ்ய இலக்கியம் படித்து, ஊறித் திளைத்து, அப்புறம் உலக இலக்கியம் சுவாசித்த படைப்பாளிகள் எல்லோ ரும் தத்துவ பல சக்தியோடு கம்பீர மாக நிமிர்ந்து நிற்பதைக் காண முடிந்தது.

ருஷ்ய இலக்கிய ஆதர்ஷம் என்ற அடிப்படையில்லாமல் உலக இலக் கியம் கற்றிருந்த முற்போக்காளர்கள், இந்த தத்துவ சூறாவளியில் தடுமாறித் தத்தளித்ததையும் காண முடிந்தது. ஆம்!

ருஷ்ய இலக்கியம், சோவியத் பின்னடைவுக்குப் பிறகும் கூட புரட்சி கர மனோபாவத்தையும், புரட்சிகரத் தத்துவத்தையும் காத்து நிற்கிற வலிமை பெற்றிருந்தது.

நவம்பர் புரட்சி படைத்து வழங்கிய பொதுவுடமை எனும் இனிய சொர்க் கம் பின்னடைவு கண்ட பின்பும்கூட, ருஷ்ய இலக்கியம் புரட்சியின் காவல னாக நிற்கிறதே, அது எதனால்?


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

ருஷ்ய இலக்கியம் உள்ளடக்க உண்மைக்குச் சமமாக வடிவ முழுமையும் பெற்றிருந்தது. வாழ்வின் ஆழ்ந்த வெக்கையை உஷ்ணம் குன்றாத மொழியின் வலிமையோடு பேசியது.

வெறும் பிரச்சாரமாக இருக்கவில்லை. கலை உண்மையோடு கமழ்ந்தது.

வெறும் வண்ணப் பூவாக வடிவ ஜாலம் காட்டவில்லை. புதிய விதைகளுக்கான மகரந்தக் கர்ப்பத்தோடு சமூக வாழ்வில் வேர் பதித்து நின்றது.

இந்த வடிவ – உள்ளடக்க – ஒருமை தாம், அந்த ருஷ்ய இலக்கியத்தை காலம் கடந்து நிற்க வைக்கிறது. அதன் கனவுகள் வண்ணம் கரைந்த பிறகும், புதிய வண்ணம் பெருக்கி பூத்துச் குலுங்கச் செய்கிறது.

ருஷ்ய இலக்கிய மேதைகளில் மிக முக்கியமானவர் மாக்ஸிம் கார்க்கி. பிரபுக் குலத்தில் பிறக்காதவர். பல்கலைக்கழகக் கல்வி காணாதவர். காகிதம் பொறுக்கும் சிறுவனாகவும், கப்பல் தளத்தில் அடிவாங்கும் கூலிக்காரனாகவும், சாயப்பட்டறை நடத்திய தாத்தாவிடம் மிதி வாங்குகிற கிராமத்து அனாதையாகவும் வாழ்ந்தவர்.



மாக்சிம் கார்க்கி

வாழ்வின் கடைக்கோடியில் கசந்த வாழ்க்கையை ருசித்து ருசித்து கைத்துப்போன (கார்க்கி என்ற ருஷ்யச் சொல்லுக்கான பொருள் கைத்துப்போனவன்) மாக்சிம் தாம் ருஷ்ய இலக்கியத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர்.

அவர் எழுதிய காவிய நயமிக்க நாவல்கள் பல. "ஆர்த்தமனோவ் சகோதரர்கள்", "மூவர்", "வாழ்வின் அலைகள்" போன்ற நாவல்கள் நிறைய்ய.

அவர் எழுதிய நாவல்களிலேயே அதிகப் பிரச்சார வலிமை பெற்றிருந்த அரசியல் நாவல் 'தாய்.'

தொழிற்சங்கம் பற்றியது. தொழிலாளர் போராட்டம் பற்றியது. களப் போராட்டங்களில் நிகழும் சம்பவங்கள் பற்றியது. தொழிலாளர் இயக்கங்கள் கருக்கொண்டு, வளர்ந்து, குஞ்சாக வெளிப்பட்டு, சிறகு முளைத்து பறக்கிற நிகழ்வுகளின் ரணங்களைச் சொல்கிற நாவல்.

அப்படியெனில், அது பிரச்சார நெடிமிக்க நாவல் தானே?

அல்ல!



படிப்பகம்

www.padippakam.com



இரண்டாம் உலகப்போரின் போது ஹிட்லரின் நாஜி படைகளை எதிர்த்த போர் முனையில் சோவியத் வீரர்களு டன் ஒரு ராணுவ வீரனாக எழுத்தாளர் ஷோலகோவ் (நடுவில்)

நெடியல்லாத பிரச்சார வாசம் மிக்க நாவல்.

நெடி வேறு. வாசம் வேறா?

ஆம்.

நெடி மனசைச் சுருங்கச் செய்யும். முகம் சுளிக்க வைக்கும். அசூசையோடு ஒதுங்கச் செய்யும்.

வாசம் நெருங்கச் சொல்லி ஈர்க்கும். முகர்ந்த முகத்தை மலரவைக்கும். மனசை விரிய வைக்கும்.

பிரச்சார வாசமிக்க "தாய்" நாவல் உலகமொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு அழியாப் புகழோடு இன்றளவும் வாலிப வலிமையோடு நிமிர்ந்து நிற்கிறது.

எதனால்?

அதன் வடிவ முழுமை. வடிவ நேர்த்தி. மொழியாளுமை.

மொழியின் மூலம் சம்பவங்களையும், சூழல்களையும் மனித மூர்த்திகளையும் காட்சிப்படுத்துவது இலக்கியத்தின் மேலோட்டமான திறமை.

மொழியின் மூலம் மன உணர்வுகளையும், உணர்வு நுட்பங்களையும், உணர்வுகளுக்குள் அடுக்கடுக்காக ஆழம்பெற்று மர்ம இருட்டாக இருக்கிற மனக்குகையின் உள்முகங்களையும் உணர்த்துகிறபோதுதான் இலக்கியத்தின் உயரிய ஆற்றல் வெளிப்படும்.

அதைவிடவும் கூடுதல் ஆற்றல், மனக்குகையின் இருட்டு புறச் சமூக நிகழ்வுகளின் மடிப்புகளுக்குள்ளிருந்து எழுகிறது என்கிற முழுமையை உணர்த்துவது.

இதைச் செய்கிறது "தாய்" நாவல்.

சமுதாயத்தையே குலுக்கிய புரட்சி வீரன் கரிபால்டி. அவனைப் பற்றிய நூல் தடை செய்யப்பட்டிருக்கிறது. பாவல் வீட்டில், புரட்சி ஆர்வமிக்க சில இளைஞர்களும், இளம்பெண் இருவரும் ரகசியமாகக் கூடி தடை செய்யப்பட்ட அந்த நூலை வாசிக்கின்றனர். ஒருவர் வாசிக்க, மற்றவர்கள் மௌனமாகக் கேட்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



ஹிட்லரின் நாஜிகளை எதிர்த்து தாய் நாடு காக்கும் போர் முனையில் சோவியத் எழுத்தாளர்கள் சிமானோவ், அலெக்ஸி சுர்க்கோவ்.

நிக்கோலாய்.

"அமைதியாம்... அமைதி! அது கோழைகளின் கோஷம்."

இப்படியே பல நிகழ்வுகள். ஒவ்வொரு தருணத்திலும் ஐவானின் துடிப்புகள். வெடிப்புகள், துணிச்சலான சீறல்கள்.

திடுமென போலீஸ் சுற்றி வளைக்கிறது. வீடு நுழைகிறது. தடை செய்யப்பட்ட புத்தகம் அவசர அவசரமாக மறைக்கப்படுகிறது. போலீஸ் வீடு முழுக்கத் தேடுகிறது.

பாவலின் அம்மா பயந்து நடுங்குகிறாள். பாவலை சிறைக் குக்கொண்டு போய்விடுவார்களோ என்கிற அச்சத்தில் தத்தளிக்கிறார்.

போலீஸ்காரர்கள் வீடு முழுக்க புரட்டுகிறார்கள். எல்லோரும் ஒன்றும் நடக்காத மாதிரி பாவனை செய்ய முயலுகின்றனர்.

ஆனால், ஐவான் போலீஸிடம் சண்டைக்குப் போகிறான். ஆத்திரத்தில் சீறுகிறான்.

"ஏய் நாய்களே... உங்கள் கழுத்தைத் திருகிவிடுவேன்" என்று பாய்கிறான்.

ஐவான் நீக்கோலாய் என்கிற அம்மைத் தழும்பு முகத்தான் மெளனத்தின் சுமைதாளாமல், பொறுமை சிதைந்து வெடிக்கிறான்.

"நிறுத்துங்கள். மூளையை புழுத்துப்போக வைக்கிற புத்தக எழுத்துக்களை வாசிப்பதை நிறுத்துங்கள். என் கைக்கு ஏதாவது வேலை தாருங்கள்... ஏதாவது ஒரு சமூகப்பேனை நசுக்கி எறிய வேண்டுமா? சொல்லுங்கள்."

நெடிய உருவம் கொண்ட பாஷா, மென்மையாகக் கண்டிக்கிறான். "நிக்கோலாய், ஆத்திரப்படாதே. சூழலின் அமைதியை சீர்குலைக்காதே..."

இன்னும் வெடிக்கிறான், ஐவான்

தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகளைச் சுருக்கவும், திருத்தி அமைக்கவும் ஆசிரியர் குழுவிற்கு உரிமை உண்டு. **வைகை பிரிண்டர்ஸ் & பப்ளிசர்ஸ்** (6/16, புறவழிச்சாலை மதுரை - 625018.) அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : **என்.வரதராஜன்**. ஆசிரியர் **கே.முத்தையா**. செம்மலர் பதிவு எண்: M 8735/99.
Registered with the Registrar of Newspaper for India under Registration No: 17852/70
Ph: (0452) 669769 Fax : (0452) 667070 email : theekati@md3.vsnl.net.in



படிப்பகம்

www.padippakam.com

போலீசுக்கு சந்தேகம் வலுக்கிறது! மேலும் கூடுதல் உக்கிரத்துடன் தேடுகிறது.

ஒன்றும் நடக்காத பாவனையில் பாஷா வீட்டுக்குள்ளேயே மெதுநடை போடுகிறான். தாய் பக்கம் வருகிறான்.

"ஐவானைப் பேசாமலிருக்கச் சொல்லேன்" என்று தாய் கிசுகிசுப்பாள். பாஷா அதே அமைதியான குரலில் அர்த்தபுஷ்டியுடன் சொல்லுவான்.

"பாவம்! ஐவான் ரொம்பப் பயந்துருக்கான்"

இப்போது–

தாய் நாவலை வாசிக்கிற வாசகன் அதிர்ந்துவிடுவான். ஆத்திரம் ஆத்திரமாகச் சீறிச் சினந்த ஐவானை 'கோழை' என்கிறபோதே... அர்த்த பூர்வ அமைதியே வீரத்தின் உயர் நிலை என்று உணர்த்துகிற நேர்த்தி.

தடைசெய்யப்பட்ட புத்தகத்தை வாசிக்கிற வீர இளைஞர்களின் சாகச சூழலைக் காட்சிப்படுத்துகிற கணத்திலேயே... கோழை உணர்வின் செயல்பாட்டுத் தோற்றத்தையும், வீர உணர்வின் ஆழ்கடல் அமைதியையும் உணர்த்தி விடுகிற நேர்த்தி. உளவியல் நுட்பத்தைச் சித்தரிக்கிற ஆற்றல்.

ஆலைத் தொழிலாளியாகவும், பாவலின் தந்தையாகவும் இருக்கிற குடிகாரன். அவன் குடித்துவிட்டுப் பேசிக்கொண்டிருக்கும்போதே... சடாரென்று அடித்துவிடுவான்.

அப்படி அடித்து விடுகிற மன நிலையை கார்க்கி இப்படிச் சொல்கிறார்.

"யாரோ ஒருவன் – ஏதோ ஒரு சக்தி – தன்னை தாக்க வருவதைப் போன்ற நிரந்தர உணர்ச்சியின் எச்சரிக்கையினாலேயே அவன் தாக்கி விடுகிறான்." இது எத்தனை அபூர்வமான உளவியல்நுட்பம்!

அவருடன் ஒரு நாய் திரியும். நாயின் விசுவாசம்.

அவர் இறந்துபோவார். அவர் புதைக்கப்பட்ட சமாதியின் முன்னால் படுத்துக்கிடக்கிற நாயின் மன நிலையை நாலேவரிகளில் சித்தரிப்பார் கார்க்கி.

நாலு வரிகளில் அந்த நாய் சாகாத சித்திரமாக நம் நெஞ்சுக்குள் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொள்ளும்.

இப்படியே... 'தாய்' நாவலின் வடிவ முழுமையையும் பட்டியல் இட்டுக்கொண்டே போகலாம். மொழியின் மூலம் உணர்வுகளின் நுட்பங்களை – மர்மங்களை – உணர்த்துகிற நேர்த்தியை சொல்லிக்கொண்டே போகலாம்.

வாழ்வுலத்து நிகழ்வுகளின் புதிய மாறுதல்களைச் சொல்கிறபோதே... மன உலத்து மர்மங்களையும் வெளிச்சம் போட்டுக்காட்டுகிற அற்புத இலக்கியத்திறனை வாசித்தவர்கள் அறிவார்கள்.

பிரெஞ்சு இலக்கியத்தை ஆதர்ஷமாகக் கொண்டு காலூன்றி எழுந்த ருஷ்ய இலக்கியம், மனித மனங்களை உழுது புரட்டும், பண்படுத்தும், கனிய வைக்கும். விதைகளை விருட்சமாக்குகிற பண்பைப் படைக்கும்.

அதனால்தான் –

ருஷ்ய இலக்கியத்தை அஸ்திவாரமாகக் கொண்டு வளர்ந்த படைப்பாளிகள், தத்துவத்தெளிவோடும், மன உறுதியோடும் இருக்கிறார்கள். ■



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

## கே.பி.சிவப் பிரகாசத்தின் கல்வெட்டுகள்

1975 முதல் 1981 வரையுள்ள ஆறாண்டு காலத்திற்குள் எழுதப் பட்ட சிறுகதைகளை கல்வெட்டுகள் என்ற தலைப்பில் மணியம் பதிப்பகம் நூலாக்கியிருக்கிறது.

குறிஞ்சி வேலனின் அணிந்துரை. நூலுக்கு நல்ல வாசலாகிறது. பதினைந்து சிறுகதைகள். கிராம வாழ்க்கையின் உள் அவலங்களை கண்ணீரும் கனல் நீருமாக கதைகளாக்கியிருக்கிறார் கே.பி.சிவப்பிரகாசம்.

வறட்சியினால் உருக்குலைந்த அம்பலகாரர், தன் காலடியில் பணியாற்றிய இருளனின் ஆதரவின் அருமை குறித்தும், அவனது இழப்பு குறித்தும் ஏங்கிக் கலங்குகிற முதல் கதை மனசைத் தொடுகிறது. 'ஆராயி ஆச்சி'யும் மனசைத் திண்டுகிறாள்.

அதைத் தொடர்ந்து வருகிற பதினைந்து சிறுகதைகளிலும் நேர்த்தியான மொழி நடை, கச்சிதமான வார்த்தைகளில் காட்சி சித்தரிப்பு,




கிராம வாழ்க்கையின் அருமைகளையும், அவலங்களையும் உணர்த்துகிற பாத்திரங்கள் என்று வாசிக்கும் நம்மை பிரமிக்க வைக்கின்றன.

கிராமத்தையே தளமாகக் கொண்டு இயங்குகிற கே.பி.சிவப்பிரகாசத்தின் மன உலகம், வியர்வை மனிதர்களின் பக்கமே சாய்ந்திருக்கிறது. வீழ்ந்து கிடக்கும் வாழ்க்கை மீண்டு எழுந்து முன்னேறும் என்கிற நம்பிக்கையும் கொண்டிருக்கிறது. தெறித்த மணிகளைப் போன்ற உயிர்ப்புள்ள சிறுகதைகள். நல்ல நூல்.

**– அன்ன பாக்கியன்**

*வெளியீடு : மணியம் பதிப்பகம், 39, இரத்தின முதலி தெரு, குறிஞ்சிப்பாடி, 607302. கடலூர் மாவட்டம்.*

*விலை : ரூ. 42.00*

## "ஒற்றைச் செருப்புகள்"

தமிழ்மண்ணில் அருகு போல் வேரோடி ஆல் போல் தழைத்து நிற்கும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பட்டுக்கோட்டை கிளைச் செயலாளர் தனபால் மற்றும் தோழர்களின் முயற்சியால் இரண்டாயிரம் ஆண்டின் இறுதியில் "வ.ரா.நினைவுச் சிறுகதைப்போட்டி" நடத்தப்பட்டது. அதில் தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்கள் தேர்வு செய்த 15 கதைகள் 'ஒற்




றைச் செருப்பாகி'க் கம்பீரமாக நடக்கின்றன.

மயூரா ரத்தினசாமி, ரோஜாகுமார், ஆர். நீலா, க.சி.சிவக்குமார், சு.மதியழகன், கோவிந்தராஜன், தமிழ்ச்செல்வன், ரிஷபன், பாட்



படிப்பகம்

www.padippakam.com

டாளி, பாரிஜாதன், ராசி.தங்கதுரை, குந்தன், ஜனநேசன், அல்லி உதயன், குறும்பனை சி. பெர்லின், ச.பாலமுருகன் ஆகியோரின் படைப்புகள் அவர்களைப் பற்றிய சிறு குறிப்புக்களுடன் இடம்பெற்றுள்ளன.

முதற்பரிசுக் கதையான 'ஒற்றைச் செருப்புகள்' உண்மையில் ஓர் அற்புதமான சிறுகதை. வீதிகளில் வியாபாரம் செய்து கொண்டு, எவனோ ஒரு சோறுபோடும் முதலாளியின் அடிகளால் அரவணைக்கப்பட்டு, கடந்துபோன அக்காவின் அன்பையும், அரவணைப்பையும் அசைபோட்டு ஏங்கும் பாலகனின் தனிமை இறுக்கம் நம் இதயத்து நரம்புகளைச் சுண்டுகிறது. கதையைப் படிப்பவர் மனிதரென்றால் அவருக்கு அந்த வலி நிச்சயம் பரவும்.

ரோஜாக்குமாரின் சித்திரக்குகை வழக்கம் போல கச்சிதம். ஊனமுற்றிருந்தாலும் கலைப் பெண்ணின் தன்மானம் சித்திரக்குகை முழுக்க எதிரொலிக்கிறது.

ஆர்.நீலாவின் 'ஈத்துவக்கும் இன்பம்' ஏழைகள் வசதித் திமிர்களால் தாக்கப்பட்டாலும் கருணையும் மனிதாபிமானமும் மிக்கவர்கள் என்று முகத்திலறைந்து சொல்கிறது.

லஞ்ச உலகில் மிஞ்சியிருப்பவற்றைக் கவிழ்த்துப் போடுகிறது க.சி. சிவகுமாரின் 'ராஜசேகர ரணதீரன்.' முதலாளித்துவக் கல்வியால் ஒன்றுபட்ட மனசுக்காரர்களை பிரபுத்துவ ஜாதிய முள் திண்டிக் கிழிக்கிறதைச் சித்தரிக்கிற, மதியழகனின் 'திண்டல்' காதுகேட்காத சிறுவனின் சாவை, அதிர்வோடும், அதே நேரம் வீட்டுவேலை செய்பவர்களின் அவலத்தோடும் சொல்கிற ரிஷபனின் 'ராசா'. மறக்க முடியாத டிசம்பர் ஆறாந்தேதியை வேறொரு கோணத்தில் பதிவு செய்யும் 'ஜனநேசனின் 'பலி' கிண்டல் தோய்ந்த நடையில் ஜாதிக்கலவர மனோவியலைச் சித்தரிக்கும் ராசி தங்கதுரையின் உசுக்காட்டி, பிணங்களோடு வாழ்க்கையில் மாரடிக்கிற மார்ச்சுவரிப் பணியாளர்களின் அவலத்தைப் பதிவு செய்கிற பாட்டாளியின் தலைமுறை நாற்றங்கள் – ஜாதிக்கலவர நேரத்திலும் ஒரு தொழிற்சங்கத் தலைவர் பார்க்கப்படும் பார்வையைச் சரியான தளத்தில் சித்தரிக்கிற அல்லிஉதயனின் 'அடித்தளம்' என்று ஒவ்வொரு கதையின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொன்றாய்ச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால், இக்கதையில் எல்லாம் ஊடாடும் ஒரு முக்கியப்பண்பு மனிதநேயம். மனிதநேயம் கிட்டத்தட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள அனைத்துப் படைப்பாளிகளுக்குள்ளும் அடிநாதமாக ஒலிக்கிறது. மனித உணர்வு மட்டத்தை, பண்பாட்டு மட்டத்தை ஒரு மில்லிமீட்டராவது நிச்சயம் இந்தக் கதைகள் உணர்த்தும். ஒரு சிறுகதைத் தொகுப்புக்கு அதைவிடப் பெரிய அந்தஸ்து என்ன வேண்டும்?

இதனை வெளியிட்ட இந்தியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு) உண்மையில் பெருமைக்குரியதே.

***– கருப்பையா***

*வெளியீடு : இந்தியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு), பழைய எண்.115, அங்கப்பன் தெரு, சென்னை – 1.*

*விலை ரூ.30*



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# சாம்பல்

எப்போதும் இல்லாத அளவிற்கு இந்த வருஷம் மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. மற்ற நாளென்றால் கூட பரவாயில்லை. திபாவளியும் அதுவுமாக மழை தூறிக் கொண்டிருந்தது. எல்லோருக்கும் எரிச்சலாகப் போய்விட்டது. யாரும் எங்கேயும் போகவில்லை. வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள். எப்போதாவது எங்கேயாவது தூரத்தில் நனைந்துபோன பட்டாசு வெடிக்கும் சத்தம் டப்பென்று கேட்டுக் கொண்டிருந்தது. இதுவே இந்நேரம் மழையில்லாமல் இருந்திருந்தால் தெரு முழுவதும் பட்டாசு வெடித்த காகிதங்கள் குப்பையாகக் கிடக்கும். ஆனாலும் மழை விட்ட பாடில்லை. லேசாகத் தூறிக் கொண்டிருந்தது.

அண்ணன் சுவரோரமாக ஸ்டூலில் உட்கார்ந்து மோவாயை கையில் தாங்கியபடி சாரலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது(!) இப்போதெல்லாம் அண்ணன் ரொம்பவும்தான் மாறிப்போய்விட்டது. இதுவே பழைய அண்ணனாக இருந்திருந்தால் இப்படியா அமைதியாக உட்கார்ந்திருக்கும்? இந்த மழைக்கு எத்தனை ஆட்டம் போட்டிருக்கும். அண்ணன் ரொம்ப நுணுக்கமான ரசனையுள்ள ஆளு. மழை பெய்வதைப் பார்த்துவிட்டால் உடனே ஓடிச் சென்று நோட்டு எடுத்து வந்து மழை பற்றி குறைந்தபட்சம் ஒரு கவிதையாவது எழுதியிருக்கும்.

> "பாரதின்னா தலைப்பாகை, பெரியார்னா வெண்தாடி எப்படி அடையாளமோ அதுபோல எங்க அண்ணன்னா எப்பவும் ஒரு புத்தகம் கூடவே இருக்கும்."


**அ. மாரீஸ்வரன்**



படிப்பகம்

www.padippakam.com

இப்படித்தான் ஒரு தடவை எங்கோ வெளியில் சென்றிருந்த அண்ணன் கொட்டும் மழையில்



நனைந்து கொண்டே வந்தவுடன் தலையைக் கூடத் துவட்டாமல் இப்படி ஒரு கவிதை எழுதியது.

*"உயிரினத்தின் உயிரே!*
*மழையே -*
*ஏழைகள் என்றால்*
*இஷ்டமா உனக்கு?*
*நிறைய கொடுத்து*
*நிறைய எடுக்கிறாயே*
*உடல் அழுக்கு திர*
*உதவிய மழையே!*
*மன அழுக்கு திர -*
*மருந்தொன்று சொல்வாயா?"*

அன்றைக்கு பிடித்த ஜலதோசமும், காய்ச்சலும் ஒருவாரம் வாட்டி எடுத்துவிட்டது. அதைவிட மதினியிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட ஏச்சும் பேச்சும் காய்ச்சலைவிடக் கொதித்தது.

போன வருசம் தீபாவளியன்று தீபாவளி மலர் வாங்கிவந்து ஒவ்வொன்றாக எல்லோருக்கும் படித்துக் காட்டியது. நிறைய ஜோக்கெல்லாம் படிச்சுக் காட்டியதும், வீட்டிலுள்ள எல்லோரும் விழுந்து விழுந்து சிரிச்சோம்.

"ரொம்ப விழுந்து விழுந்து சிரிக்காதீங்க... அப்புறம் காயமாயிடப் போவுது" - என்று அண்ணன் சொன்னதும் மறுபடியும் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிச்சோம்.

வீட்டுல அண்ணன் இருந்தா வீடே



படிப்பகம்

www.padippakam.com

எப்பவும் கலகலப்பா இருக்கும். அது வும் அண்ணன் வீட்டில இருக்கிறது தெரிஞ்சா தெருவுல இருக்கிற பசங்க, ஏன் பொண்ணுங்ககூட வந்துரு வாங்க. அப்புறம் ஒரே அரட்டைதான். சந்தோசமா இருக்கும்.

எல்லாரும் எல்லாப் பிரச்சனைக ளையும் மறந்து கெடப்பாங்க. எல்லோ ரையும் சந்தோசப்பட வச்சுட்டு அண் ணன் வேடிக்கை பார்க்கும். எதையும் சீரியசாக எடுத்துக்காதவரு அண் ணன். எல்லாமே "டேக் இட் ஈஸி" பாலிசிதான். ஆனா அண்ணனை இப்ப பார்க்கிறபோது பாவமாக இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது. எல்லாம் இந்த மதினியால வந்த வினை. எப்பப் பார்த்தாலும் 'நைநை'ன்னு நச்சரிக்கும்.

அண்ணனுக்கு புத்தகம்னா உயிர். எப்பப் பார்த்தாலும் அண்ணன் ஏதாவது ஒரு புத்தகத்தோடதான் இருக்கும். பாரதின்னா தலைப்பாகை. பெரியார்னா வெண்தாடி. எப்படி அடையாளமோ அதுபோல எங்க அண்ணன்னா எப்பவும் ஒரு புத்தகம் கூடவே இருக்கும். புத்தகம் இல்லாத அண்ணனைப் பார்ப்பதென்பது ரொம்ப அபூர்வம். புத்தகத்து மேல அப்படி ஒரு பைத்தியம். சிறுவர் மலரிலிருந்து ஓஷோ, டால்ஸ்டாய் வரை எல்லா புத்தகமும் படிக்கும். சித்த வைத்தியத்திலிருந்து சினிமா பாட்டுப் புத்தகம் வரைக்கும் சேர்த்து வச்சிருக்கும். புதுசா ஏதாவது பத்திரிகை வந்தால் முதல் ஆளாக அண்ணன்தான் அதை வாங்கி வரும்.

அதே நேரத்தில், தான் மட்டும் படிக்காம எல்லாருக்கும் 'ஓசி'யில படிக்கவும் கொடுக்கும். தனக்குத் தெரிஞ்ச ஒரு நல்ல விஷயத்தை நாலு பேருக்கும் தெரியட்டும்னு நெனைக் கும்.

அண்ணனோட புத்தக பழக்கம் நெறைய நண்பர்களைக் கொடுத்தது. எப்பப் பார்த்தாலும் யாராவது ஏதாவது புத்தகம் கேட்டு வந்து நிப்பாங்க. அப்படிக் கேட்டு வர்றவங் களுக்கு புத்தகத்தோட ஒரு டீயும் இனாமாகக் கிடைக்கும். வர்றவங்க ளுக்கு டீ போட்டுக் கொடுப்பதில் தான் அண்ணனுக்கும், மதினிக்கும் பிரச்சனை ஆரம்பித்தது. (அப்படி வாங்கிட்டு போன பல புத்தகங்கள் திரும்ப வருவதில்லை என்பது வேறு விஷயம்) வெளியூர்களிலிருந்தும் புத்தகம் கேட்டு சில சமயம் தபால்கூட வருவதுண்டு.


சாப்பிடும்போதும் சரி, படுத்திருக் கும்போதும் சரி, புத்தகத்தோடுதான் அண்ணன் இருக்கும். அண்ணனுக் குப் பிடிக்காத "புளிக்குழம்பு" சமை யல் என்றால், ஒரு புத்தகத்தை மட்டும் தொடுத்துவிட்டால்போதும். படித்துக் கொண்டே சாப்பிட்டு முடித்துவிடும். அண்ணன் ஒரு பெரிய நூல்நிலையம் மாதிரி. எந்த விஷயம் பற்றிக் கேட்டா லும் சொல்லும்.

ஆனால் மதினிக்குப் புத்தகம் என்றால் ஜென்ம விரோதி. அது பொட்டலம் கட்டுவதற்கு பயன்படும் வெறும் பேப்பர் என்கிற அளவிற்குத் தான் அவளது சிந்தனை ஓடியது. புத் தகத்தை மட்டுமல்ல, புத்தகம் படிப்ப வர்களைக் கண்டாலே மதினிக்கு அறவே பிடிக்காது. படித்துக் கொண் டிருக்கும் அண்ணனைப் பார்த்தால் அவளுக்கு எரிச்சலாக இருக்கும். ஒரே வசவுதான். ஆனால் அண்ணன்



படிப்பகம்

www.padippakam.com



அதையெல்லாம் காதில் போட்டுக் கொள்வதில்லை. அது அவளுடைய இயல்பு என்று 'தன் முயற்சியில் மீண்டும் தளராத விக்கிரமாதித்தனாக' மீண்டும் புத்தகம் படிக்க ஆரம்பித்து விடும்.

இப்படித்தான் ஒருநாள் மதினி ஏதோ ஒரு வேலை சொல்ல, அண்ணன் தன்பாட்டிற்கு புத்தகம் படித்துக் கொண்டிருக்க, மதினிக்கு 'வெளம்' கிளம்பியது. ரௌத்திரமானாள். அண்ணன் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து அத்தனை புத்தகங்களையும் எடுத்து அடுப்பில் வைத்து எரித்துவிட்டாள். யார் மீதோ எப்போதோ உள்ள ஆத்திரங்களையெல்லாம் ஒன்றுதிரட்டி அந்தப் புத்தகங்களை எரித்து தீர்த்துக் கொண்டாள். அந்தத் தீயிலேயே சோறு பொங்கி, குழம்பு வைத்து... சமையலை முடித்துவிட்டாள்.

மதினி சமையலை மட்டுமா முடித்தாள்?

அன்று மௌனமாய் ஆனதுதான் அண்ணன். கொஞ்ச நேரத்தில் கண்களெல்லாம் அண்ணனுக்கு கலங்கியது. மெதுவா ஒரு சிரிப்பு மட்டும் தனக்குள் சிரித்துக் கொண்டது. அது எப்போதும் சிரிக்கும் சிரிப்பாய்த் தெரியவில்லை. மதினியை ஒன்றும் சொல்லவும் இல்லை. அன்று முழுவதும் யாருடனும் பேசவுமில்லை. அன்றிலிருந்து மதினியிடமும் கொஞ்சம் கூடப் பேசவில்லை. மதினியும் அதைப் பற்றிப் பெரிதாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவளும், தான் எதிலோ வெற்றி பெற்றுவிட்டதைப் போன்ற ஒருவித பெருமிதத்தில் அலைந்தாள்.

அண்ணனின் பேச்சு குறைந்தது. நண்பர்கள் குறைந்தனர். அன்றிலிருந்து அண்ணன் புத்தகம் எதுவும் வாங்குவதுமில்லை, படிப்பதுமில்லை. ரொம்பவும்தான் அண்ணன் மாறிவிட்டிருந்தது. பெரும்பாலும் அமைதியாகவே இருந்தது.

எங்களுக்கெல்லாம் ஏதோ அண்ணனையே முழுசாக இழந்துவிட்டது போல இருந்தது. எவ்வளவோ முயற்சி செய்தும் அண்ணன் மாறவேயில்லை. மாற்றமுடியுமா? தெரியவில்லை.

இன்னமும் அண்ணன் வெளியே பெய்துகொண்டிருந்த மழையையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

அடுப்பங்கரையில் மதினி தீபாவளிப் பலகாரங்கள் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள்.

"அண்ணே... சாப்பிட வா" என்றேன் நான்.

"ம்..." என்றவாறு ஏறிட்டுப் பார்த்த அண்ணன் மறுபடியும் மழையை வேடிக்கை பார்த்தது.

அடுத்த பாட்டம் மழை உரத்துப் பெய்யத் தொடங்கியது.



படிப்பகம்

www.padippakam.com

# தினம் தினம்...



தொலைந்து
போன
நாட்களைவிட
இரவலாய்ப்
பெற்ற நாட்கள்
மறக்க முடியாதவை

வரும்
நாட்களில்
குழந்தைகளோடு
கழிக்கலாம்
தோட்டத்தில்
மலர்கள்
கொய்யலாம்
என்றாலும்
பணிகளின் சுமையும்
இன்னும் பிறவும்
அலைக்கழிக்கும்
போல...

சில விடுமுறைகள்
அவசரப் பயணங்களில்
முடிகின்றன.
அல்லது
கோபங்களில்
அர்த்தம் இழந்துவிடும்.

பால்ய காலம்
நோக்கித்
திரும்பிவிடும்
ஆசையே
இயல்பாய்த்
தினம் தினம்

குடும்பச் சூழலில்
எந்தக் கடிகாரமும்
எனக்காய்க்
காத்திருப்பதில்லை.

அயர்ச்சியும்
சுமையும்
தீராத நோயாகிவிட்டது

ஒண்ணாம் தேதியன்று
மல்லிகைப் பூவும்
அல்வாவும்
கணவரும் கூட
அர்த்தமற்றே
தெரிகிறார்கள்
எனக்கு –

– சி.ராசலெட்சுமி
திருவாரூர்


படிப்பகம்

www.padippakam.com



# பிய்த்தெறியப்பட்ட புறாவின் சிறகுகளை...

ஸ்ரீரசா

**லோ**கத்துலே கொஞ்ச நாளைக்கு முன்பு சித்திரங்களிலும், சிற்பங்களிலும், பொம்மைகளிலும், அச்சடித்த போஸ்டர்களிலும், ஜனத்திரளின் மனங்களிலும், வாக்குகளிலும், எழுத்துக்களிலும் வெகு நேர்த்தியாக, அழகாக மனிதர்க்குத் தேவையான, அவசியமான செய்தியொன்றை, உயிர்ப்போடு, துடிப்போடு மனிதர்களின் வானங்களில் சிறகசைத்துச் சொல்லிக்கொண்டிருந்தது ஒரு ஜீவன். அதுதான் வெள்ளைப்புறா. அது சொன்ன சேதி சமாதானம். அதாங்க.... உ...ல...க... ச...மா... தா...ன....ம்..!

கொஞ்ச நாளாய் அதுவும் செப்டம்பர் 11ல் அலுமினியப் பறவைகள் அமெரிக்கப் பெருமிதக் கட்டிடங்களில் மோதி, அவற்றைச் சீட்டுக்கட்டு அடுக்குகளைப்போல, கூச்சலும் புழுதியும் வெக்கையும் கிளப்பி, பொல பொலவெனச் சரியச்


படிப்பகம்

www.padippakam.com

செய்ததைக் கண்ணுற்ற பிறகு தொடரும் இந்த நாட்களெல்லாம் பயங்கரவாதம், யுத்தம், போர், குண்டுமழை, ஆந்த்ராக்ஸ் அலறல், அகதிகளின் அலறல், அப்பாவிப் பொதுமக்களின் அலறல், சிலுவை யுத்த அலறல், ஜிகாத் அலறல், எல்லையற்ற நீதியின் அலறல், ஐ.நா. சபை அலறல், கூட்டாளி நாடுகள் அலறல், கூட்டற்ற நாடுகள் அலறல், ராணுவ பட்ஜெட் எகிறுகிற அலறல், உள்நாட்டுக் கலவர அலறல், விமானக் கம் பெனிகள் மூடல் அல றல், வேலையற்று வீட் டுக்குப்போவோரின் அலறல், விலைவாசி எகிறப்போகிற அலறல், பயங்கரத்தைத் தடுக்க பயங்கரச் சட்டம் போடும் அலறல்..... அப் பப்பா... உலகம் முழுக்க அலறல்கள், கூச்சல்கள், கொக்கரிப்புகள், சவால் கள், சதிவலைகள், குமு றல்கள்.... இன்னும் இன் னும் மனிதகுலத்தை நிலை குலையச் செய்யும் எல்லாமும்! அதுவும் மனி தரை மனிதர் மனிதராகப் பார்ப்ப தைச் சீர்குலைக்கிற கொடூரம்...



ஆயுதம் வேண்டாம்! சோறு கொடு!

மீண்டும் மீண்டும் கேட்கிறது.. பிய்த் தெறியப்பட்ட, ரத்தம் சொட்டப் பிய்த் தெறியப்பட்ட சமாதானப்புறாவின் சிறகுகளின் படபடப்பு.

உலகை மறுபங்கிடு செய்யத்துடித்த ஆதிக்கவாதிகளால் உலகின் மீது திணிக்கப்பட்ட இரண்டு கொடூர யுத் தங்கள்... பல லட்சம்பேரைக் கொன்று குவித்த... பல லட்சம்பேரை ஊனமுற் றோராக்கிய... பல கோடிக் குடும்பங் களை அனாதைகளாக... அகதிகளாக... நோயுற்றவர்களாக... வறுமை பீடித்தவராக ஆக்கிய சிறியதும், பெரி யதுமான எண்ணற்ற யுத்தங்கள்...

அன்றொருநாள்... அதுதான் சென்ற நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் முதல் உலக யுத்தம் வெடித்த வேளை ருஷ்யாவில் மாபெரும் தலைவன் லெனின் தலைமையில் ஆகாவென்றெழுந்தது யுகப்புரட்சி. குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு... உலகில் முதன்முறையாக உழைக்கும் பாட்டாளிகள், விவசாயிகளின்... அதா வது, அதுநாள்வரை அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஏன் மனிதரென்றே மதிக்கப்படாதவரின் முதல் அரசு. முதல் அரசின் முதல் பிரகடனமே, லெனின் பிரகடனப்படுத்திய முதல் பிரகடனமே யுத்தத்திலிருந்து ருஷ் யாவை விடுவிக்கும் சமாதானப் பிரகடனம்!

யுத்தமிருந்தால் நாடு எப்படி வளரும்... மனிதர் எப்படி வளருவர்? ஆனாலும் அந்த அரசைப் பொறுக் காத ஆதிக்க சக்திகளால் ஏகாதிபத்



படிப்பகம்

www.padippakam.com

தியவாதிகளால் மீண்டும் யுத்தம் திணிக்கப்பட்டது. ஹிட்லர் என்கிற மாபெரும் பயங்கரத்தை... இரண்டு கோடிப்பேரைப் போரில் பலிகொடுத்து ஸ்டாலின் தலைமையில் சோவியத் மக்கள் தடுத்துநிறுத்தினர்.

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் ஜப்பான், அவமானகரமாகச் சரணடைந்தபிறகும்... யுத்தத்தில் இருந்து நைசாக ஒதுங்கி அணுகுண்டு தயாரித்து வைத்திருந்த அமெரிக்கா – இன்றைக்கு உலக வர்த்தக மையமும், பென்டகனும் தான் வளர்த்த பயங்கரவாதச் செல்லப் பிராணிகளாலேயே தாக்கப்பட்டதற்காக அலறுகிறதே... அதே அமெரிக்கா, அணுகுண்டைச் சோதித்துப்பார்க்க ஹிரோஷிமா, நாகசாகி மக்களை வரலாற்றின் பக்கங்களில் நிரந்தரச் சாம்பலாக்கியது.

அப்புறமும் தயாரித்தது... தயாரித்தது... தயாரித்துக்கொண்டிருக்கிறது...




அமெரிக்கப் பெருமுதலாளிகளின் – முதலாளிகள் என்றால் ஏதோ அல்வாக்கடை முதலாளிகள் அல்ல – ஆயுதக்கடை முதலாளிகளின் அரசு நாசம் விளைவிக்கக்கூடிய, கொலைகார ஆயுதங்களை. காரணம், அதாவது 1990க்கு முன் சொல்லப்பட்ட காரணம் வல்லமை பொருந்திய சோவியத் யூனியன்...

சோவியத்தான் முன்கை எடுத்தது. 70களில் 80களில் எல்லாம் உலகெங்கும் சமாதானத்திற்கான போர்க்குரல். ஆயுதக்குறைப்பு, ஆயுத ஒழிப்பிற்கான மக்கள் குரல்!

அமெரிக்க அரசு – ஆயுத வியாபாரிகளின் அரசு – சோவியத் யூனியன் சிதறுண்டு போவதற்குப் பிரம்மப்பிரயத்தனம் செய்ததற்கு மற்றுமொரு முக்கிய காரணம் சோவியத் உலகெங்கும் வளர்த்த உலக சமாதான இயக்கம். சோவியத் சிதறுண்டபோது ரத்தம் சொட்டச்சொட்டப் பிய்த்தெறியப்பட்டன சமாதானப்புறாவின் சிறகுகள்... அதாவது, உலக மக்களின் வாழ்வுச் சுதந்திரத்திற்கான சிறகுகள்...

அது அமெரிக்கா சார்ந்த உலகத்தின் அகராதிப்படி கெடுபிடி யுத்தக்காலம். ஆகையினால் ஆயுத உற்பத்தி அவசியம் என்று மிகப் பெரிய சமாதானம் (?) சொன்னார்கள். ஆனால், சோவியத் இல்லாமல் போனபின்பும் எதற்காம் கொலைகாரத்தனமான நாசம் விளைவிக்கக்கூடிய ஆயுத உற்பத்தி?

சோவியத் சிதைவுக்காகக் காரணம் புரியாமலேயே இனிப்புக்



படிப்பகம்

www.padippakam.com

கொடுத்து மகிழ்ச்சி கொண்டாடிய அற்பர்களுக்கெல்லாம் இன்றைக்கும் புரியாத புதிர் கேள்வி இது.

விடை சாதாரணம் தான். ஒரு அநியாய வியாபாரம் செய்து லாபம் தின்று கொழுத்தவன் சும்மா இருப்பானா? அதுவும், உலக மக்கள் வயிற்றிலெல்லாம் அடித்து.. டாலர்கள் கொட்டி உற்பத்தி செய்த ஆயுதங்களையெல்லாம் அழிக்கச்சொன்னால் கேட்பதற்கு அவன் என்ன கேணயனா?



Look Mother, how well-fed these are!

சரி, உற்பத்தி செய்த ஆயுதங்களை என்ன செய்வது? விற்க வேண்டுமே! கொடு அமெரிக்க ஜனங்களுக்கெல்லாம் துப்பாக்கி வைத்துக்கொள்ளச் சுதந்திரம்! அப்புறம் சிஐஏ என்கிற ஆயுத வியாபார அரசின் நலம் விரும்பும் பணியாளர்களை நாடுகளின் வரைபட இடுக்குகளுக்குள் உலவவிடு! அவைகளிடையே இருக்கும் வேறுபாடுகளை ஊதிப்பெருக்கு! வேறுபாடில்லாதவரிடம் வேறுபாடுகளை உண்டாக்கி, அமெரிக்க நியாயத்தை நிலைநாட்டு! பிடிக்காத அரசுகளைக் கவிழ்! தலைவர்களைக் கொலை செய்! ரகசிய மற்றும் நேரடிவழிகளில் அமெரிக்காவுக்குச் சேவகம் செய்யும் எல்லார் கைகளிலும் கைத்துப்பாக்கி... லேசர் துப்பாக்கி... கன்னிவெடி... பெரிய விமானம்... ஏ.கே.47, அணுகுண்டு எல்லாம் கொடு! சும்மாவும் கொடு! வியாபாரம் செய்யவும் கொடு! கொடுக்கிறதுன்னா சும்மாவா? டாலர்... உலகநாட்டு மக்களின் உழைப்பிலிருந்து உருவான வரிப்பணங்களில் இருந்தெல்லாம் உருமாற்றப்பட்ட வேர்வையும், ரத்தமும் வழிகிற ருசியான டாலர் வாங்கிக்கொண்டுதான்.

மண்ணுக்குள் ஆயுதங்கள், கடல்களுக்குள் ஆயுதங்கள், விண்ணில் ஆயுதங்கள்... பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் அமெரிக்க பகவானின் ஆயுதங்கள்!


படிப்பகம்

பகவானின்... ஆண்டவரின் விண்ணரசை நிலைநாட்ட நட்சத்திரப் போர்த் திட்டங்கள்... 'ஸ்டார்வார்ஸ்' சினிமாக்கள், ராம்போக்களின் விஸ்வரூபங்கள். சேனல்களின் வலைவிரிப்புக்கள்!

சும்மாவே வரலாறு மனிதர்கள் மேல் கீறிவைத்துவிட்டுப் போயிருக்கிற சாதிவாரியான, இனவாரியான, மதவாரியான, அதிகாரவாரியான, பிரதேச வாரியான, பொருளியல்



தலைமுறைகளாகத் தொடரும் ஹிரோஷிமா பயங்கரம்

ரீதியான, கலாச்சார, பண்பாட்டு, சமூகப்பிளவுகள் ஏராளம்! பிளவுகள் மிகுந்ததென்றால் மோதல்களும் மிகுமே! மோதல்களைச் சிறிய பெரிய சண்டைகளாக, போர்களாக, யுத்தங்களாக உருவாக்குவதும் எளிதே!

வெறும் கல்லாயுதம், வில்லாயுதம் கொண்டு தாக்கிய காலங்கள் மறைந்து இன்று மனிதன் விஞ்ஞானப்பூர்வமாக வளர்ந்துவிட்டான் அல்லவா? அதுதான் கிருமி ஆயுதங்கள், ரசாயன ஆயுதங்கள், லேசர் ஆயுதங்கள், அணு ஆயுதங்கள்...!

சோத்துக்கில்லாவிட்டாலும் மானஸ்தரல்லவா மனிதர்! எதிரிகளைப் பூண்டோடு வேரறுக்காவிட்டால் எப்படி? வாங்கி வாங்கி ஆயுதங்களைக் குவித்தனர். பக்கத்து நாட்டுக்காரன் எப்–16 ரகம் 4 வாங்கினால், நான் 40 வாங்குவேன் என்று வாங்கிக்குவித்தனர், குவிக்கின்றனர்.

விளைவு, அமெரிக்கா மற்றும் நேட்டோ (கொள்ளைக்கூட்டு) நண்பர்கள் வளர்ந்த நாடுகளாம். மற்றவரெல்லாம் வளர்கின்ற (அவ்வளவு சீக்கிரம் வளரவிட்டுவிடுவார்களா?) அதாவது வறுமைப்பட்ட நாடுகளாம். அப்புறம் உலகமயம், தனியார்மயம், தாராளமயம் வேறு.

இந்தக் குழப்பங்களுக்கிடையிலும் தனது பூமியைச்சமதளமாக்கிக்கொண்டு சீனா மட்டும் உறுதியாக நடையயின்றுகொண்டிருக்கிறது.

மீண்டும் கேட்கிறது... பிய்த்தெறியப்பட்ட சமாதானப் புறாவின் சிறகுகளின் படபடப்பு...

இன்றைக்கு அமெரிக்கா, ஆப்கன் மீது நடத்தும் யுத்த ஒளிபரப்பில் தெரியுது ஒரு வினோதக் காட்சி. அதுதான் அமெரிக்காவின் எல்லையற்ற மனிதாபிமானத்தை உலகுக்குப் பறைசாற்றும் – பாழாக்கிக்கொண்டிருக்கும்... அமெரிக்கா பாழாக்கிக்கொண்டிருக்கும் ஆப்கன் மக்களுக்கு – விமானத்திலிருந்து ஒவ்வொன்றும் நாலரை டாலர் பெறுமானமுள்ள உணவுப் பொட்டலங்கள் தூவும் காட்சி...



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

இரவு பகலாய்க் குண்டு மழையோடு, உணவு மழையும்... ஆஹா... அமெரிக்கக் கடவுளின் கடூரத்தையும், கருணையையும் ஒருசேரப்பொழியும் அற்புத ஆற்றல்தான் என்னே!




வேடிக்கை என்னவென்றால், வீசிய மொத்த உணவுப் பொட்டலங்களின் மதிப்பு, வீசிக்கொண்டிருக்கும் அழிவு சக்திவாய்ந்த பெரிய குண்டுகளில் ஒன்றுக்காகும் செலவில் 10ல் ஒரு பங்குகூட இல்லை!

உலக வறுமையின், வறட்சியின், கலவரங்களின், கொந்தளிப்புகளின் ஊற்றுக்கண் இப்போது புரிகிறதா?


அதுதான் அமெரிக்க ஆயுத வியாபாரிகளின் லாபம் சம்பாதிக்கும் வெறி... அவர்களுக்கான அரசு... அவர்களுக்கான எல்லையற்ற நீதி...

ஹிட்லர் மீசையை மழித்துவிட்டு புஷ் ஆனாலும்... வரலாற்றின் குப்பைக்கூடையில் அவருக்கும் ஒரு நிரந்தர இடம் உண்டு.

வானம் என்பது ஆயுத நகங்கள் உள்ள, அதிபயங்கர ஏவுகணை மூக்குகள் உள்ள கழுகுகளின் ஆதிக்கத்திலா?

உலகமக்களின் முன்னுள்ள முதற்பெரும் கடமை, பிய்த்தெறியப்பட்ட புறாவின் சிறகுகளை ஒன்றுசேர்ப்பதும் ரத்தமும் சதையுமாக அதற்கு உயிர்கொடுப்பதும், அதன் வலிமையான, உறுதியான சிறகசைப்பை உறுதிப்படுத்துவதும்தான்!

உலகமும், மனிதகுல சந்ததியினரும், நாளைக்கும் உயிர்வாழ... வேண்டும் சமாதானம்!






படிப்பகம்

www.padippakam.com




# புதுச்சேரியில் செம்மலர் கருத்தரங்கு

புதுச்சேரியில் செம்மலர் வாசகர் வட்டம் சார்பில் கருத்தாய்வு அரங்கம் அக்டோபர் 1 அன்று நடைபெற்றது.

புதுவைப் பகுதியில் செம்மலர் விற்பனையை அதிக்கவும், சாதாரண அடித்தட்டு மக்களுக்குச் செம்மலரைக் கொண்டு செல்லவும் இக்கருத்தாய்வரங்கம் வழி காட்டட்டும் எனக் குறிப்பிட்டார் **லெனின் பாரதி** தனது வரவேற்புரையில்.

தலைமையுரையாற்றிய **சு.இராமச்சந்திரன்** கூறுகையில், செம்மலரில் வெளிவருகிற படைப்புகள் மிகச் சாதாரண மக்களைச் சென்றடைபவை. அவர்களையே கதை மாந்தர்களாகவும் கொண்டவை. அர்த்தமுள்ளவை என்றார்.

தமிழகத்திலுள்ள இலக்கியப் பத்திரிகைகளுக்கு நடுவே செம்மலர் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது. கலை – இலக்கியம் அறிவு ஜீவிகளுக்கு மட்டுமே ஆனது என்பதை மாற்றவே செம்மலர் பிறந்தது. மனிதாபிமானத்துடன் எழுதுகின்ற அனைத்து எழுத்தாளர்களையும் வேறுபாடின்றி செம்மலர் சுவீகரித்துக் கொண்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

**வில்லியனூர் பழனி** : சிறந்த கவிதைகளின் தொகுப்பை செம்மலர் வெளியிட வேண்டும். செம்மலர் பற்றி ஏற்கெனவே இருந்த எனது சிந்தனைக்கு மாறாக செம்மலரில் பிரச்சார நெடி இல்லை. கனமான, தரமான இலக்கிய இதழ், இந்த இதழ் அடித்தட்டு மக்களிடம் சென்று சேர வேண்டும். அது எளிய பணி அல்ல என்றாலும் அவசியம் செய்தாக வேண்டும்,

**இரா.நாகசுந்தரம்** : 2000 ஆண்டின் 12 இதழ்களில் 32 சிறுகதைகள் வெளியாகி உள்ளன. 6 மொழிபெயர்ப்புக் கதைகள் உள்ளன. தென் மாவட்டங்களைச் சேர்ந்த படைப்பாளிகள் பிரதான பங்கு வகிக்கிறார்


படிப்பகம்

www.padippakam.com



கள். 4 அல்லது 5 பெண் படைப்பாளி களும் உள்ளனர். செம்ம லரில் கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 300 சிறு கதைகள் வெளி வந்துள்ளன.

செம்மலரில் வெளியான சிறுகதை கள் தனிமனித மனோநிலை மற்றும் வாழ்க்கைச் சிக்கல்களையும், சுற்றுச் சூழல் பிரச்சனைகளையும், குடும்ப அமைப்பு மற்றும் நடைமுறைச் சிக் கல்களையும், சமய ஒற்றுமை பற்றியும் நாம் இன்று எதிர்கொள்ளும் பிரச்னைகள் பற்றியும் பேசின. செம்மலர் புதிய படைப்பாளிகளை உருவாக்கும் பட்டறையாகவும் திகழ் கிறது.

***அரசியல் : இரா.குணசேகரன்:*** தனியார்மய, தாராளமய, உலக மயமாக்க ஆபத்துக்களை செம்மலர் பேசுகிறது.

பல்வேறு பொதுத்துறை நிறு வனங்கள் தனியாருக்கு விற்கப்படு வதால் நிறுவனம் சார்ந்த வேலைகள் குறைந்து கொண்டு வருவதைச் சுட் டிக் காட்டியது.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது குறித்து தனியார்கள் கவலைப் படாதது குறித்து அக்கறையோடு விசாரித்தது. இயக்கம் சார்ந்தவர்கள் மட்டுமல்லாது குடும்பத்தினரும், நண்பர்களும் படித்து விவாதிக்க வேண்டிய தரமான இதழ் செம்மலர்

***கட்டுரைகள், ஜே.கிருஷ்ண மூர்த்தி:*** திண்ணைப் பேச்சும், கலந்துரையாடலும் மிகவும் நன்று. இளமதியின் பதில்கள் சிந்தனையைத் தூண்டுகிற வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. பாராட்டத்தக்கது. தசரதனின் மனைவிமார் குறித்தக் கேள்வியும், விசுவின் அரட்டை அரங் கம் குறித்தக் கேள்வியும் பதிலளிக் கப்பட்ட விதம் மிகவும் பாராட்டும் படியாக இருந்தது. கலைஞரே! இது என்ன புது கலாட்டா என்று கலை ஞரின் சந்தர்ப்பவாதத்தை அம்பலப் படுத்திய கட்டுரை: ஹவசிங் போர் டில் ஒரு சிறிய அறையில் ரூ. 100 வாட கைக்குக் குடியிருக்கும் மேற்குவங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா என்பது போன்ற சுவையான துணுக் குச் செய்திகள் இருந்தன.

செம்மலரில் சிறுவர்களுக்கான பகுதிகளும், வேலை, படிப்பு சம்பந்த மான கட்டுரைகளும், பெண்கள் பற் றிய கட்டுரைகளும் அதிகம் இடம் பெற வேண்டும்.


படிப்பகம்

www.padippakam.com



கரிக்கலாம்பாக்கம் ஞானசேகரன் மற்றும் குடும்பத்தினர் தங்களது பத்தாம் ஆண்டு மண நாளை ஒட்டி பத்தாண்டு செம்மலர் சந்தாவை செம்மலர் துணைப் பொதுமேலாளர் எஸ். ஏ.பெருமாள் அவர்களிடம் வழங்கினர். 50 ஓராண்டுச் சந்தா தொகையை இராச.செயராமன் எஸ்.ஏ.பெருமாளிடம் வழங்கினார்.

***சினிமா: அ.ஹேமாவதி:*** செம்மலர் சினிமாவின் கதை அமைப்பை மட்டும் விமர்சிக்காமல் சிக்கல் மற்றும் தீர்வு குறித்தும் விமர்சிக்கிறது. 2000 ஆண்டு இதழ்களில் திரைப்படம் தொடர்பாக 4 கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. குழந்தைகள் பற்றிய தோழியர் மைதிலி சிவராமனின் கட்டுரை 'குழந்தைகளும், திரைப்படமும்' குறிப்பிடத்தக்கது.

செம்மலரில் டாக்குமெண்டரி படங்கள் குறித்து குறிப்புகளோ, துணுக்குச் செய்திகளோ இடம் பெறாதது வருந்தத்தக்கது. டாக்குமெண்டரி படங்கள் குறித்தும் செய்திகள், ஆய்வுகள் தேவையெனக் கருதுகிறேன்.

***நிறைவுரை : எஸ்.ஏ.பெருமாள் :*** செம்மலர் ஆரம்பித்து 31 ஆண்டுகள் ஆகின்றன. இது ஒரு புதுமையான ஆய்வரங்கமாகப்படுகிறது. இதுவரை செம்மலர் இதுபோல வெளிப்படையாக விமர்சிக்கப்பட்டதோ, பாராட்டப்பட்டதோ இல்லை. அந்தப் பெருமையை புதுவை பெறுகிறது. எத்தனை நவீனமான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் வந்தாலும் புத்தகம் படிப்பது நின்று போகவில்லை. புத்தகம் படிப்பது கண்ணாடியில் முகம் பார்ப்பது போல. எத்தனை விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டாலும் முகம் பார்க்க கண்ணாடிதான் வேண்டும்.

கடந்த 31 வருடங்களில் பல எழுத்தாளர்களை உருவாக்கி இருக்கிறோம். பத்திரிகை தரமாக, ஜனரஞ்சகமாக அமைய வேண்டுமென விரும்புகிறோம். செம்மலர் இலக்கியவாதிகளுக்காக நடத்தப்படக்கூடிய பத்திரிகை அல்ல, ஏழை வாசகர்களை சென்றடைய வேண்டும் என்கிற இலட்சியத்துடன் நடத்தப்படுகிற பத்திரிகையாகும்.

பக்தவச்சலம் நன்றி கூற ஆய்வரங்க பங்கேற்பாளர்கள் நல்லதொரு நிகழ்ச்சியில் பங்கேற்ற மகிழ்ச்சியில் விடை பெற்றார்கள்.

*– தொகுப்பு : **புதுச்சேரி லெனின் பாரதி***



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கருத்து

ஈவ் டீசிங் போன்றவை சமுதாயத்தில் இருந்து நீக்க சுதா சுந்தரராமன் கூறியபடி சினிமாக்களில் கதாநாயகன் ஈவ் டீசிங் பண்ணுவதை சென்சார் போர்டு தண்ட விதிக்க வேண்டும். மேலும் அவர் கூறியபடி சினிமாவில் நடிக்கும் பெண்கள் பற்றி நமது கண்ணோட்டம் மாறவேண்டும்.

*–பிரின்ஸ் ராபர்ட் சிங்*
*நாகர்கோவில்*

சோழநாகராஜனின் "ஈவ் டீசிங்" கட்டுரையில் வரும் பெண்ணின் உள்ளத்தில் தைரியம் விதைக்கப்பட வேண்டும்" போன்ற வரிகளை ஒவ்வொரு சமூக ஆர்வலர்களும் கவனிக்க வேண்டும்.

*– வல்லிக்கண்ணபிரியன்*
*இராமேஸ்வரம்.*

அக்டோபர் செம்மலரில் வெளியான ஈவ் டீசிங் கட்டுரை மிக அருமை.

குறிப்பாக, முத்தாய்ப்பாக அமைந்தது பேராசிரியர். மருத்துவர் வி.கே.சாமிலால் தெரிவித்துள்ள அர்த்தம் பொதிந்துள்ள கருத்துக்கள்.

*–லெனின் பாரதி.*
*புதுவை – 8.*




அக்டோபர் மாதச் செம்மலருக்கு என்னாயிற்று? அத்திப்பூத்தாற் போல் ஆங்காங்கே துணுக்குகள், துளி.... துளி.... துளி.... செய்திகள், ஈவ் டீசிங் பற்றிய சர்வே அனைத்தும் 'அப்படியா'.... என வாய் பிளக்க வைத்தது. பண்ணைவீடு சிறு கதை என்னை ஏதோ பண்ணியது. அறிவு ஜீவி. சரணாலயம் கதைகள் மிக அருமை.

*– எஸ்.மலைச்சாமி*
*மதுரை.*

அக்டோபர் செம்மலர் இதழில் எனது 'சக்கரவியூகம்' நாவல் மதிப்புரை வெளியாகியிருந்தது. நாவலை முற்றிலுமாக உள்வாங்கிக் கொண்டு நடுநிலையோடு எழுதப்பட்டுள்ள மதிப்புரை எழுதிய திலீபனுக்குப் பாராட்டுக்கள்.

*–பேரா. அ.சிவக்கண்ணன்*
*மதுரை – 16.*

அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றுகூறி இப்போரை தவிர்த்தால் அது தலிபான்களுக்கு 'டானிக்' மாதிரி அமைந்துவிடும். அப்படிப் பார்த்தால் அமெரிக்காவில் பொது மக்கள் பாதிக்கப்படவில்லையா? நமது 'செம்மலர்' போரை எதிர்ப்பது வியப்பாக உள்ளது.

*– கு.இலக்கியப்பிரியன்*
*கங்களாஞ்சேரி.*

அமெரிக்காவில் நடந்துள்ள கொடூர சம்பவத்திற்கு வருந்தாத நாடுகளே இல்லை. இது போன்ற சம்ப


படிப்பகம்

வங்களுக்கு முற்றுப் புள்ளிவைக்க வேண்டிய தருணம் இதுவே. அதே சமயத்தில் ஒரு பின்லேடனுக்காக ஆப்கன் மக்கள் ஏன் பலியாகவேண்டும் என்ற தங்களின் ஆதங்கம் நியாயமே.

– *ஆர்.கே.மணிகண்டன்*
*கோவை.*

**ஒ**ளியையும் இருளையும் ஒருசேர விரும்புவதா? கட்டுரை, கல்வி காவிமயமாவதை எதிர்ப்பதிலும், இட ஒதுக்கீட்டை ஆதரிப்பதிலும், மூட நம்பிக்கையை எதிர்ப்பதிலும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி எள் முனையளவும் தன்னுடைய கொள்கையிலிருந்து பின் வாங்காது என்பதை திமுக தலைமைக்கும், பகுத்தறிவுப் போர்வையில் இனவெறியைத் தூண்டும் 'நந்தனுக்கும்' சுட்டிக்காட்டியது அருமை. கட்டுரையாளருக்கும், வெளியிட்ட செம்மலருக்கும் பாராட்டுக்கள்.

– *அ.காதர்பாட்சா*
*தவுட்டுப்பாளையம்.*

**ப.**ஜீவகாருண்யனின் சரணாலயம் சிறுகதை இன்னமும் கமுகரை வீதியில் நீறுபூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருக்கும் சாதியக் கொடுமைகளைக் கோடிட்டுக் காட்டியது.

– *ம.தனிலா, தண்டுபத்து.*

'**பா**ரதி'க்கு விருது விழா பற்றிய செய்தி கண்டேன். மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. முக்காலே மூணு வீசமும் கவர்ச்சி உலாவரும் படங்களுக்கு மத்தியில், 'பாரதி' போன்ற படங்கள் அத்திப் பூ போன்று தான் மலர்கிறது. இதை தக்கத்தருணத்தில் பாராட்டி, விருதும் வழங்கி கௌரவிக்கும் தமுஎச போன்ற இயக்கங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

– *ச.ஹரிபிரசாத்*
*பரமத்தி வேலூர்.*

**கௌ**சல்யா ரங்கநாதன் காட்டும் அறிவு ஜீவிகள் நிறையவே இருக்கிறார்கள். கதை நன்றாக வந்திருக்கிறது. பண்ணைவீட்டின் நிலப்பிரபுத்துவ குணாம்சத்தை இயல்பாய்க் காட்டியுள்ளார் காமுத்துரை.

– *பெரணமல்லூர் சேகரன்*

செந்தி நாகையசாமியின் 'குறித்து' கவிதை தன்னைச் சுற்றிலும் உள்ள மனிதர்கள் வாழ்க்கையின் கொடுமைகளை அனுபவித்துக்கொண்டிருக்கும்பொழுது, தான் மட்டும் சொகுசாய் வாழ்வதை நினைத்து வெம்புகிற மனிதனைக் காட்டுகிறது. 'பொது சேவை' செய்வதிலேயே ஆர்வம் காட்டி தன் குடும்பத்தை இழக்கின்ற பேராசிரியரின் வாழ்வை நம் முன்காட்டி இமைகளை ஈரமாக்குகிறார் "அறிவு ஜீவி".

–*இரா.நாகராஜன்*
*திருவையாறு*

**ப**ண்ணைவீடு, அறிவுஜீவி ஆகிய இரு சிறுகதைகளும் நடையின் தன்மையால் சிறக்கவில்லை. கவிதைகளில் 'முதல்காதல்' முற்றுகிறது.

– *கு.ரா.*
*மேட்டூர் அணை–6.*

நவகவியின் முதல் காதல் (கவிதை) படிக்கப் படிக்கத் தேன் சொட்டும் பலாச்சுளையாக இருந்தது.

– *இராம.கண்ணன்,*
*திருநெல்வேலி.*

www.padippakam.com

www.padippakam.com

# நிம்மதி வாழ்க்கை



வாழ விடுங்கள், வாழ விடுங்கள்!
பூந்தளி ரெங்களை வாழ விடுங்கள்!
வாழப் பிறந்தவர்கள் – நாங்கள்
புவியை ஆளச் சிறந்தவர்கள்!
– வாழ விடுங்கள்

சாதியும் வேண்டாம், சண்டையும் வேண்டாம்,
மதமும் வேண்டாம், கலவரம் வேண்டாம்!
சாதி எங்களைப் பிரிக்க வேண்டாம்,
மதம் எங்களை மாய்க்க வேண்டாம்!
– வாழ விடுங்கள்

பள்ளியும் வேண்டு முயர் கல்வியும் வேண்டும்
அறிவொளி தீபங்க ளேற்ற வேண்டும்!
அகிலம் அதனொளியில் மிளிர வேண்டும் – அதில்
இல்லாமையும் கல்லாமையும் கருக வேண்டும்.
– வாழ விடுங்கள்

விளையாட்டில் நாங்கள் வெல்ல வேண்டும்!
விஞ்ஞானத்திலு முலகை விஞ்ச வேண்டும்!
ஆயுத வுலகை அழிக்க வேண்டும்,
அன்பா லுலகை வெல்ல வேண்டும்!
– வாழவிடுங்கள்

மக்க ளொற்றுமை தழைக்க வேண்டும்,
மனித நேயம் நிலைக்க வேண்டும்!
நிம்மதி வாழ்க்கை வாழ வேண்டும் – நீங்கள்
நிதமுமிதை மனதில் கொண்டிட வேண்டும்!

– ம.நீலமேகம்
எம்.டி.சி.கலைக்குழு, சென்னை

**நவம்பர் 14 – குழந்தைகள் தினம்**

படிப்பகம்

SEMMALAR RNI NO: 17852/70 LICENCED TO POST WITHOUT PREPAYMENT. LICENCE NO: TN/SR-60/

www.padippakam.com


# VADAMALAYAN HOSPITAL

**40 YEARS OF DEDICATED SERVICE**

**MULTI - SPECIALITY CENTRE**

**ROUND THE CLOCK SERVICE**

**DAY AND NIGHT PHARMACY**

**24 Hrs DIAGNOSTIC CENTRE**

## ACUTE CARE AMBULANCE

## FACILITIES AVAILABLE

- CARDIOLOGY - INTENSIVE CORONARY CARE UNIT
- WHOLE BODY COLOUR DOPPLER SCAN
- NEUROLOGY - DIGITAL E.E.G. & E.M.G.
- GENERAL MEDICINE - INTENSIVE RESPIRATORY CARE UNIT
- GENERAL SURGERY - FULLY EQUIPPED OPERATION THEATRES
- OBSTRERICS & GYNAECOLOGY - HI-TEC LABOUR THEATRE & LAPROSCOPY
- COLO-RECTAL SURGERY - INFRA RED COAGULATOR & SIGMOIDOSCOPY
- PAEDIATRICS - PAEDIATRIC SURGERY - NEO-NATAL CARE
- GASTRO ENTEROLOGY
- DENTISTRY - ORTHODONTIC CENTRE
- E.N.T. AND EYE CARE CENTRE
- COSMETIC AND RECONSTRUCTIVE SURGERY
- DERMATOLOGY - CRYO PROCEDURES
- NEURO SURGERY - ORTHOPAEDIC CENTRE
- TRAUMA CARE CENTRE
- CARDIO - THORACIC SURGERY
- NEPHROLOGY AND UROLOGY
- MEDICAL ONCOLOGY
- IMMUNISATION CENTRE - HEALTH CHECK-UP PROGRAMME

**9-A, Vallabai Road, Chokkikulam, MADURAI - 625 002**

**Tel. : 0452 - 532100, 530657, 532595, 654835**

**Fax : 0452 - 533736**


படிப்பகம்